# தமிழ்

April 2026

## நற்றமிழரின் நாடித்துடிப்பு

## சித்திரை சிறப்பிதழ்



# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

April 2026

சுவடி — 16
ஓலை — 2



## வணக்கம் பல

‘ஒருநாள் பகற்பொழுதுக்குள்ளேயே எதிரியை ஒழித்து விடுவோம்’ எனக் கொக்கரித்த வல்லரசு நாடு, ‘ஆப்பு அசைத்த குரங்கு’ என்ற நிலையில் இருக்கிறது. போர் தொடங்கி ஒரு மாதத்தைக் கடந்த பின்பும், பெரிய அளவில் அசைத்துப் பார்த்துவிட முடியாமல் திணறி வருகிறது. இந்நிலையில், உலக நாடுகளையும் இந்தப் போரில் ஈடுபடுத்த அழைப்பு விடுத்து வருவது, அபாயகரமான போக்காகும். ‘எலியைப் போல் நசுக்கி விடுவோம்’ என்ற பேச்சு மாறி, எப்படியாவது போரை நிறுத்தச் சொல்லுங்கள் எனக் கெஞ்ச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பது ஒருபுறம் என்றால், உலக நாடுகளின் பொருளாதாரத்தை அசைத்து பார்க்கும் நிலையை ஒரு சிறிய நாடு ஏற்படுத்தி வருவதுதான் இப்போதைய உலகின் அச்சமாகும். மேலும் சில மாதங்கள் போர் நீடிக்குமானால், உலகின் பல நாடுகளின் அடிப்படைப் பொருளாதாரமே ஆட்டம் காணும் நிலை வந்து விடும்.

ஒவ்வொரு நாட்டின் உள்விவகாரத்திலும், பெரியண்ணன் போர்வையில் உள்ளே நுழையும் எதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்து அந்நாட்டு மக்கள் இன்னமும் குரல் எழுப்பாமல் இருப்பது வேதனைக்கும் வியப்புக்கும் உரியது. போர் எதன் காரணமாகத் துவக்கப்பட்டாலும், அது வேதனையில்தான் முடியும் என்பது தெரிந்திருந்தும் அதைத் தடுப்பதற்கான முன்னெடுப்புக்களைப் பலமாகச் செய்யாமல், பெயரளவுக்கு மட்டுமே ஐக்கிய நாடுகளின் அமைப்பு செயல்படுவது நகைப்புக்குரியது. உலகம் இன்னமும் மனிதநேயத்தை நாடுகிறது என்றால், அனைத்து நாடுகளிலும் நடக்கும் போர்களுக்கு எதிராக, அந்தந்த நாட்டு மக்கள் உரக்கக் குரல் எழுப்பிப் போராட வேண்டும். மக்கள் இன்னமும் வேடிக்கைப் பார்க்கும் பார்வையாளர்கள் நிலையிலேயே இருப்பார்களானால், வேடிக்கை வினையாகத்தான் முடியும்!

இன்று அந்த நாட்டுக்கு ஏற்படுவது, நாளை நம் நாட்டுக்கு ஏற்படும் என்ற உண்மை விளங்குமானால், போருக்கான எதிர்க் குரல் தானாகவே எழும்! இந்தப் பூமிப்பந்தைச் சின்னாபின்னப் படுத்தும் உரிமை மனிதர்களுக்கு இல்லை! ஒருவேளை இதுவே தொடர்கதையாகுமானால், இயற்கை எழுந்து ஒரு முடிவு கட்டும்! இயற்கைக்கு இயைந்த வாழ்வை மனிதன் கைக்கொள்ள வேண்டும் என்பதையே பிறக்கின்ற சித்திரைத் திருநாளின் உறுதிமொழியாக ஏற்போம். உலகெங்கும் வாழும் தமிழ்ப் பெருமக்களுக்கு, சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துக்களை முன்வைத்தபடி மலர்கின்ற ‘அய் தமிழ்’ இதழை வழமை போல் வரவேற்று வாசியுங்கள்... நேசியுங்கள்...

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

உள்ளே...

கலைந்த தேன் கூடு

குரங்கின் கை பூமாலை

தமிழே தமிழே

காசிப் பிரவேசம்

சேரமான் கனவு

தல வலம்

அறிவோம் தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

இயங்கும் முளை

மருத்துவ தமிழ்

முயற்சி திருவினை




**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
editor@ithamil.com


(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)

நிகழ்வு

# கலைந்த தேன்

## பொறுமைக்கு எல்லை உண்டு

இரானியர்கள் தங்கள் பாரசீக புத்தாண்டான நவ்ரூஸைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில், இரவு நேரத்தில் ஜெருசலேமிலும் இரானிய தலைநகர் தெஹ்ரானிலும் வெடிப்புச் சத்தங்கள் கேட்டுள்ளன. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இரான் எரிவாயு வயல்கள் மீதான தாக்குதல்களை இஸ்ரேல் "தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்" என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். மற்றொருபுறம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், சௌதி அரேபியா மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகள் தங்கள் மீது ஏவுகணை அல்லது டிரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளன.




இரான் தொடர்ந்து முக்கிய உட்கட்டமைப்புகளைத் தாக்கினால், தாங்கள் பதிலடி கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என இதுவரை இல்லாத அளவிலான வலுவான சமிக்ஞையை சௌதி அரேபியா வெளிப்படுத்தியுள்ளது. "எங்களின் பொறுமைக்கு எல்லை உண்டு," என்று கூறி இரானை சௌதி வெளியுறவு அமைச்சர் ஃபைசல் பின் ஃபர்ஹான் எச்சரித்தார். தனது நாடும் மற்ற வளைகுடா அரபு கூட்டாளிகளும், "தேவைப்பட்டால் பயன்படுத்தக்கூடிய முக்கியமான திறன்கள்" தங்களிடம் உள்ளன என்றும் அவர் கூறினார். அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிடமிருந்து வாங்கப்பட்ட சக்திவாய்ந்த போர் விமானங்களை வளைகுடா நாடுகள் கொண்டுள்ளன. ஆனால், அமெரிக்கா—இஸ்ரேலுடன் இவர்கள் இந்த போரில் இணைவது ஆபத்துகளை உள்ளடக்கியது. இரான், வளைகுடா நாடுகள் முழுவதும் தனது தாக்குதல்களை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. மேலும்,அரசாங்க கட்டடங்கள் போன்ற இடங்களையும் இலக்காகக் கொள்ளும் அபாயமும் உள்ளது.மேலும், உள்நாட்டு மக்களின் மனநிலை என்ற முக்கிய காரணியும் உள்ளது. மற்றொரு முஸ்லிம் பெரும்பான்மை நாட்டுக்கு எதிராக இஸ்ரேலுடன் இணைந்து போரிடுவது குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சௌதி மக்கள் பலர் ஆதரிக்காமல் போகலாம். கத்தாரின் ராஸ் லஃபான் எரிவாயு உற்பத்தி தொழிற்பேட்டை மீதான இரானியத் தாக்குதலின் விளைவாக, கத்தாரின் திரவ இயற்கை எரிவாயு (எல்என்ஜி) ஏற்றுமதி திறன் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 17% குறையும் என்று அந்நாட்டின் எரிசக்தி துறை அமைச்சர் கூறியுள்ளார். ராஸ் லஃபான் மீதான இரானின் தாக்குதல்கள் குறிப்பிடத்தக்கவை, ஆனால் அந்நாட்டின் எரிசக்தி அமைச்சரால் குறிப்பிடப்படும் இந்த எண்கள்






மிகப் பெரியவை.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் கத்தாரின் திரவ இயற்கை எரிவாயு (எல்என்ஜி) ஏற்றுமதி திறன் 17% குறையும் என்றும், இதனால் நாட்டிற்கு ஆண்டுக்கு 20 பில்லியன் டாலர் வருவாய் இழப்பு ஏற்படும் என்றும் அவர் கூறுகிறார். இயற்கை எரிவாயுவை 'டிரெயின்' எனப்படும் ஒரு பெரிய தொழில்முறை செயலாக்க அலகு மூலம் மிகக் குறைந்த வெப்பநிலைக்கு குளிர்விப்பதன் மூலம் எல்என்ஜி உருவாக்கப்படுகிறது. ராஸ் லஃபானில் உள்ள 14 டிரெயின்களில் இரண்டை இரானிய தாக்குதல்கள் சேதப்படுத்தியுள்ளதாக அமைச்சர் கூறுகிறார்.பாரசீக வளைகுடாவின் வடக்கே அமைந்துள்ள இரானின் தெற்கு பார்ஸ் எரிவாயு உற்பத்தி வயல் மீது புதன்கிழமை இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாகவே ராஸ் லஃபான் மீது இரான் இந்தத் தாக்குதலை நடத்தியது.

''பாதிப்புகளை சரி செய்ய ஐந்து ஆண்டுகள் அல்ல'' என்று சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட எரிவாயு உள்ளிட்ட எரிபொருள் சந்தை நுண்ணறிவு நிறுவனமான ஹைசைட்ஸ்—ன் தலைமை வணிக அதிகாரி சியாரன் ரோ தெரிவித்தார். "இங்கு ஒரு முழுமையான மறுகட்டமைப்பு தேவை" என்றார் அவர். ஆசிய நாடுகள், குறிப்பாக இந்தியா, ஜப்பான், தென் கொரியா மற்றும் சீனா ஆகியவை கத்தார் நாட்டு எல்என்ஜி—யையே பெரிதும் நம்பியுள்ளன. ஐரோப்பாவில், இத்தாலி மற்றும் பெல்ஜியம் ஏற்கனவே பெரிய வாடிக்கையாளர்களாக உள்ளன. ஆனால் யுக்ரேன் போரைத் தொடர்ந்து ரஷ்ய இறக்குமதிகளைப் புறக்கணித்ததால், ஒட்டுமொத்த ஐரோப்பா கண்டமுமே மத்திய கிழக்கு நாடுகளின் எரிவாயுவை முன்னெப்போதையும் விட அதிகமாகச் சார்ந்து வருகின்றன.








உலகளாவிய இயற்கை எரிவாயு சந்தையில் கத்தார் மிக முக்கியமான நாடு. "இந்த அச்சம் சந்தையில் சில மாதங்களுக்கு அல்லது சில ஆண்டுகளுக்குக் கூட நீடிக்கலாம்," என்கிறார் ரோ. இது எல்என்ஜி இறக்குமதி குறித்த அரசாங்கங்களின் சிந்தனையை மாற்றும். மக்களின் வீடுகளை வெப்பப்படுத்தவும், உணவு சமைக்கவும், ஏன் கப்பல்கள் மற்றும் தொழிற்சாலைகளை இயக்கவும் எல்என்ஜி ஒரு முக்கியமான எரிசக்தி ஆதாரமாகும். இரான் உடனான போரில் அமெரிக்கா "திட்டமிட்டபடியும்", "இலக்கின் மீதும்" சரியாக இருப்பதாக தெரிவித்த அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத், இந்த மோதல் எப்போது முடிவுக்கு




வரும் என்பதற்கு துல்லியமான கால வரம்பை வழங்கவில்லை. “ஒரு குறிப்பிட்ட கால வரம்பை நிர்ணயிக்க நாங்கள் விரும்பவில்லை.” எனத் தெரிவித்தார். அமெரிக்கா தற்போது 7,000 இரானிய இலக்குகளைத் தாக்கியதாகக் கூறும் அவர், “படைகளுக்கு தாங்கள் எதை தாக்குகிறோம், ஏன் தாக்குகிறோம் என்பது பற்றிய தெளிவான உணர்வு இருக்கிறது.” என்றார்.

பீட் ஹெக்செத் கூற்றுப்படி அமெரிக்கப் படைகளால் மட்டுமே 7,000 இரானிய இலக்குகள் தாக்கப்பட்ட போதிலும், இரானிய ஏவுகணைகளும் டிரோன்களும் இன்னும் அண்டை நாடுகளைத் தாக்கி வருகின்றன. குறிப்பிடத்தக்க விமானப்படை மற்றும் கடற்படை இல்லாத நிலையில், இந்த ஏவுகணைகளையும் டிரோன்களையும் நம்பி தன்னால் இயன்ற வழிகளில் ஆட்சியை பாதுகாக்க இரான் முயல்கிறது. இரானின் நிலப்பரப்பு மற்றும் பல தசாப்த கால திட்டமிடல் காரணமாக, இந்த ஆயுதங்களின் இருப்பு பூமிக்கு அடியில் ஆழமாக அல்லது மலைகளின் பக்கவாட்டில் ஆழமாகப் புதைக்கப்பட்டுள்ளன. இந்த இலக்குகளுக்கு ஆயுதங்களைக் கொண்டு செல்வது கடினம், எனவேதான் இந்த வாரம் பயன்படுத்தப்பட்ட 5,000 பவுண்ட் (2,270 கிலோ) எடை கொண்ட ஜிபியு—72 மேம்பட்ட ஆழமாக ஊடுருவி செல்லும் குண்டு உட்பட பல்வேறு வகையான பங்கர்—பஸ்டர் குண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன.



அமெரிக்க பாதுகாப்புத் துறை செயலாளர் பீட் ஹெக்செத் கூறுகையில், “இரானின் முழு பாலிஸ்டிக் ஏவுகணை உற்பத்தித் திறன், அந்த ஏவுகணைகளின் ஒவ்வொரு பாகத்தையும் உருவாக்கும் ஒவ்வொரு நிறுவனமும், செயல்பாட்டு ரீதியாக வீழ்த்தப்பட்டு, அழிக்கப்பட்டுவிட்டன. இரான் முழுவதும் உள்ள கட்டடங்கள், வளாகங்கள் மற்றும் தொழிற்சாலை உற்பத்திக் கூடங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன,” என்றார். இந்த ஏவுகணைகளை உற்பத்தி செய்யும் வழிமுறைகள் நிறுத்தப்பட்டாலும், எஞ்சியிருப்பவை இன்னும் ஏவப்படுவது தெளிவாகத் தெரிகிறது. எனவே அமெரிக்காவும் இஸ்ரேலும் உளவுத் தகவல்கள் மற்றும் விமானங்கள் மூலம், நடமாடும் ஏவுகணை ஏவுதளங்களை “தேடிக் கண்டுபிடித்து அழிப்பதிலும் கவனம் செலுத்தும்.

1991—ஆம் ஆண்டு இராக்கிற்கு எதிரான வளைகுடா போரில், இஸ்ரேலை அச்சுறுத்திக் கொண்டிருந்த சதாம் உசைனின் ஸ்கட் ஏவுகணைகளை அழிக்கும் பணியில் அமெரிக்க விமானப்படையின் எஃப்—15இ ஸ்டிரைக் ஈகிள்ஸ் மற்றும் எஃப்—16 விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன. இந்தப் பணிகள் ‘ஸ்கட் ஹண்டிங்’ என்று அழைக்கப்பட்டன. அதே உத்திகள் இன்றும் இரானில் பயன்படுத்தப்படுகின்றன.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்தப்பட்ட தாக்குதல்

2021—இல் முதல் முறையாக பரிசோதிக்கப்பட்ட ஜிபியு—72 குண்டு பெரிய கூட்டு நேரடி தாக்குதல் ஆயுதமாகும். இவை இலக்கை நோக்கி செயற்கைக்கோள் மற்றும் இனெர்ஷியல் (மிஸீமீக்ஷீமீ வீணீறீ) நேவிகேஷன் அமைப்பால் வழிநடத்தப்படுகிறது. இந்த ஜிபியு—72 வகை குண்டு பரிசோதனை செய்யப்பட்டபோது, “கடினமாக ஆழத்தில் புதைக்கப்பட்ட இலக்குகள் சார்ந்த சவால்கள் மற்றும் ஃபைட்டர் மற்றும் பாம்பர் விமானங்களுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.” என அமெரிக்க விமானப்படை தெரிவித்திருந்தது.ஜிபியு—72 வகை குண்டுகள் மிகப்பெரியதாக இருந்தாலும் எஃப்—15இ ஸ்டிரைக் ஈகிள் போர் விமானங்கள் மூலம் எடுத்துச் செல்ல முடியும். இது ராணுவ திட்டமிடுபவர்களுக்கு, பி1—பி வகை

விமானங்களைச் சார்ந்திருக்காமல் பணியில் ஈடுபடுத்துவதில் பெரிய வசதியை வழங்குகிறது.

தமது இரு பதவிக்காலத்திலும், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அமெரிக்காவின் நேட்டோ கூட்டாளிகளை விமர்சிப்பதற்கோ ஏன் தாக்குவதற்கோ கூட தயங்கியதில்லை. ஆனால், ஹோர்மூஸ் நீரிணையைப் பாதுகாப்பதில் தோல்வியடைவது "நேட்டோவின் எதிர்காலத்திற்கு மிகவும் மோசமானதாக இருக்கும்" என்ற அவரது சமீபத்திய கருத்து, அந்த கூட்டணியின் நோக்கம் குறித்து அவர் கொண்டுள்ள புரிதல் ஏற்கெனவே பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. "நேட்டோ ஒரு... தற்காப்புக் கூட்டணியாக உருவாக்கப்பட்டது," என்று பிரிட்டன் ராணுவத்தின் முன்னாள் தலைமை தளபதி ஜெனரல் சர் நிக் கார்ட்டர் திங்களன்று பிபிசியிடம் தெரிவித்தார்."ஒரு கூட்டாளி நாடு தனது விருப்பப்படி ஒரு போருக்குச் சென்றுவிட்டு, மற்ற அனைவரும் அதைப் பின்தொடர வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் வகையில் இந்தக் கூட்டணி வடிவமைக்கப்படவில்லை. நாம் சேர விரும்பிய நேட்டோ இதுதானா என்பதில் எனக்கு உறுதியாகத் தெரியவில்லை" என்று அவர் கூறினார். இரண்டு மாதங்களுக்கு முன்புதான் நேட்டோ உறுப்பினரான ஒரு நாட்டின் இறையாண்மைக்கு உட்பட்ட கிரீன்லாந்து பகுதிக்கு உரிமை கோரிய ஓர் அதிபரிடமிருந்து வந்துள்ள இந்த சமீபத்திய கருத்துக்களில் ஒரு சிறிய முரண் இருக்கிறது.

போரில் டிரம்புக்கு உதவ அமெரிக்க கூட்டாளி நாடுகள் தயக்கம் ஏன்?

சில பதில்கள் மிகவும் நேரடியாக இருந்ததற்கு இது ஒருவேளை காரணமாக இருக்கலாம். ஜெர்மனியில், அரசு செய்தித் தொடர்பாளர் ஒருவர், இரான் உடனான போருக்கும் "நேட்டோவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை" என்றார். அதே நேரத்தில் பாதுகாப்பு அமைச்சர் போரிஸ் பிஸ்டோரியஸ், ஐரோப்பாவின் கடற்படைகள் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற கருத்தை ஏளனம் செய்வது போலத் தெரிந்தது. "வலிமைமிக்க அமெரிக்கக் கடற்படையால் செய்ய முடியாத எதை ஒரு சில ஐரோப்பியப் போர்க்கப்பல்களிடமிருந்து டிரம்ப் எதிர்பார்க்கிறார்? இது எங்களது போர் அல்ல. இதை நாங்கள் தொடங்கவில்லை". என்று அவர் கேட்டார். ஆனால், இவை எதுவும் வளைகுடா நெருக்கடிக்கு ஒரு தீர்வு காண வேண்டிய அவசரமான மற்றும் வளர்ந்து வரும் தேவையை மறைக்கக்கூடாது.

இந்தியா மற்றும் சீனா போன்ற நட்பு நாடுகளுக்குச் செல்லும் ஒரு சில கப்பல்களைத் தவிர, ஹோர்மூஸ் நீரிணையை இரான் திறம்பட தடுத்து நிறுத்தியுள்ளது. இது மேற்கத்திய நாடுகளின் அரசுகளை ஒரு தீர்வைத் தேட வைத்துள்ளது. இது டிரம்ப் போருக்குச் செல்ல எடுத்த முடிவால் தூண்டப்பட்ட நெருக்கடியாக இருக்கலாம், ஆனால் உலகப் பொருளாதாரத்தின் மீதான பாதிப்புகள் மோசமடைவதற்கு முன்பு இதை விரைவாகச் சரிசெய்ய வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் இதற்கு விரைவான தீர்வு இல்லை என்பது ஏற்கெனவே தெளிவாகிவிட்டது.

பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர், அமெரிக்கா, ஐரோப்பிய மற்றும் வளைகுடா கூட்டாளிகளுடன் ஒரு "நடைமுறைப்படுத்தக்கூடிய திட்டத்தை" உருவாக்குவதற்கான உரையாடல்கள் நடந்து வருகின்றன என்றும், ஆனால் நாம் இன்னும் "முடிவெடுக்கும் கட்டத்தை எட்டவில்லை" என்றும் கூறினார். தானியங்கி கண்ணி வெடி கண்டுபிடிக்கும் அமைப்புகள் ஏற்கெனவே அந்தப் பகுதியில் இருப்பதாக பிரதமர் கியர் ஸ்டார்மர் குறிப்பிட்டார். கண்ணிவெடி எதிர்ப்பு நடவடிக்கைக் கப்பலான ஹெச்எம்எஸ் மிடில்டன் பெரிய அளவிலான பராமரிப்புக்காக பிரிட்டன் திரும்பிய நிலையில், பல தசாப்தங்களில் முதல் முறையாக அந்தப் பகுதியில் பிரிட்டிஷ் கண்ணிவெடி அகற்றும் கப்பல் எதுவும் இல்லை.




அதற்குப் பதிலாக, ராயல் நேவி (பிரிட்டன் கடற்படை) புதிதாக உருவாக்கப்பட்ட டிரோன்களை வழங்கத் திட்டமிட்டுள்ளது. இவை ஊழியர்களை ஆபத்தில் சிக்க வைக்காமல் கண்ணிவெடிகளை கண்டறிந்து செயலிழக்கச் செய்யும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன. ஒரு காலத்தில் கிட்டத்தட்ட அனைத்து கடற்படைகளின் முக்கியப் பணியாக இருந்த கண்ணிவெடிகளை அகற்றுவது, நீண்ட காலத்திற்கு முன்பே முன்னுரிமைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

ராயல் நேவி முன்னாள் கமாண்டர் டாம் ஷார்ப், சமீபத்திய பிரிட்டிஷ் தொழில்நுட்பங்கள் இன்னும் போர்க்களத்தில் சோதிக்கப்படவில்லை என்றார். "அது வேலை செய்கிறதா இல்லையா என்பது அடுத்த சில வாரங்களில் நமக்குத் தெரிந்துவிடும்," என்று அவர் கூறினார். மேற்கத்திய நாடுகள் கடைசியாக ஒரு பெரிய கடல்வழி கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கையை மேற்கொண்டது 1991—இல் என்று ஜெனரல் கார்ட்டர் கூறினார். முதல் வளைகுடா போரின்போது இராக் குவைத் கடற்கரை அருகே கண்ணிவெடிகளை வைத்திருந்தது."அந்த கண்ணிவெடிகளை அகற்ற எங்களுக்கு ஐம்பத்தொரு நாட்கள் ஆனது. எந்தவொரு கடற்படையும் இதற்குத் தேவையான அளவில்

முதலீடு செய்யவில்லை, குறிப்பாக அமெரிக்கர்கள் இதில் மிகவும் பின்தங்கியுள்ளனர்". அமெரிக்கக் கடற்படையின் சொந்த அவெஞ்சர்—கிளாஸ் சிறப்பு கண்ணிவெடி அகற்றும் கப்பல்கள் அனைத்தும் சேவையிலிருந்து விலக்கப்படுகின்றன. இவற்றுக்குப் பதிலாக, பல்வேறு ஆளில்லா அமைப்புகளைப் பயன்படுத்தும் இண்டிபெண்டன்ஸ்—கிளாஸ் கப்பல்களைப் பயன்படுத்தப்படுகின்றன

ஆனால் இது கண்ணிவெடிகளை அகற்றுவது பற்றியது மட்டுமல்ல. இரான் புரட்சிகர காவல் படை ஆயுதம் ஏந்திய வேகப்படகுகள், கடற்படை "தற்கொலை" டிரோன்கள் மற்றும் கடற்கரை ஏவுகணைகள் மூலம் கப்பல் போக்குவரத்தைத் தடுக்கும் திறன் கொண்டது. இரான் செய்தி நிறுவனமான 'ஃபார்ஸ்' வெளியிட்ட சமீபத்திய புகைப்படங்கள், நிலத்தடி சுரங்கங்களில் அதிக எண்ணிக்கையிலான படகுகள் மற்றும் டிரோன்கள் சேமித்து வைக்கப்பட்டிருப்பதைக் காட்டின. இது இரான் நீண்டகாலமாக இத்தகைய ஒரு தருணத்திற்காகத் தயாராகி வருவதைக் காட்டுகிறது.

ஹோர்மூஸ் நீரிணை திறப்பது சிறிய வேலை எனக் கூறும் டிரம்ப், அதை செய்வதற்கு இரான் கடற்கரைகளில் தாக்குதல் நடத்த வேண்டியிருக்கும் எனக் கூறினார். "கடற்கரையில் இருக்கும் சில மோசமான நபர்களைத் தட்டி வைப்பவர்களை நான் தேடிக்கொண்டிருக்கிறேன்," என்று அவர் கூறினார். அமெரிக்கா ஏற்கெனவே இரான் துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை வைக்கும் படகுகளை இலக்கு வைத்துள்ளது. ஆனால் அமெரிக்காவின் கூட்டாளிகள் பலர் இதைப் பின்பற்றுவதற்கு குறிப்பாக இது தரைப்படையை ஈடுபடுத்துவதை உள்ளடக்கியதாக இருந்தால் தயாராக இருப்பார்களா என்பது கடினம். இவ்வளவு சாத்தியமான ஆபத்துகள் நிறைந்த சூழலில், நாடுகள் இதில் ஈடுபடத் தயங்குவதில் ஆச்சரியமில்லை. அதற்குப் பதிலாக பிரிட்டன் அரசு கூறுவது போல, ஹோர்மூஸ் நீரிணையை திறப்பதற்கான உறுதியான வழியாக 'பதற்றத்தைக் குறைப்பதை' அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் இன்னும் சில வாரங்களுக்கு இந்த நடவடிக்கை நீடிக்கக்கூடும் என்று கூறி வருவதால், அது உடனடியாக நடப்பதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. இதற்கிடையில், இந்த முக்கியமான நீர்வழிப்பாதை வழியாக வணிகக் கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்க கூட்டாளிகளைச் சம்மதிக்க வைக்க முடியுமா? "ஹோர்மூஸ் நீரிணையைப் பாதுகாப்பதில் ஜெர்மனி தனது ராணுவத்துடன் பங்கேற்காது," என்று பிஸ்டோரியஸ் திங்களன்று கூறினார். ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைத் தலைவர் காஜா கல்லாஸ் கூறுகையில், மத்திய கிழக்கில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடற்படை நடவடிக்கைகளை விரிவுபடுத்த "தெளிவான விருப்பம்" உள்ளது என்று கூறினார். ஆனால் செங்கடலில் தற்போதுள்ள கடற்படைப் பணியை விரிவுபடுத்த ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு அமைச்சர்கள் மறுத்துவிட்டனர். "இது ஐரோப்பாவின் போர் அல்ல," என்று அவர் மேலும் கூறினார். ஏமனில் இரான் ஆதரவு ஹூத்தி கிளர்ச்சியாளர்களால் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைச் சமாளிக்க 2024—இல் 'ஆப்பரேஷன் அஸ்பைடெஸ்' தொடங்கப்பட்டது. ஆனால் இது வெறும் மூன்று போர்க்கப்பல்களை மட்டுமே கொண்ட மிகச்சிறிய முயற்சியாகும்.



ஜெர்மனியின் வெளியுறவு அமைச்சர் ஜோஹான் வேடேபுல், புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விவாதிப்பதற்கு முன், "இரான் மீதான தங்கள் ராணுவ இலக்குகளை எப்போது அடைவோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள்" என்பதை இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார். முக்கிய ஐரோப்பிய கூட்டாளிகளில், பிரான்ஸ் அதிபர் மக்ரோங் இதில் ஈடுபட அதிக ஆர்வம் காட்டி வருகிறார். கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும், கடல்வழிப் போக்குவரத்தின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும் ஒரு கூட்டணியை அமைக்க முயற்சிப்பதாக அவர் ஒரு வாரத்திற்கு முன்பு கூறினார். ஆனால் மோதலின் "மிகவும் தீவிரமான கட்டம்" முடிந்த பின்னரே இது சாத்தியமாகும் என்று அவர் கூறினார். சில நாட்களுக்குப் பிறகு பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் கேத்தரின் வௌட்ரின், ஹோர்மூஸ் நீரிணைக்கு கப்பல்களை அனுப்பும் உடனடித் திட்டங்கள் எதுவும் இல்லை என்றார்.

ஒரு பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பது ஆப்ரேஷன் அஸ்பைடெஸை விட மிகவும் சிக்கலானதாக இருக்கும் என்று ஷார்ப் கூறினார். ஏனெனில் அச்சுறுத்தல்கள் வான்வழி, மேற்பரப்பு மற்றும் நீருக்கடியில் என மூன்று திசைகளிலிருந்தும் வருகின்றன. "ஹூத்திகளைப் போல வான்வழி அச்சுறுத்தல் மட்டுமே இங்கில்லை. இரான் விஷயத்தில் மூன்று அச்சுறுத்தல்களும் உள்ளன, அவை ஏவப்படுவதற்கு முன்பே நீங்கள் அவற்றைச் சுட வேண்டும். அது எப்போதும் சாத்தியமில்லை," என்று அவர் கூறினார். தற்போது, டிரம்ப்பின் சற்றே அதிர்ச்சியடைந்த கூட்டாளிகள் "இரானில் ஈடுபாடு" என்று பெயரிடப்பட்ட கதவுக்கு வெளியே தயக்கத்துடன் நின்று ஒருவரையொருவர் பார்த்துக்

கொள்கிறார்கள். ஆனால் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஒரு தீர்வாகாது என்பதையும் அவர்கள் உணர்ந்துள்ளனர். இந்தத் தீர்வு "முடிந்தவரை பல கூட்டாளிகளை" உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் கூறினார். ஆனால் ஆபத்தான பணியில் ஈடுபடுவதற்கு முன்பு பிரிட்டன் ராணுவ வீரர்களுக்கு முக்கியமான உறுதிமொழிகள் தேவைப்படுகின்றன. குறைந்தபட்சம், ஒரு சட்டபூர்வமான அடிப்படையிலும், சரியான முறையில் சிந்தித்து வகுக்கப்பட்ட திட்டத்துடன்தான் செய்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள அவர்களுக்கு உரிமை உள்ளது. தற்போதைய நிலையில், அத்தகைய ஒரு திட்டம் நடைமுறையில் இல்லை.

ஹோர்முஸ் நீரிணை வழியாக கப்பல்கள் பாதுகாப்பாக பயணிப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு பங்களிக்கத் தயார் என்று பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ஜப்பான், கனடா ஆகிய 7 நாடுகள் தெரிவித்துள்ளன. இதுதொடர்பாக அந்த நாடுகளின் தலைவர்கள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வளைகுடா நாடுகளில் உள்ள எண்ணெய் மற்றும் எரிவாயு மையங்கள், ஆயுதங்கள் எதுவும் வைத்திராத சரக்குக் கப்பல்கள் மீது ஈரானின் தாக்குதல், ஹோர்முஸ் நீரிணையை அந்நாடு மூடியது ஆகியவற்றுக்குக் கண்டனம் தெரிவிக்கிறோம். சரக்குக் கப்பல்களின் பயணத்தைத் தடுக்க ஹோர்முஸ் நீரிணையில் கண்ணிவெடி வைத்தல், ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் நடத்துதல் மற்றும் பிற முயற்சிகளை ஈரான் உடனடியாகக் கைவிட்டு, ஐ.நா. பாதுகாப்பு தீர்மானம் 2,817—ஐ அந்த நாடு பின்பற்ற வேண்டும்.




சுதந்திரமான கப்பல் போக்குவரத்து என்பது சர்வதேச சட்டத்தின் அடிப்படைக் கொள்கையாகும். ஈரானின் நடவடிக்கைகள் ஏற்படுத்தும் விளைவுகளால், உலகில் உள்ள அனைத்துப் பகுதி மக்கள், குறிப்பாக மிகவும் பின்தங்கிய மக்கள் பாதிக்கப்படுவர். சர்வதேச கப்பல் போக்குவரத்து மற்றும் உலகளாவிய எரிசக்தி விநியோக முறைக்கு இடர்ப்பாடுகளை ஏற்படுத்துவது சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும். எனவே, விரிவான உடன்படிக்கை மூலம் எண்ணெய் மற்றும் எரிவாயு மையங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு மீதான தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

ஹோர்முஸ் நீரிணை வழியாகக் கப்பல்கள் பாதுகாப்பாக பயணிப்பதை உறுதி செய்வதற்கான




நடவடிக்கைகளுக்கு பங்களிக்க நாங்கள் தயாராக உள்ளோம். எரிசக்தி உற்பத்தியை அதிகரிக்க, அவற்றை உற்பத்தி செய்யும் சில நாடுகளுடன் இணைந்து பணியாற்றுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் எரிசக்தி சந்தைகளை நிலையானதாக்க நடவடிக்கைகள் எடுப்போம். அத்துடன் எண்ணெய் மற்றும் எரிசக்தி கிடைப்பதில் இடர்ப்பாடு ஏற்பட்டு மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு ஐ.நா. மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் மூலம் உதவி செய்வோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டறிக்கை வெளியிட்ட நாடுகளில் ஜப்பானை தவிர பிற நாடுகள், அமெரிக்கா இடம்பெற்றுள்ள நேட்டோ ராணுவக் கூட்டமைப்பில் உள்ளன.

ஹோர்முஸ் வழியாகப் பயணிக்க ஈரான் வரி?: பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடாவுக்கு இடையே உள்ள ஹோர்மூஸ் நீரிணை வழியாக உலக அளவில் சுமார் 20 சதவீத கச்சா எண்ணெய், திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி)

கொண்டு வரப்படுகின்றன. அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடனான போரால், அந்தப் பாதையை ஈரான் மூடியது. இதனால் கச்சா எண்ணெய் மற்றும் எல்என்ஜி கிடைப்பதில் இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது. கப்பல் போக்குவரத்து, எரிசக்தி போக்குவரத்து, உணவு விநியோகம் ஆகியவற்றுக்காக ஹோர்முஸ் நீரிணையைப் பல நாடுகள் பயன்படுத்தும் நிலையில், அந்த நீரிணையைப் பயன்படுத்துவதற்கு அந்நாடுகளிடம் இருந்து சுங்கக் கட்டணம் மற்றும் வரி வசூலிக்க ஈரான் திட்டமிட்டு வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.




TRUMP SAYS IRAN INFORMALLY OFFERED TO MAKE HIM SUPREME LEADER, AND HE DECLINED, CALLING THE NOTION "NO, THANK YOU"

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடனான போரின் ஒரு பகுதியாக, வளைகுடா நாடுகள் முழுவதும் இரான் தொடர்ந்து ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருகிறது.இதுவரை, கத்தார் மற்றும் பிற வளைகுடா நாடுகள் இரானால் பலமுறை இலக்கு வைக்கப்பட்ட பின்னரும், அதற்குப் பதிலடி கொடுக்க வேண்டாம் என்றே வளைகுடா நாடுகள் முடிவு செய்துள்ளன. அந்த நாடுகள் ஏன் தாக்குதல்களைத் தவிர்க்கின்றன மேலும் எது அவர்களை நடவடிக்கை எடுக்கத் தூண்டக்கூடும்?

பிப்ரவரி 28 அன்று அமெரிக்காவும் இஸ்ரேலும் இரானுக்கு எதிராகத் தங்களது கூட்டு ராணுவ நடவடிக்கையை தொடங்கியபோது, இரான் உடனடியாக இஸ்ரேலுக்கு எதிராக மட்டுமல்லாமல், அமெரிக்காவுடன் கூட்டணி வைத்துள்ள வளைகுடா நாடுகளுக்கு எதிராகவும் தாக்குதல்களைத் தொடுத்தது.பஹ்ரைன், குவைத், சௌதி அரேபியா, கத்தார், ஓமன் மற்றும் குறிப்பாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய அனைத்து நாடுகளும் இலக்கு வைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்களைத் தாக்குவதுடன், விமான நிலையங்கள், ஹோட்டல்கள், குடியிருப்புப் பகுதிகள் மற்றும் குறிப்பாக எரிசக்தி தளங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்புகளையும் இரான் தாக்கியுள்ளதாக வளைகுடா அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இருப்பினும், இதுவரை வளைகுடா நாடுகள் இரானுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தவும், இந்தப் போரில் நேரடியாக ஈடுபடவும் விரும்பவில்லை.




வளைகுடா நாடுகள் ஏன் இரானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை

“அவர்களின் பார்வையில், இது அவர்களுடைய போர் அல்ல. பதிலடி கொடுப்பது அவர்களைப் பாதிப்புக்குள்ளாகக் கூடிய பார்வையாளர்களிலிருந்து பெரிய இலக்குகளாக மாற்றும் அபாயம் உள்ளது. ஏனெனில், அவர்களுக்குப் பெறுவதை விட இழப்பதற்குத்தான் அதிகம் உள்ளது” என்று கூறுகிறார் சர்வதேச கொள்கை மையத்தின் மூத்த ஆய்வாளர் சினா டூசி. “பலவீனமான நிலை, உத்தி கணக்கீடு மற்றும் குறைந்தபட்ச பலன் ஆகியவற்றின் கலவையே” இந்த முடிவுக்கான காரணம் என்று டூசி கூறுகிறார்.

வளைகுடா நாடுகளின் பொருளாதாரங்கள் எரிசக்தி உள்கட்டமைப்பு, கப்பல் போக்குவரத்து மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையைச் சார்ந்துள்ளன என்றும், “இவை அனைத்தையும் தன்னால் சீர்குலைக்க முடியும் என்பதை இரான் காட்டியுள்ளது”என்றும் டூசி குறிப்பிடுகிறார். குறிப்பாக, உலகப் பொருளாதாரத்திற்கு முக்கியமான நீர்வழிகளான பாரசீக வளைகுடா மற்றும் ஹோர்மூஸ் நீரிணையை இரான் தனக்கு சாதகமானதாக பயன்படுத்தி வருகிறது என்று அவர் கூறுகிறார்.

இரானை தாக்க தயங்கும் வளைகுடா நாடுகளை தூண்டக்கூடிய 2 முக்கிய விஷயங்கள் எது?

இருப்பினும், டிரெண்ட்ஸ் ரிசர்ச் & அட்வைசரி அமைப்பின் மூத்த நிர்வாக இயக்குநரும், டிரம்பின் முதல் நிர்வாகத்தில் பாதுகாப்புத்துறை அதிகாரியுமான பிலால் சாப், ‘‘வளைகுடா நாடுகள் இரானைத் தொடர்ந்து தாக்காமல் இருந்தால், ‘எந்த விளைவுகளையும் சந்திக்காமல் கடுமையான சேதத்தை ஏற்படுத்தலாம்‘ என்ற செய்தியை அவை இரானுக்கு அளிக்கின்றன” என்கிறார். “பதிலடி கொடுப்பதன் நோக்கம், குறுகிய காலத்தில் இரானைத் தனது தாக்குதல்களை நிறுத்த கட்டாயப்படுத்துவதாகவும், நீண்ட காலத்தில் எதிர்கால இரானிய தாக்குதல்களுக்கு எதிராக ஒரு தடுப்பு நடவடிக்கையை உருவாக்குவதாகவும் இருக்கும்.”மேலும், வளைகுடா நாடுகளின் எந்தவொரு தாக்குதலும் போரில் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்துமா அல்லது உத்தி ரீதியாக புத்திசாலித்தனமாக இருக்குமா என்பது இன்னும் தெளிவாகத் தெரியாததால், இதில் அபாயங்கள் “கணிசமானதாக” இருக்கும் என்றும் அவர்




கூறுகிறார். இஸ்ரேலுடனும் அதன் பிராந்திய நோக்கங்களுடனும் தங்களை இணைத்துக் கொள்ள வளைகுடா நாடுகளிடையே தயக்கம் நிலவுகிறது என்று லண்டன் கிங்ஸ் கல்லூரியின் பாதுகாப்பு ஆய்வுகள் துறையின் சர்வதேச பாதுகாப்பு விரிவுரையாளர் ராப் கெய்ஸ்ட் பின்ஃபோல்ட் கூறுகிறார். மேலும், "இஸ்ரேல்தான் அமெரிக்காவை இந்தப் போருக்குள் இழுத்துவிட்டதாக ஒரு உணர்வு நிலவுகிறது," என்று அவர் குறிப்பிடுகிறார். '2003—ஆம் ஆண்டு நிகழ்ந்த சம்பவங்களின் நினைவுகள்'

இராக் உடனான அமெரிக்கா தலைமையிலான போரின் தாக்கம் இன்னும் பல வளைகுடா தலைவர்களின் மனதில் பெரிய அளவில் நிழலாடுகிறது என்று பின்ஃபோல்ட் கூறுகிறார்.2003—இல், அமெரிக்கா இராக் மீது படையெடுத்து சதாம் உசைனின் அரசாங்கத்தை விரைவாக வீழ்த்தியது. ஆனால் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அதிகார வெற்றிடம், இராக்கிலும் அதன் அண்டை பிராந்தியங்களிலும் கிளர்ச்சி, வன்முறை மற்றும் பல ஆண்டுகால நிலையற்ற தன்மைக்கு வழிவகுத்தது. "2003ம் ஆண்டு நிகழ்ந்த சம்பவங்களின் நினைவுகள் நிழலாடுகின்றன" என்கிறார் பின்ஃபோல்ட்."இது தங்கள் வீட்டு வாசலிலேயே குழப்பம் மற்றும் நிலையற்ற தன்மைக்கான கதவுகளைத் திறந்துவிடும் என்றும், இரான் தனது செல்வாக்கை விரிவுபடுத்த அனுமதிக்கும் என்றும் அவர்கள் அஞ்சினர். அவர்களின் பயம் பெரும்பாலும் உண்மையானது என நிரூபிக்கப்பட்டது".

அமெரிக்கா இப்போது "தெளிவான குறிக்கோள்கள் அல்லது போருக்குப் பிந்தைய காலத்திற்கான பாதை இல்லாத ஒரு முடிவற்ற போரை " நடத்துவதாகவும், அதன் விளைவாக ஏற்படும் "குழப்பங்களுடன் பிராந்தியம் சிக்கிக்கொள்ளும்" என்றும் வளைகுடா நாடுகள் இப்போது அஞ்சுவதாக பின்ஃபோல்ட் கூறுகிறார். அமெரிக்காவும் இஸ்ரேலும் இந்தப் போரைத் தொடங்கியதில் வளைகுடா நாடுகளில் அதிருப்தி இருந்தாலும், அவர்கள் இன்னும் அமெரிக்க ராணுவப் பாதுகாப்பையே பெரிதும் நம்பியிருக்கிறார்கள். அமெரிக்க ராணுவத் தளங்கள் மற்றும் படைகளுக்கு இடமளிப்பதுடன், பல வளைகுடா நாடுகள் உளவுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றன, மேலும், அமெரிக்க வான் பாதுகாப்பு அமைப்புகளைச் சார்ந்துள்ளன.

இரானில் இருந்து வந்த பெரும்பாலான ஏவுகணைத் தாக்குதல்களை இந்த வான் பாதுகாப்பு அமைப்புகள் இடைமறித்துள்ளன என வளைகுடா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்."அரசியல் மட்டத்தில் அவர்கள் (வளைகுடா நாடுகள்) அமெரிக்காவைக் கேள்விக்குட்படுத்தினாலும், செயல்பாட்டு மற்றும் ராணுவ மட்டத்தில் அந்த உறவு கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, உண்மையில் அந்தச் சோதனையில் மிகவும் சிறப்பாகவே தேர்ச்சி பெற்றுள்ளது" என்கிறார் பின்ஃபோல்ட். கடந்த மாதம் தாக்குதல்களைத் தொடங்கியதில் இருந்து, இரானின் அணு ஆயுதத் தயாரிப்புத் திறனை அழிப்பது முதல் ஆட்சி மாற்றம் வரை தனது ராணுவ நடவடிக்கைகளுக்கான பல்வேறு நோக்கங்களை அமெரிக்கா கோடிட்டுக் காட்டியுள்ளது. இருப்பினும், இந்தத் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவர ராஜீய நடவடிக்கைகள் மட்டுமே ஒரே வழி என்று வளைகுடா தலைவர்கள் கருதுவதாக பின்ஃபோல்ட் கூறுகிறார்.




இரான் அனைத்து வளைகுடா நாடுகளையும் "ஒரே தீவிரத்துடன்" குறிவைக்கவில்லை என்றும், இது அந்த நாடுகளுடன் இரான் கொண்டுள்ள மாறுபட்ட உறவுகளைப் பிரதிபலிக்கிறது என்றும் பின்ஃபோல்ட் கூறுகிறார்.இந்தப் போரின் போது ஐக்கிய அரபு எமிரேட்ஸும் அதிகப்படியான தாக்குதலுக்கு உள்ளான நாடுகளில் ஒன்றாக உள்ளது. 2020—ஆம் ஆண்டில், அதுவும் பஹ்ரைனும் இஸ்ரேலுடன் தங்களது உறவுகளைச் சீரமைத்தன. இதற்கு நேர்மாறாக, இரானுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாகப் பேச்சுவார்த்தையாளராகப் பணியாற்றி வரும் ஓமன், இரானால் மிகக் குறைந்த அளவே குறிவைக்கப்பட்டுள்ளது. "புதிய இரானிய தலைவரை (மொஜ்தபா காமனெயி) வாழ்த்திய ஒரே வளைகுடா நாடு ஓமன் மட்டுமே" என்று




கூறிய பின்ஃபோல்ட் "வளைகுடா நாடுகள் இதை விரும்பவில்லை" என்றும் குறிப்பிடுகிறார்.

துபை பொதுக் கொள்கை ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் ஜெனரல் முகமது பஹாரூன், "இரான் வளைகுடா நாடுகளைத் தனக்கு எதிரான ஒரு விரிவடைந்து வரும் கூட்டணியை நோக்கித் தள்ளுகிறது" என்றார். மேலும், "வளைகுடா நாடுகளைத் தாக்குவதன் மூலம், இரான் அவர்களை எதிரிகளாக மாற்றி, யாரும் விரும்பாத ஒரு விரிவான போருக்கான அபாயத்தை ஏற்படுத்துகிறது," என்று அவர் கூறுகிறார்.

எது பதிலடியைத் தூண்டக்கூடும் ?

வளைகுடா நாடுகள் இப்போது வரை பதிலடி கொடுக்காமல் ஒதுங்கியிருந்தாலும், எரிசக்தி ஏற்றுமதியைச் சீர்குலைக்கும் தாக்குதல்கள் தொடர்ந்தாலோ அல்லது தீவிரமடைந்தாலோ இந்த நிலை மாறக்கூடும் என்று பிரிட்டன் சிந்தனைக் குழுவான ரூசியின் மூத்த ஆய்வாளர் எச்.ஏ. ஹெல்லியர் கூறுகிறார். மேலும், எரிசக்தி நிலையங்கள் மீது நடத்தப்படும் ஒரு பெரிய அளவிலான தாக்குதல், அவர்களின் சிந்தனையை மாற்றக்கூடிய ஒரு வாய்ப்பாக அமையும் என்று அவர் தெரிவித்தார். இரானின் ஆதரவு பெற்ற ஆயுதக்குழுக்கள் வளைகுடா நாடுகளைக் குறிவைத்தால், அவர்களின் அணுகுமுறையில் மற்றொரு மாற்றம் ஏற்படக்கூடும்.

"ஹூத்தி கிளர்ச்சியாளர்களால் அவர்கள் தாக்கப்பட்டால், அது ஒரு புதிய போர்க்களத்தைத் திறக்கும்," என்கிறார் பின்ஃபோல்ட். இந்தச் சூழலில், வளைகுடா நாடுகள் இந்த மோதலை இனி அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் போராக மட்டும் பார்க்காமல், தங்களது சொந்தப் போராகவும் கருதக்கூடும் என்றும் அவர் கூறுகிறார்.

எது எப்படியிருந்தாலும், வளைகுடா நாடுகள் இப்போதுவரை பதிலடி கொடுக்கவில்லை என்றாலும், இரானின் இந்த உத்தி "அதிக ஆபத்தானது" என்று பின்ஃபோல்ட் குறிப்பிடுகிறார். இதுகுறித்துப் பேசிய அவர், "இரானியர்கள் வளைகுடா நாடுகளுடன் தங்களுக்கு இருந்த அனைத்து உறவுகளையும் முறித்துக் கொள்கிறார்கள். இந்த மோதலை இரான் தனது வாழ்வா சாவா பிரச்னையாகஎவ்வளவு தூரம் கருதுகிறது என்பதை இது காட்டுகிறது," என்றார். குறிப்பாக பொது இடங்கள் இலக்கு வைக்கப்பட்டு தாக்கப்படும்போது, இரான் தங்களைத் தொடர்ந்து தாக்குவதை வளைகுடா நாடுகள் "ஏற்றுக்கொள்ளாது" என்று ஹெல்லியர் தெரிவித்தார். அமெரிக்காவைக் கட்டுப்படுத்த வளைகுடா நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கும் இரானின் இந்த அதிக ஆபத்துள்ள உத்தி, இரானுக்கே எதிராகத் திரும்ப வாய்ப்புள்ளது என்று அவர் கருதுகிறார்.

தொடர்ந்து பேசிய அவர், "தொடக்கத்தில் இரானுக்கு எதிரான அமெரிக்க — இஸ்ரேல் போரை அவர்கள் எதிர்த்திருந்தாலும், இரானின் பதிலடித் தாக்குதல்களால் இப்போது தங்களது சொந்தப் பாதுகாப்பிற்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் முடிவு செய்யலாம். எனவே, இரானிடமிருந்து வரும் உடனடி அச்சுறுத்தலை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கையை ஆதரிப்பதே புத்திசாலித்தனம் என்றும் அவர்கள் கருதக்கூடும்"என்றும் அவர் விளக்கினார். இதற்கிடையே மத்திய கிழக்கில் நிலவும் மோதலுக்கு ஒரு "முழுமையான தீர்வு" காண்பது குறித்து இரானுடன் "பயனுள்ள பேச்சுவார்த்தை" நடைபெற்றுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார். ஆனால், பேச்சுவார்த்தைகள் குறித்த அமெரிக்க அதிபர் டிரம்பின் கூற்றை இரான் வெளியுறவு அமைச்சகம் நிராகரித்துள்ளது.




# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




## சொல்றாங்க... சொல்றாங்க...



*"எங்களுடன் பேச ஈரானில் தலைவர்கள்தான் இல்லை!"*

**டிரம்ப்**

(பேசிட்டா, அதுக்கப்புறம் அந்தத் தலைவரே இல்லைன்னு ஆயிடுமே!..)



*"சுயநலனுக்காக கட்சியை தில்லியிடம் அடமானம் வைத்த இபிஎஸ்!"*

**ஸ்டாலின்**


(என்ன சொல்றீங்க? உங்க குடும்பத்துக்காக மொத்தக் கட்சியுமே அடமானத்திலே தான் இருக்குது! மீட்கவே முடியலையே!)



*"சூர்யா, கல்விக்காக செய்பவை எனக்கு ஊக்கமளிக்கின்றன!"*

**சிரஞ்சீவி**

(சிரஞ்சீவியா வாழறது எப்படின்னு நீங்க புரிஞ்சு வைச்சிருக்கீங்க!)



*"நான் சாய் பல்லவியின் ரசிகன். அவருடன் இணைந்து பணிபுரிவேன் என நம்புகிறேன்."*

**மணிரத்னம்**

(எப்படி எடுத்து போட்டீங்க பாருங்க கொக்கியை?)

# குரங்கு

### ‘வெறும் வேடிக்கைக்காக’ தாக்குதல்

பல தசாப்தங்களாக சர்வதேச நடத்தையை நிர்வகித்த விதிகள் தங்கள் செல்வாக்கை இழந்து வருவதாகத் தோன்றும், ஒரு வளர்ந்து வரும் உலக ஒழுங்கின் கீழ் நடந்த முதல் பெரிய மோதல்களில் ஒன்றாக அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் இரான் இடையிலான மோதல் கருதப்படலாம்.

இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்ததிலிருந்து நீண்ட காலத்திற்கு, போரும் ராஜதந்திரமும் முறையாக சர்வதேச சட்டம் மற்றும் ஐக்கிய



நாடுகள் சபை போன்ற நிறுவனங்கள் மற்றும் பிற உடன்படிக்கைகளால் வடிவமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்புக்குள் செயல்பட்டன. அந்த விதிகள் வளைக்கப்பட்ட போதோ அல்லது அவர்களுக்கு விருப்பமான வகையில் புரிந்துகொள்ளப்பட்டபோதோ கூட, அரசுகள் பொதுவாக தங்கள் செயல்களை அந்த அமைப்புக்கு உட்பட்டு நியாயப்படுத்த முயன்றன. ராணுவ நடவடிக்கைகள் பொதுவாக சட்ட ரீதியான வாதங்கள், ராஜீய ஆலோசனைகள் அல்லது சர்வதேச கூட்டணிகளை உருவாக்குதல் ஆகியவற்றுடன் இணைந்தே இருந்தன.



தற்போதைய போரில், அந்த பரிசீலனைகள் மிகவும் குறைந்த அளவிலான பங்கையே வகிப்பதாகத் தெரிகிறது. உத்திரீதியான முடிவுகள் சர்வதேச சட்டக் கட்டமைப்புகள் அல்லது பலதரப்பு அங்கீகாரத்துக்கு உட்பட்டு இருப்பதை விட, பெரும்பாலும் உடனடி ராணுவ மற்றும் அரசியல் அல்லது பாதுகாப்பு கணக்கீடுகளால் இயக்கப்படுவதாகத் தெரிகிறது.

இரான் நாட்டைப் பொறுத்தவரை, இத்தகைய சூழ்நிலைகளின் கீழ் செயல்படுவது முற்றிலும் புதியதல்ல. பல தசாப்தங்களாக, அந்த நாடு

# கை
# பூமாலை

விரிவான சர்வதேச தடைகள் மற்றும் அரசியல் தனிமைப்படுத்தலின் கீழ் வாழ்ந்து வருகிறது. காலப்போக்கில், அந்தத் தீர்மானங்களை (பலதரப்பு அல்லது ஒருதலைப்பட்சமானவை) தவிர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட வலைப்பின்னல்கள் மற்றும் பொருளாதார வழிமுறைகளை அது உருவாக்கியுள்ளது. உலகில் மிகவும் விரிவான தடைகள் விதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக இருந்தபோதிலும், இரான் தொடர்ந்து எண்ணெயை ஏற்றுமதி செய்து வருவதுடன் பிராந்திய செல்வாக்கைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இந்த மூலோபாய கலாச்சாரத்துக்குள், மோதல் அதிகரிப்பு பெரும்பாலும் அளவிடப்பட்டே இருந்தது. கடந்தகால நெருக்கடிகளில் இரான் அளித்த பதில்கள் பொதுவாக ஒரு பரந்த பிராந்திய போரைத் தூண்டாமல், தனது எதிரிகளுக்கு மோதலுக்கான விலையை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. வெளி சக்திகள் பதற்றத்தைக் குறைக்க அழுத்தம் கொடுக்கும் வரை, எதிரிகள் மீது பொருளாதார அல்லது

அமீர் அசிமி

அரசியல் அழுத்தத்தை அதிகரிப்பதே இதன் பரந்த நோக்கமாக இருந்து வந்தது.

சர்வதேச உடன்படிக்கைகள் உடனடியாகச் செயல்பாட்டு எல்லைகளாக மாற வேண்டிய அவசியமில்லாத ஒரு சூழலில் செயல்பட இஸ்ரேலும் பழகியுள்ளது. ஒரு கடுமையான அச்சுறுத்தல் உருவாவதாகத் தலைவர்கள் நம்பும்போது, விரைவான மற்றும் தீர்க்கமான நடவடிக்கையை எடுப்பதையே இஸ்ரேலிய ராணுவக் கோட்பாடு நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறது. முன்கூட்டியே தாக்குதல் நடத்துவது மற்றும் அதீத பலத்தைப் பயன்படுத்துவது ஆகியவை அந்த அணுகுமுறையின் மீண்டும் மீண்டும் நிகழும் கூறுகளாக இருந்துள்ளன.







சமீபத்திய ஆண்டுகளில், காஸா போர் போன்ற மோதல்களில் இஸ்ரேலிய நடவடிக்கைகள் சர்வதேச நீதிமன்றம் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உள்ளிட்ட சர்வதேச சட்டமன்றங்களில் ஆய்வுகளை எதிர்கொண்டுள்ளன. அதே நேரத்தில்,




குறிப்பாக அமெரிக்காவிடமிருந்து வலுவான உத்தி ரீதியான ஆதரவைப் பெற்றுள்ள நிலையில், தனது பாதுகாப்பு முன்னுரிமைகள் தீர்க்கமான இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்துவதாக இஸ்ரேல் தொடர்ந்து கணக்கிட்டு வருகிறது. இந்த அமைப்புக்குள் அமெரிக்கா ஒரு வித்தியாசமான நிலையில் உள்ளது. வாஷிங்டன் 1945—க்குப் பிந்தைய சர்வதேச ஒழுங்கில் மற்றொரு பங்கேற்பாளர் மட்டுமல்ல — அதை வடிவமைப்பதிலும் நிலைநிறுத்துவதிலும் அது ஒரு முக்கியப் பங்கை வகித்தது. போருக்குப் பிறகு உருவான கூட்டணிகள், நிறுவனங்கள் மற்றும் சட்ட விதிமுறைகளின் வலைப்பின்னல் பெரும்பாலும் உலகளவில் அமெரிக்க செல்வாக்கை அதிகரிக்கச் செய்தது.

சமீபத்திய தசாப்தங்களில் அமெரிக்கா அந்த அமைப்பை வெளிப்படையாக தவிர்ப்பதற்கு மிக நெருக்கமாக வந்தது 2003—ஆம் ஆண்டு இராக் படையெடுப்பின் போதுதான். அப்போதும் கூட, வாஷிங்டன் அந்தத் தலையீட்டை ஒரு பரந்த கூட்டணி முயற்சியின் ஒரு பகுதியாகக் காட்ட முயன்றது. "விருப்பமுள்ளவர்களின் கூட்டணி" என்று அழைக்கப்பட்ட இதில், பிரிட்டன், ஆஸ்திரேலியா மற்றும் போலந்து போன்ற கூட்டாளிகளுடன் பல்வேறு அளவிலான ஆதரவை வழங்கிய டஜன் கணக்கான பிற அரசுகளும் இடம்பெற்றிருந்தன. போருக்கான சட்டபூர்வமான நியாயம் மிகவும் சர்ச்சைக்குரியதாக இருந்தபோதிலும், அமெரிக்கா இன்னும் அந்த நடவடிக்கையைப் பலதரப்பு சூழலில் நிலைநிறுத்த முயன்றது.



இருப்பினும், தற்போதைய மோதலில், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரிடமிருந்தும் சர்வதேச சட்டபூர்வமான தன்மைக்கான முக்கியத்துவம் குறைவாகவே காணப்படுகிறது. உயர்மட்ட அதிகாரிகளின் அறிக்கைகள் வேறுபட்ட தொனியைப் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, மார்ச் 14 அன்று, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், தொடர்ச்சியான தாக்குதல்கள் இரான் நாட்டின் கார்க் தீவின் பெரும்பகுதியை "முற்றிலும் தரைமட்டமாக்கியுள்ளன. மேலும் நாங்கள் அதை இன்னும் சில முறை வெறும் வேடிக்கைக்காக தாக்கலாம்" என்றும் தெரிவித்தார். இத்தகைய கருத்துக்கள், அமெரிக்காவின் பெரிய ராணுவ நடவடிக்கைகளுடன் பாரம்பரியமாகத் தொடரும் ராஜீய ரீதியான கட்டமைப்பை விட நேரடியான அணுகுமுறையை விளக்குகின்றன.

இந்த புதிய அணுகுமுறையில், பொருளாதாரக் கருவிகளும் கொள்கையின் கருவிகளாக மிகவும் ஆக்ரோஷமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. வரிகள், வர்த்தகக் கட்டுப்பாடுகள் மற்றும் நிதி நடவடிக்கைகள் பெருகிய முறையில் எதிரிகளுக்கு மட்டுமல்லாமல், நீண்டகால கூட்டாளிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. பிரிட்டன் மற்றும் இதர நேட்டோ கூட்டாளிகள் உள்ளிட்ட ஐரோப்பிய அரசுகள், பாதுகாப்புச் செலவினங்கள் மற்றும் புலம்பெயர்வு கொள்கை முதல் வர்த்தக நடைமுறைகள் மற்றும் ரஷ்யாவுடனான உறவுகள் வரையிலான பிரச்னைகளில் வாஷிங்டனிடமிருந்து விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளன.

இத்தகைய கொள்கைகள் குறுகிய காலத்தில் பயனுள்ளதாகத் தோன்றலாம், குறிப்பாக மற்ற நாடுகள் நிறுவப்பட்ட சர்வதேச விதிமுறைகளுக்குள் தொடர்ந்து செயல்பட்டால். இருப்பினும், நீண்ட கால விளைவுகள் தெளிவாக இல்லை. விதிகளின் அடிப்படையில் அமைந்த அமைப்பின் முதன்மை வடிவமைப்பாளரே அந்த விதிகளுக்குக் குறைந்த முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கினால், மற்ற அரசுகளும் அவற்றால் கட்டுப்படுத்தப்படுவதை குறைவாகவே உணரக்கூடும்.

கடந்தகால மோதல்களில் இரான் நடந்துகொண்ட விதம், இத்தகைய எல்லைகள் ஒரு காலத்தில் அதன் தலைமையால் எவ்வாறு நிர்வகிக்கப்பட்டன

# தமிழ்

## நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™




என்பதை விளக்குகிறது. 2025 கோடையில் நடந்த 12 நாள் போர் உள்ளிட்ட முந்தைய நெருக்கடிகளின் போது, தெஹ்ரான் ராணுவ ரீதியாகப் பதிலளித்தபோதும் பெரும்பாலும் தனது சொந்த உத்தி ரீதியான சிவப்புக் கோடுகளைக் கடைப்பிடித்தது. அந்த மோதலே வழக்கமான சர்வதேச சட்டக் கட்டமைப்பிலிருந்து விலகிச் சென்றதாக இருந்தபோதிலும், இரான் நாட்டின் பதிலடி அளவிடப்பட்டதாகவே இருந்தது. கத்தாரில் உள்ள அமெரிக்காவின் அல் உதித் விமான தளத்தின் மீது இரான் ஏவுகணைகளை ஏவியபோது, அந்தத் தாக்குதலுக்கு முன்னதாக கத்தார் மற்றும் அமெரிக்க அதிகாரிகளுக்கு முறைசாரா எச்சரிக்கைகள் வழங்கப்பட்டதாகத் தெரிந்தது.

இதேபோன்ற சமிக்கைகள் முன்னதாக இராக்கில் நடந்த இரானிய தாக்குதல்களின் போதும் கவனிக்கப்பட்டன. கணிசமான சேதத்தைச் சந்தித்த பிறகும், தெஹ்ரானின் பதிலடி ஒரு பரந்த மோதலைத் தவிர்க்கும் வகையில் கவனமாக அளவிடப்பட்டிருந்தது. இருப்பினும், தற்போதைய மோதலில் அந்த கட்டுப்பாடுகள் பலவீனமடைந்துள்ளதாகத் தெரிகிறது. முதல் அலைத் தாக்குதல்களில் அதி உயர் தலைவர் ஆயதுல்லா அலி காமனெயி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இரான் அரேபிய தீபகற்பம் முழுவதும் உள்ள அமெரிக்க கட்டமைப்புகள் மீது தாக்குதல்களைத் தொடங்கியது, ராணுவத் தளங்கள் மற்றும் சிவிலியன் இலக்குகள் மற்றும் உள்கட்டமைப்புகளை இலக்கு வைத்தது. அதே நேரத்தில், இரானிய நடவடிக்கைகள் உலகின் மிக முக்கியமான எரிசக்தி வழித்தடங்களில் ஒன்றான ஹோர்மூஸ் நீரிணை வழியாகச் செல்லும் போக்குவரத்தை சீர்குலைத்தன.



இதன் விளைவுகள் உடனடியாகத் தெரிந்தன. எரிசக்தி சந்தைகள் கடுமையாக எதிர்வினையாற்றின மற்றும் குறுகிய நீர்வழிப்பாதையில் கப்பல் போக்குவரத்து சீர்குலைந்தது உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் முழுவதும் அதிர்வுகளை உருவாக்கியது. சர்வதேச வணிகங்கள் மற்றும் அரசுகளுக்கு ஒரு பிராந்திய மோதலானது, மோதல் அதிகரிப்பு மீதான நீண்டகாலக் கட்டுப்பாடுகள் அரிக்கப்படத் தொடங்கும்போது எவ்வளவு விரைவாக உலகளாவிய பொருளாதார அதிர்ச்சிகளை உருவாக்க முடியும் என்பதை இந்த நிகழ்வு கோடிட்டுக் காட்டியது.

மற்ற பெரிய வல்லரசுகள் இந்த முன்னேற்றங்களிலிருந்து தங்கள் சொந்த முடிவுகளை எடுக்க வாய்ப்புள்ளது. ரஷ்யா அதிக எரிசக்தி விலையால் பயனடையக்கூடும், அதே நேரத்தில், ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்ப்பையும் மீறி மாஸ்கோ மீதான தடைகளின் அழுத்தம் குறைகிறது. இதற்கிடையில், சர்வதேச விதிமுறைகள் எவ்வளவு தூரம் மாறக்கூடும் மற்றும் எந்த திசைகளில் மாறக்கூடும் என்பதை சீனா ஒருவேளை உன்னிப்பாகக் கவனிக்கும். நிகழ்வுகளின் போக்கில் ஐரோப்பா தற்போது குறைந்த செல்வாக்கையே கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ராஜீய ரீதியிலான முயற்சிகள் இருந்தபோதிலும், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டன் ஆகியவை பெரும்பாலும் முன்னேற்றங்களை வடிவமைப்பதை விட கவனிப்பவர்களாகவே தங்களை காண்கின்றன. எனவே, மத்திய கிழக்கில் நடக்கும் போரால் எழுப்பப்படும் பரந்த கேள்வி ஓர் ஒற்றை மோதலின் முடிவைத் தாண்டியது. இது 1945 முதல் உலகளாவிய உறவுகள் மற்றும் அரசியலை வடிவமைத்த சர்வதேச அமைப்பின் நீடித்த தன்மையைப் பற்றியது. அந்த அமைப்பு ஒருபோதும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும், பெரும்பாலும் சர்ச்சைக்குரியதாக இருந்தபோதிலும், அது அதிகாரம் செலுத்தப்பட்ட ஒரு கட்டமைப்பை வழங்கியது.

அந்தக் கட்டமைப்பு தொடர்ந்து பலவீனமடைந்தால், அதன் விளைவு கணிக்க முடியாத ஒரு சர்வதேச சூழலாக இருக்கலாம், அதில் நாடுகள் பகிரப்பட்ட விதிகளை குறைவாகவும், நேரடித் திறனை அதிகமாகவும் நம்பியிருக்கும். அத்தகைய ஒரு நிலப்பரப்பில், முதலில் அந்த அமைப்பை வடிவமைத்த நாடுகள் கூட அதன் அரிப்பு எதிர்பார்க்க முடியாத விளைவுகளைக் கொண்டிருப்பதை உணரக்கூடும்.

# பேரன்பின் ஊற்று

தருவதற்கு
தடைகள் ஏதுமின்றி
தயாராகவே இருக்கிறது
தண் பொழுதிலும்
தகிக்கும் பொழுதிலும்

தெங்கும் நுங்கும்
தெரிவதுபோல் உயரத்தில்
தெரியாவிடினும்
தெவிட்டாத
தெள்ளமுதெனக் கிடக்கிறது
தெளிந்த அவ்வூற்று!

தேவனில்லை என்போரும்
தேவையில்லை என்போரும்
தேடல் கொண்டால் போதும்!
தேவரீராகலாமென விளக்கியபடி
தேங்கிக் கிடக்கின்றது
தேனாய் இனிக்கின்ற —அந்தத்
தேவாமிர்தமெனும் பேரன்பின் ஊற்று!




**கொற்றவன்**

# தமிழே

## உலகமயமாதல் சூழலில் தமிழ்!

அறிவியல் வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பப் புரட்சி, உலகளாவிய வர்த்தக உறவுகள் மற்றும் மக்கள் இடம்பெயர்வு ஆகியவை உலகத்தை ஒரே சமூகமாக இணைத்து வருகின்றன. உலகமயமாதல் என்பது வெறும் பொருளாதார மாற்றமல்ல; அது சமூக, பண்பாட்டு, அரசியல் மற்றும் மனித உறவுகளின் அமைப்பையே மாற்றும் சக்தியாகவும் விளங்குகிறது. இந்த மாற்றத்தின் மத்தியில் பல மொழிகளும் பண்பாடுகளும் தங்களது அடையாளத்தைப் பாதுகாத்துக் கொண்டு புதிய சூழல்களுக்கு ஏற்ப மாற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்ச் சமூகமும் இந்த மாற்றங்களை எதிர்கொண்டு வருகிறது. அதேநேரத்தில், தமிழ்ச் சமூகத்தின் அடையாளத்தை மறுபரிசீலனை செய்யும் நிலையை உருவாக்கியுள்ளன.

தமிழர்கள் இன்று உலகம் முழுவதும் பரந்து வாழும் உலகளாவிய சமூகமாக மாறியுள்ளனர். முன்பு ஒரு நாட்டின் வாழ்க்கை முறை, கலாசாரம் மற்றும் பொருளாதார அமைப்பு பெரும்பாலும் அந்த



நாட்டின் எல்லைக்குள் மட்டுமே நிலைத்திருந்தது. ஆனால், இன்று தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, இணையம், விமானப் போக்குவரத்து, உலகளாவிய வர்த்தகம் போன்ற காரணங்களால் நாடுகளுக்கு இடையிலான எல்லைகள் மங்கிவிட்டன. ஒரு நாட்டில் உருவாகும் தொழில்நுட்பம் சில நிமிஷங்களில் உலகம் முழுவதும் பரவுகிறது. ஒரு நாட்டின் பொருளாதார மாற்றம் மற்ற நாடுகளையும் பாதிக்கிறது. அதேபோல், ஒரு நாட்டின் பண்பாட்டு வெளிப்பாடுகள் மற்ற சமூகங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

உலகமயமாதல் பல்வேறு பண்பாடுகளை ஒன்றோடொன்று இணைக்கிறது; மறுபுறம் அந்த பண்பாடுகளின் தனித்துவ அடையாளத்தை சவாலுக்கு உட்படுத்துகிறது. இதனால், பல சமூகங்கள் தங்களுடைய பாரம்பரியத்தைப் பாதுகாத்தபடியே புதிய உலகச் சூழலுக்கு ஏற்ப மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

தமிழ்ச் சமூகத்தின் வரலாறு மிகப் பழைமையானது. சங்க கால இலக்கியங்கள் தமிழர்களின் சமூக அமைப்பு, பண்பாட்டு வாழ்வு, அரசியல் மற்றும் பொருளாதார நிலை குறித்த பல தகவல்களை வழங்குகின்றன. மொழி, இலக்கியம், கலை, மதம், சமூக மரபுகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாக தமிழர் பண்பாடு உருவாகியுள்ளது. தமிழர்கள் கடல்சார் வணிகத்தில் ஈடுபட்ட சமூகமாகவும் வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றனர். பண்டைய காலங்களில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் தமிழர்களுக்கு வணிக மற்றும் பண்பாட்டுத் தொடர்புகள் இருந்தன. ஆனால், தற்போது காணப்படுவது போன்ற உலகளாவிய பரவல் அப்போது இருந்ததாகக் கூற முடியாது.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில்தான் தமிழர்களின் புலம்பெயர்வு அதிகரித்தது. குறிப்பாக, காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தொழிலாளர்களாக பலர் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மோரீஷஸ் போன்ற நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு காரணங்களால் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா போன்ற மேற்கு நாடுகளுக்கு தமிழர்கள் குடியேறத் தொடங்கினர். இவ்வாறு பல்வேறு காலங்களில் நடைபெற்ற





மதிவதனி

புலம்பெயர்வு தமிழ்ச் சமூகத்தை உலகளாவிய சமூகமாக மாற்றியது.

புலம்பெயர்வு என்பது வெறும் இடமாற்றம் மட்டுமல்ல; அது ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறையையும் அடையாளத்தையும் மாற்றும் முக்கியமான செயல்முறையாகும். ஒரு புதிய நாட்டில் குடியேறும் போது அந்தச் சமூகத்தினர் அந்நாட்டு மொழி, கலாசாரம், சட்டம் மற்றும் சமூக அமைப்புகளுடன் இணைந்து வாழ வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால், ஓர் இரட்டை அடையாளம் உருவாகிறது. ஒருபுறம் அவர்கள் தங்களது பாரம்பரிய அடையாளத்தைப் பாதுகாக்க விரும்புகிறார்கள்; மறுபுறம் அவர்கள் வாழும் நாட்டின் சமூகத்துடன் இணைந்து வாழ வேண்டிய தேவையும் உள்ளது.இந்த நிலையில், புலம்பெயர் தமிழர்கள் பல புதிய சமூக அமைப்புகளை உருவாக்கியுள்ளனர். தமிழ்ப் பள்ளிகள், கலாசார அமைப்புகள், இலக்கிய மன்றங்கள், கோயில்கள் மற்றும் சமூக மையங்கள் போன்றவை புலம்பெயர் வாழ்வில் தமிழர் பண்பாட்டைப் பாதுகாக்கும் முக்கியமான தலங்களாக மாறியுள்ளன.இவற்றின்மூலம் தமிழ் மொழி கற்பித்தல், பாரம்பரிய கலைகள், திருவிழாக்கள் மற்றும் சமூக நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இதன்மூலம் புலம்பெயர் தமிழர்கள் தங்களுடைய பண்பாட்டு அடையாளத்தை புதிய தலைமுறைக்குப் பரப்ப முயற்சி செய்கின்றனர்.


தகவல் தொழில்நுட்பப் புரட்சியால் இணையம், சமூக ஊடகங்கள், எண்ம ஊடகங்கள் போன்றவை உலகம் முழுவதும் உள்ள மக்களை ஒரே தளத்தில் இணைக்கும் சக்தியாக மாறியுள்ளன.இணையத்தின் மூலம் தமிழ் இலக்கியம், செய்தி, கல்வி, கலாசாரம் போன்றவை உலகம் முழுவதும் பரவுகின்றன. உலகமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்பட்ட கல்வி, வேலைவாய்ப்பு, நகரமயமாதல் மற்றும் உலகளாவிய தொடர்புகள் ஆகியவை மனிதர்களின் சிந்தனை முறையையும், வாழ்க்கை அணுகுமுறையையும் மாற்றுகின்றன. இந்த மாற்றங்கள் தமிழ்ச் சமூகத்திலும் காணப்படுகின்றன.




பாரம்பரிய தமிழ்ச் சமூகத்தில் வலுவாக இருந்த குடும்ப அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நகர வாழ்க்கை, வேலைவாய்ப்பின் தன்மை, தனிநபர் சுதந்திரம் ஆகிய காரணங்களால் சிறு குடும்ப முறை அதிகமாகியுள்ளது. இதனால், தலைமுறைகளுக்கு இடையிலான தொடர்பு குறைவதற்கான வாய்ப்பும் உருவாகியுள்ளது. எனினும், இந்த மாற்றங்கள் அனைத்தும் எதிர்மறையானவை என்று கூற முடியாது. சிறு குடும்ப அமைப்பு பெண்களின் கல்வி, வேலைவாய்ப்பை அதிகரித்துள்ளது. பாரம்பரிய குடும்ப மதிப்புகளையும் நவீன வாழ்க்கை முறையையும் இணைக்கும் ஒரு புதிய குடும்ப கலாசாரம் உருவாகி வருகிறது.

"BEING A REFUGEE IS NOT A CHOICE. NO ONE CHOOSES TO BE A REFUGEE. IT IS IMPOSED BY DIFFERENT TYRANNY GOVERNMENTS AND PEOPLE ARE ESCAPING THEIR OWN GOVERNMENTS."

புலம்பெயர்ந்தோர் வாழ்வில் முக்கியத்துவம் பெற்றிருந்த தமிழர் விழாக்களின் வடிவமும் மாறிவருகிறது. பாரம்பரிய முறையில் கொண்டாடப்பட்ட விழாக்கள் இன்று மேடை நிகழ்ச்சிகள், கலாசார நிகழ்வுகள் மற்றும் சமூகக் கூடுகளாக




மாறியுள்ளன. மேலும், வெளிநாடுகளில் வாழும் தமிழர் சமூகத்தில் தலைமுறை மாற்றம் மொழி பரம்பரையைப் பாதிக்கும் முக்கிய காரணமாக மாறியுள்ளது. புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளில் கல்வி மற்றும் சமூக வாழ்க்கை பெரும்பாலும் அந்நாட்டு மொழியிலேயே நடைபெறுகிறது. குழந்தைகள் பள்ளி மற்றும் சமூக சூழலில் அந்த மொழியையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இதனால், தமிழ் மொழியைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் குறைந்து விடுகின்றன.

பல குடும்பங்களில் பெற்றோர் தமிழில் பேசினாலும், குழந்தைகள் பெரும்பாலும் அந்நாட்டு மொழியிலேயே பதிலளிக்கும் நிலை காணப்படுகிறது. இந்த நிலை நீண்ட காலத்தில் மொழிப் பரம்பரையைப் பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது. இது தமிழ்ச் சமூகத்துக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வாழும் பல மொழி சமூகங்களும் எதிர்கொள்ளும் பொதுவான சவாலாகும். இதை எதிர்கொள்ள புலம்பெயர் தமிழர் சமூகங்கள் பல நாடுகளில் தமிழ்ப் பள்ளிகளை நிறுவியுள்ளன. வார இறுதி நாள்களில் நடைபெறும் இந்தப் பள்ளிகளில் குழந்தைகளுக்கு தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் வரலாறு போன்றவை கற்பிக்கப்படுகின்றன. இருப்பினும், குழந்தைகளின் நேரக் குறைவு, கல்விச் சுமை, தொழில்நுட்பத்தின் கவர்ச்சி போன்ற காரணங்களால் தமிழ்ப் பள்ளிகளில் தொடர்ச்சியான பங்கேற்பு குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இணையவழி பாடங்கள், கைப்பேசி பயன்பாடுகள், எண்ம நூலகங்கள், இணைய வகுப்புகள் போன்றவை தமிழ் மொழி கற்றலை எளிதாக்குகின்றன.முதல் தலைமுறை புலம்பெயர் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டின் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருக்கிறார்கள். இரண்டாம், மூன்றாம் தலைமுறையினர் அந்நாட்டு சமூகத்தோடு அதிகமாக இணைந்திருக்கிறார்கள்.

மருத்துவம், பொறியியல், தகவல் தொழில் நுட்பம், வணிகம், ஆராய்ச்சி போன்ற பல துறைகளில் தமிழர்கள் உலக அளவில் சிறந்து விளங்குகின்றனர். இது தமிழ்ச் சமூகத்தின் திறமையையும் கல்வி மீது கொண்ட முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகிறது.




பல நாடுகளில் தமிழர் சங்கங்கள் ஆண்டுதோறும் பொங்கல் விழா, தமிழ் புத்தாண்டு, தீபாவளி போன்ற திருவிழாக்களை பொதுமக்கள் கலந்து கொள்ளும் வகையில் நடத்துகின்றன. இவ்விழாக்கள் சமூக ஒற்றுமையை வளர்க்கும் நிகழ்வுகளாக மட்டுமல்லாமல், தமிழர் பண்பாட்டை அந்நாட்டு மக்களுக்கும் அறிமுகப்படுத்தும் வாய்ப்பாகவும் அமைகின்றன.

கோயில்கள் சமூக ஒற்றுமையை உருவாக்கும் இடங்களாகவும் செயல்படுகின்றன. பல தலைமுறைகளைச் சேர்ந்த மக்கள் ஒன்றுகூடி பண்பாட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை வழங்குகின்றன. புலம்பெயர் தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கியப் பங்களிப்பை வழங்குகின்றனர். பல தொழில்முறை துறைகளில் தமிழர்கள் சிறந்து விளங்குகின்றனர். தங்கள் பாரம்பரிய அடையாளத்தை பாதுகாக்க முயற்சி செய்யும் நேரத்தில், அவர்கள் வாழும் நாட்டின் சமூகத்தோடு இணைந்து புதிய கலாசார அனுபவங்களை தமிழர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இதன் விளைவாக "உலகத் தமிழர்""என்ற புதிய அடையாளம் உருவாகியுள்ளது. இது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் மட்டுப்படுத்தப்பட்ட அடையாளம் அல்ல; உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்களின் ஒருங்கிணைந்த அடையாளமாகும்.

புலம்பெயர் சூழலில் வளர்கின்ற புதிய தலைமுறையினர், பல்வேறு மொழிகளையும் பண்பாடுகளையும் ஒரே நேரத்தில் அனுபவிக்கின்றனர். இது அவர்களின் உலகப் பார்வையை விரிவாக்கினாலும், சில நேரங்களில் தாய்மொழி மற்றும் பாரம்பரிய பண்பாட்டுடன் உள்ள தொடர்பைக் குறைக்கும் அபாயமும் உள்ளது. இதைத் தவிர்க்க குடும்பம், கல்வி அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயல்பட வேண்டும். பாரம்பரியத்தையும் நவீனத்துவத்தையும் இணைக்கும் ஒரு சமூகமாக தமிழர்கள் வளர வேண்டும்.

பாரம்பரியத்தின் வேர்களை உறுதியாகப் பிடித்தபடியே நவீன உலகின் வாய்ப்புகளை ஏற்றுக்கொள்வதே தமிழ்ச் சமூகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டும் பாதையாகும். உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால், தமிழும் தமிழர் பண்பாடும் உலகளாவிய அளவில் மேலும் வலுவடையும்.


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix • இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा



# காசிப்

## காசி தமிழ் சங்கமம் -4

‘ஒரே பாரதம் உன்னத பாரதம்’ என்னும் முழக்கத்தை முன்வைத்து, பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் வழிகாட்டுதல் படி, ‘காசித் தமிழ்ச் சங்கமம்’ இந்தியக் கல்வி அமைச்சகத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

பண்டையத் தமிழகத்திற்கும் காசிக்கும் இருந்த உறவை பலப்படுத்தும் விதமாக பாரத பிரதமர் மோடி அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டமே காசி தமிழ் சங்கமம். அறிவைத் தேடுவதிலும், இந்திய பண்பாட்டின் ஒற்றுமையை அடையாளம் காண்பதிலும், தொடர்ந்து நடைபெறும் பயணமாகும். தமிழ்நாட்டுக்கும் காசிக்கும் இடையிலான இலக்கியம், ஆன்மீகம் மற்றும் கலைத் தொடர்புகளை எடுத்துக்காட்டவும், தமிழ்நாடு உத்திர பிரதேச இரு மாநில அறிஞர்களுக்கு இடையே கல்வி மற்றும் ஆராய்ச்சி அடிப்படையில் தொடர்புகளை ஊக்குவித்தல் காசி தமிழ் சங்கமத்தின் நோக்கமாகும்.

மத்திய கல்வி அமைச்சகம், சென்னை ஐஐடி, பனாரஸ் இந்திய பல்கலைக்கழகம், உத்திரபிரதேச அரசு, ரயில்வே துறை மற்றும் சுற்றுலாத்துறை சேர்ந்து திட்டமிடப்பட்ட பங்களிப்போடு ஒவ்வொரு காசித் தமிழ் சங்கமம் நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது. நான்காவது காசி தமிழ் சங்கமம் டிசம்பர் 2, 2025—ல் தொடங்கிய மூன்றாவது குழுவில் கலந்து கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது காசி தமிழ் சங்கமப் பயணத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று இரண்டு தடவை விண்ணப்பித்து இணையம் மூலம் தேர்வு எழுதி வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்தத் தடவை அறிவிப்பு வந்தவுடன் விண்ணப்பிக்க நவம்பர் 23—ல் தேர்வு எழுதினேன். நவம்பர் 30—ல், இணையம் மூலம் 1500 செலுத்தியதும், டிசம்பர் 3—ல் சேலத்தில் இருந்து சேர்ந்து பயணிக்கிறேன் என்று ஒப்புதல் அளித்தேன். எனக்கு வாய்ப்பு கிடைத்ததற்கு போனிலும் நேரிலும் வாழ்த்து சொன்னார்கள்.




டிசம்பர் 3

திட்டமிட்டபடி, காலை 10 மணிக்கு புவனகிரியில் இருந்து புறப்பட்டு, மாலை 4 மணியளவில் சேலம் ஜங்ஷனுக்கு வந்து சேர்ந்தேன். 6 மணி அளவில் காசிக்குச் செல்வோர் சிலர் வந்து கொண்டிருந்தனர். 30 நிமிட தாமதத்துடன் வந்த ரயிலில் இரவு 9.15 மணிக்கு ஏறினோம். மூன்று பெட்டிகளில் வெளியே மேல் புறத்தில் ‘காசித் தமிழ்ச் சங்கம்’ என்று ஒட்டப்பட்டிருந்தது.

எனது பயண எண்: 4129476697. எனக்கு ‘அப்பர் பர்த்.’ 77 வயதான நான் எப்படி மேலே ஏறுவது என்று யோசித்த நிலையில் கோவையில் ஏறிய ஈரோடு பிரசன்னா என்பவர் தனக்கு ஒதுக்கிய சீட்டில் உட்கார்ந்து வாருங்கள் என்று சொல்ல, அவருக்கு நன்றி சொன்னேன். ரயிலில் புத்தம் புதிய கம்பளிப் போர்வை, படுக்கை விரிப்பு, தலையணை, சிறிய துண்டு எனத் தந்தனர். சிறிது





# பிரவேசம்!

நேரத்தில் தண்ணீர் பாட்டிலுடன் இரவு டிபன், ஸ்வீட், சப்பாத்தி இட்லி எனச் சிறப்பாக வழங்கினர். ஆண்கள், பெண்கள் என சேலத்தில் 72 பேரும், கோவையில் 69 பேரும், ஏறி உள்ளனர் என்றும், சென்னை பெரம்பூரில் 91 பேர் ஏறுவார்கள் என்று ஒருவர் சொன்னார்.

டிசம்பர் 4.

காலை ஆறரை மணிக்குத் தேநீரும், எட்டரை மணிக்குச் சிற்றுண்டி, பொங்கல், இட்லி, தோசை, வடை, சட்னி, சாம்பாருடன் வந்தது. மதியம் சாதம், சாம்பார், பொரியல், ஸ்வீட் எனத் தந்தனர். மாலை யில், தென்ர்ருடன் எல்லோருக்கும் கழுத்தில் அணியும் படி, அடையாள அட்டை வழங்கினார்கள். நூலகர் சரவணனுடன் பேச்சு சுவாரசியத்தில், அதை வாங்கச் செல்லவில்லை. மற்றவர்கள் வாங்கியதைப் பார்த்ததும், சொன்ன இடத்திற்கு சென்றோம். ஒருவர் எங்களைப் பதிவு செய்து கொண்டு ‘ஐடி கார்டு’ கொடுத்தார்.

அவரிடம் நான், ‘மாலை தமிழகம்’ நாளிதழில் சிறப்புச் செய்தியாளர் என்றும், அதில் கட்டுரைகள் எழுதி வருவது பற்றியும் கூறினேன். நான் எழுதிய ‘என்றும் எம்.ஜி.ஆர்’ ‘தகவல் அறியும் உரிமைச் சட்டமும் பயன்களும்’ என்ற நூலையும் கொடுத்தேன். இரவு சிற்றுண்டி கொடுத்தனர். மற்றவர்கள் வாங்கிய பையில் நாட்குறிப்பு, குடை, எவர்சில்வர் வாட்டர் பாட்டில், சாவி சங்கிலி, பேனா, டி—ஷர்ட், தொப்பி, ஐடி கார்டு, பிளாஸ்டிக் வாட்டர் கேன், 2 டைரி பயணத்திட்ட அட்டவணையில் உள்ள நோட்டீஸ் இருந்தன.




## புவனகிரி செயபாலன்

டிசம்பர் 5

காலையில், சிற்றுண்டிக்குப் பின், மதுரையில் இருந்து வந்த காந்தியவாதி கதம்பராஜனை பேட்டி எடுத்தேன். மதியம் சாப்பாடு தாமதமானது. நான்கு மணி அளவில் பிளாட்பாரத்தில் விற்ற மூன்று இட்லி வாங்கி சாப்பிட்டேன். கதம்ப ராஜனைப் பேட்டி எடுத்ததால் எங்கள் பகுதியில் இருந்த சேலம் அம்மாபேட்டை பாஸ்கரன், ஈரோடு ஜெயராமன், கோவில்பட்டி கார்த்திகேயன் அவரது தாயார் சுபலட்சுமி, கும்பகோணம் வடமட்டம் விஜயரங்கன் போன்றோரின் அறிமுகம் அதிகமானது.




டிசம்பர் 6

விடியற்காலை 4:30 மணியளவில் பனாரஸ் வந்து இறங்கினோம். சிவப்பு கம்பள வரவேற்பு, மேளதாளங்கள் முழங்க, ஜங்ஷன் வாயிலின் முன் பகுதியில் அரசு அலுவலகர்கள், பிரமுகர்கள் இருகரம் கூப்பி, “வணக்கம் வாங்க!” என்று இன்முகத்தோடு வரவேற்க, வந்த அனைவருக்கும் ஒருவர் மாலை, மற்றொருவர் துண்டு வேட்டி என அணிவிக்க, பெண்கள் வந்தவர்களுக்கு திலகம் இட்டு மலர் தூவி




வரவேற்றனர். எங்களை அழைத்துச் செல்ல வெளியில் வரிசையாக சிறியவகை பேருந்துகள் தயாராக இருந்தன. நாங்கள் அனைவரும் ஏறிய பின் வரிசையாக புறப்பட்டன. என் பக்கத்தில் சேலம் பாஸ்கரன் அமர்ந்தார். அனைத்து பஸ்களும் காவல்துறையினரின் பாதுகாப்புடன் செல்ல, ‘ஹோட்டல் மெரிடன்’ வந்து இறங்கினோம். முன்பே பதிவு செய்ததன் அடிப்படையில் எங்கள் இருவருக்கும் அறை எண் 2012 ஒதுக்கப்பட்டது. மூன்று நட்சத்திர அந்தஸ்துடைய ஓட்டல் இது.

இங்கே குளித்து முடித்து கீழே இறங்க, அதே பேருந்தில் அழைத்துச் சென்றனர். ‘தி பாரீஸ்’ உணவகத்தில், சிற்றுண்டியும் தேநீரும் இனிதாக அமைந்தது. அங்கிருந்து கங்கையின் ‘நமோ காட்’ பகுதிக்கு அழைத்துச் சென்றனர். இங்கே ‘எம்.வி.விவேகானந்தர்’ எனும் கப்பலில் ஏற்றி அனைத்து படித்துறைகளையும் காட்டியபடி அழைத்துச் சென்றனர். கப்பல் பயணம் முடித்து இறங்கிய எங்களை பேருந்தின் மூலம், விஸ்வநாதர் ஆலயத்திற்கு, எங்களை மலர்தூவி அழைத்துச் சென்றனர்.

கோயில் அருகே சென்றதும் ஒரே வரிசையாக வரச் சொல்லி 20 அடிக்கு ஒரு போலீஸ் வீதம் இருக்கச் செய்து தனி வரிசையில் இருந்து மாறாத படியும், மற்ற பக்தர்கள் இதில் சேராத படியும் கண்காணிக்கச் செய்தனர். மூலவர் விஸ்வநாதருக்கு நாமே அபிஷேகம் செய்யலாம். அபிஷேகம் செய்வதற்கு ஒரு குவளையில் தண்ணீரை ஒவ்வொருவருக்கும் கொடுத்துக் கொண்டிருந்தனர். வரிசையில் சென்ற நான் கவனக்குறைவால், வேறு வரிசைக்குச் செல்ல, என்னால் குவளைத் தண்ணீர் வாங்க முடியாமல் போனது. வெறுமனே கும்பிட்டு தரிசனம் செய்தேன். என் கையால் மூலவருக்கு அபிஷேகம் செய்ய முடியாமல் போனதற்கு மிகவும் வருந்தினேன். இதுபோன்ற சந்தர்ப்பம் இனிமேல் கிடைக்குமா? பெருத்த ஏமாற்றமாய் இருந்தது.



பக்கத்திலிருந்து அன்னபூரணி கோயிலுக்கு போகும்போதும், மலர் தூவி வரவேற்றனர். அம்பாள் தரிசனம் முடிந்ததும், பக்கத்து கட்டிடத்தில் எங்களுக்கு மதியச் சாப்பாடு, வடை பாயசம் என அமர்க்களப் பட்டது.

அடுத்து விசாலாட்சி கோயில் தரிசனம் முடிந்து ‘நமோ காட்’ அருகே கொண்டு போய் விட்டனர். அங்குள்ள பொருட்காட்சியைப் பார்த்தேன். மத்திய அரசு, செம்மொழி நிறுவனம் அரங்கில் ‘தமிழ் கற்கலாம் வாங்க’ என்ற நிகழ்ச்சியில், வார்த்தைகளை எப்படி உச்சரிக்க வேண்டும்? எப்படி எழுத வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர். தமிழின் உயிர் எழுத்துக்களை எப்படி எழுத வேண்டும் என்பதை கோடுகளால் வரிசைப் படுத்தி காட்டி இருந்தனர்.

அரங்கில் தமிழ் மொழியில், பல்வேறு இலக்கியப் புத்தகங்களும் விற்பனைக்கு வைத்திருந்தனர். பேராசிரியர் சுந்தர்ராஜன் தமிழை, இந்தி பேசும் மக்களிடையே கொண்டு போய் சேர்ப்பதற்கு செயல்படும் விதம் பற்றி சொன்னார். அங்கு பணிபுரியும் ரெபிகா தேவி, திருக்குறளை மணிப்பூர் மொழியில் மொழிபெயர்த்துள்ளார் என்று சொல்லி அறிமுகம் செய்து வைத்தார். அவரைப் பேட்டி எடுத்து செல்போனில் பதிவு செய்தேன். அதேபோல் செம்மொழி பகுப்பாய்வு மத்திய நிறுவன இயக்குனர் ரா. சந்திரசேகரை பேட்டி கண்டு பதிவு செய்தேன். அடுத்து சித்த மருத்துவம் அரங்குக்கு சென்றேன். அங்குள்ள மருத்துவரும் செவிலியரும் சித்த மருத்துவத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க பல செயல்பாடுகளை செய்து வருகின்றோம் என்றனர்.

காலம் கடந்ததால் மற்ற அரங்குகளை பார்க்க முடியாமல், கலை நிகழ்ச்சிகள் நடக்கும் இடத்திற்கு சென்றேன். மேடையில் தமிழ்நாட்டு கலைகளான கும்மி, கோலாட்டம், பரதநாட்டியம், கோபி ராதாகிருஷ்ணன் வேடமிட்ட நாட்டிய நடனங்கள் நடந்தன. நிகழ்ச்சிக்கு இடையில் வாரணாசி தொகுதி எம்.எல்.ஏ திரிபுவன்ராம் என்பவர், ஒரு ஆட்டோவில் தனியாக வந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிவிட்டு, தனியாக அதே ஆட்டோவில் சென்றார்.

அவர் இந்தியில் தமிழ் மொழி பற்றி உயர்வாகப் பேசியது தெரிந்தது. எனக்கு இந்தி தெரியாது. அதனால் அவர் சொன்ன கருத்தை உள்வாங்க முடியவில்லை. இதில் எனக்கு வருத்தம்தான்.

வந்து பேசிய எம்.எல்.ஏ நடவடிக்கை கண்டு ஆச்சரியப்பட்டேன். அதேசமயம் தமிழ் நாட்டு எம்.எல்.ஏக்கள், மாநகராட்சி, நகராட்சி மெம்பர், கட்சியில் முக்கிய பொறுப்பு வகிப்பவர்கள் நடந்து கொள்ளும் விதத்தை நினைத்து பெருமூச்சு விட்டேன். அடுத்து கப்பலில் ஏறினோம். கங்கா ஆர்த்தியை பார்த்துவிட்டு, பஸ்ஸில் 'தி பாரிஸ்' இடத்துக்குச் சென்றோம். இரவு சிற்றுண்டிக்குப் பின், ஹோட்டல் மெரிடனுக்கு திரும்பினோம்.



டிசம்பர் 7

விடியற்காலை 5 மணிக்கு எழுந்து, 6 மணிக்கு புறப்படும் போது பஸ்ஸில் சிறு கோளாறு ஏற்பட்டது. அதைச் சரி செய்தபின், 'அனுமான் காட்டிற்கு' சென்றோம். அங்கே குளித்தோம். அங்கேயும் கேட்டரிங் காரர் டீ தந்தனர் 'அனுமன் காட்டில்' டீக்கடை, பெட்டிக் கடை, சில்லறை வியாபாரிகள் என அனைவரும் தமிழில் சரளமாகப் பேசியதைக் கண்டதும், தமிழ்நாட்டில் இருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. அங்கிருந்து, பாரதி தன் அத்தை வீட்டில் தங்கியிருந்த இல்லத்திற்கு சென்றோம். பாரதி வாழ்வில் நடந்த முக்கிய நிகழ்வுகளின் காலக் கோட்டு பலகைகளையும், 1912 இல் மொழிபெயர்க்கப்பட்ட கீதையின் ஒரு பக்க நகல் எனக் கண்டோம். பாரதியின் வம்சாவழி பெண்மணி அங்கேயே தாங்கி விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார். அவருடன் படம் எடுத்துக் கொண்டோம்.

பக்கத்தில் இருந்த சங்கராச்சியார் மடத்திற்குச் சென்றோம். அங்கு காசி காண்டம் எனும் முக்கியமான ஸ்லோகங்கள் என்ற நூலை அளித்தனர். பல்கலைக் கழகத்திற்கு வந்து காலை சிற்றுண்டிக்குப் பின், அங்கு நடந்த கல்விக் கழகக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். பல அறிஞர்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் பேசினர். ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் இந்தியில் பேசியதால், கேட்டவர்களுக்குப் புரியவில்லை! தமிழில் மொழிபெயர்த்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். பகவத் கீதை புத்தகம் தந்தனர்.

பனாரஸ் இந்துக் கல்லூரி அருங்காட்சியகத்தைப் பார்த்தோம். அகழ்வாய்வின் மூலம் கண்டெடுக்கப்பட்ட, சோழர் கால மக்கள் பயன்படுத்திய பொருள்கள், கற்கால மனிதன் பயன்படுத்திய பொருட்கள், முழுமையான மற்றும் பின்னப்பட்ட சிற்பங்கள், ஒரு அடிக்கும் குறைவான உலோகத் திருமேனிகள், ஒற்றைக் காலில் ஆடும் நடராஜன், பண்டைக்கால பலவகையான எழுத்தாணிகள், பழமையான ஓலைச்சுவடிகள், ஆங்கிலேயர் ஆட்சிக் கால இந்திய வரைபடங்கள், அக்கால இதழ்கள், ஓவியங்கள் என வைக்கப்பட்டிருந்தன.




ஒவ்வொன்றும் ஒரு நீண்ட கால வரலாற்றுக்கு உரியது. இப்பல்கலைக்கழகம் 1916—ல் நிறுவப்பட்டது. அதற்கு மதன் மோகன் மாளவிகாவின் பங்கு எப்பேற்பட்டது என்பதையும், அதற்காக அவர் பெற்ற நன்கொடைகளையும் பார்க்க முடிந்தது. மதன் மோகன் மாளவியாவிற்கு எனத் தனி அருங்காட்சியகத்தில், அவரின் முழு உருவச்சிலை, கடிதங்கள், அவரின் உடைகள், அவர் பங்கு பெற்ற படங்கள் என இருந்தன. பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்திற்கு இவர்தான் ஆணிவேர் என்பதைச் சொல்லாமல் சொல்லியது அருங்காட்சியகம்.

சாரநாத்

பனாரஸிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ள சாரநாத் செல்லும்போது மாலை மணி 5.30.







மூடப்படும் நேரம். எங்களுக்காக அது மூடப் படாமல் இருந்தது. உள்ளே புத்தர் சம்பந்தப்பட்ட தகவல்களை அருங்காட்சியகத்தில் காண முடிந்தது. அசோகரால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தூபி மற்றும் பலவிதமான கலைப் பொருட்கள், அழகுப்படுத்தி ஹிந்தி மற்றும் ஆங்கில வாசகங்களுடன் வைக்கப்பட்டிருந்தன. புத்தர் உபதேசம் செய்த இடம், பெரிய உயரமான லிங்கத்தை கண்டோம். இரவு ஆனதால், முழுமையாகப் பார்க்க இயலாமல் போனது. வெளியே வந்தவர்களில் சிலர், அங்குள்ள கடைகளில் பொருட்களை வாங்கினர். நான் அன்னபூரணி சிலை பத்தும், காந்தத்துடன் கூடிய அயோத்தி கோபுர ஸ்டிக்கரும் வாங்கினேன். இரவு ‘தி பாரிசுக்கு’ வந்து, தோசை, சப்பாத்தி சாப்பிட்டு ரசம் குடித்து விட்டு எனது அறைக்குச் சென்றேன்.

டிசம்பர் 8

திங்கள் காலை அறையை காலி செய்துவிட்டு பொருட்களுடன் கீழே இறங்கி, தேநீருக்குப் பின், பேருந்தில் ஏறினோம். எனக்கும் பாஸ்கருக்கும் அருகருகே இருக்கை. நாங்கள் கொண்டு வந்த பொருட்களை ஒரே பேருந்தில் ஏற்றுவோம். இவைகளை காசியில் இருந்து புறப்படும்போது ஜங்ஷனில்தான் எடுக்க முடியும். எனவே தேவையான உடைகள், பொருட்களை தனியே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள் என்றனர். அவர்கள் சொன்னபடி செய்தோம்.

சிற்றுண்டிக்குப் பின், 8 மணி அளவில் புறப்பட்டு, 150 கி.மீ. தூரத்தில் உள்ள பிரயாக்ராஜுக்கு 12 மணி அளவில் திருவேணி சங்கமத்திற்கு சென்றோம்.




கரையோரத்தில் மேடை மற்றும் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அங்கு வரிசையாக சென்ற எங்களுக்கு மலர் தூவி, ‘வணக்கம் வாங்க’ என்று கூறி கும்பிட்டு வரவேற்றனர். மேடையில் சிலர், வந்தவர்களையும், தமிழையும் போற்றிப் பேசினர். எங்களுடன் சென்றவர்களில் ஒருவர் வாழ்த்திப் பேசினார். எல்லோருக்கும் பகவத் கீதை புத்தகம் கொடுத்தனர். அங்கிருந்து கரையோரம் அமைக்கப்பட்ட மேடையில் ஏறி படகுக்குச் சென்றோம். பாதுகாப்புக்காக ஜாக்கெட் போட்டுக் கொண்டோம். நதியில் செல்லும் போது கங்கையும் யமுனையும் ஒன்று சேர்ந்ததைப் பார்க்க முடிந்தது. யமுனை நீர் தூய்மையாகவும், கங்கை நீர் சற்று கலங்கலாகவும் இருந்தது. இரண்டும் கலப்பதை இயற்கை என்பதா? கடவுள் செயல் என்பதா? புரியாத புதிர்! ஆறுகளின் சங்கமத்திற்கு இடையே மணல் திட்டு! அங்கு இறங்கி குளிக்க ஆரம்பித்தனர்.

நான் நீண்ட தூரம் போகாமல், கரை ஓரத்திலே இறங்கிக் குளித்தேன். ஆழத்திற்கு சென்று விடாமல் இருப்பதற்கு தடுப்புக் கயிறு கட்டி இருந்தனர். எங்களைக் கண்காணித்து காவலர்களும் தொண்டர்களும் நின்று இருந்தனர். பாஸ்கரன் சற்று தூரம் சென்று குளித்துவிட்டு, எனக்காக கங்கை நீரை குடுவையில் எடுத்து வந்தார். திரும்ப படகில் ஏறி கரைக்கு வந்து, 2.30 மணி அளவில் பாதாள அனுமன் கோயிலுக்கு சென்று தரிசனம் செய்தோம். 3 மணி அளவில் சங்கராச்சாரியார் மடத்துக்குச் சென்றோம். அங்கே பிரசாதம் தந்ததைச் சாப்பிட்டோம். அங்கிருந்து அயோத்தியாவை நோக்கி பயணம் ஆனோம்.

6 மணி அளவில் வழியில் இருந்த தேநீர்க் கடையில் மண் குவளையில் தேநீர் வாசனையுடன் மண்வாசனையும் முகர்ந்தேன். இரவு 8 மணி அளவில் அயோத்தி சென்றடைந்தோம். அங்குள்ள கலையரங்கில், கலை நிகழ்ச்சி தமிழ்நாட்டு கலாச்சாரப்படி, நாட்டியம், கோலாட்டம், சிலம்பாட்டம், அவதி நாட்டியத்தையும் கலந்து செய்தனர். இரவு சிற்றுண்டிக்குப் பின், அங்குள்ள ஹோட்டல் அருகில் இரவு 12 மணி அளவில் தங்கினோம்.

டிசம்பர் 9

காலை குளித்து முடித்து பொருட்களுடன் பஸ்ஸில் ஏறி டிபன் சாப்பிட்டு, அயோத்தி கோயிலுக்கு சுமார் ஒரு கி.மீ. தூரத்தில் இறக்கி விட்டனர். கோயிலுக்குள் பெல்ட், டிஜிட்டல் வாட்ச் போன்றவற்றை எடுத்துச் செல்லக்கூடாது என்ற கட்டளை. எங்களுக்கு தனி வரிசை. இதில் மற்றவர்கள் சேர முடியாமல், போலீஸ் நின்று கண்காணித்தனர். இதில் மற்றவர்கள் அவர்களை தள்ளுவண்டியில் உட்கார வைத்து அழைத்துப் போகச் சொல்கிறார்கள். நான் மெதுவாக நடப்பதைப் பார்த்த சிலர், ‘தள்ளு



வண்டியில் செல்லலாமே’ என்று கூறியவர்களிடம் ‘பரவாயில்லை’ என்றாலும், நடப்பதற்கு கஷ்டப்பட்டேன்.



கட்டி முடிக்கப்பட்ட அயோத்தி ராமர் கோயில் முழுவதும், வெளிர்சிவப்பு நிறச் சலவைக் கல்லால் கட்டப்பட்டிருந்தது. வட இந்தியக் கட்டிடக் கலை. கட்டிடத்தின் ஒவ்வொரு பகுதியும் நுணுக்கமான வேலைப்பாடுகள். கோயிலின் முதல் தளத்தில் பாலராமரையும், இரண்டாம் தளத்தில் ராமர் சீதையுடன் அனுமனையும் தரிசனம் செய்தேன். மேலே செல்ல லிப்ட் வசதி இருந்தது எனக்குத் தெரியாது. அங்கிருந்து புறப்பட்டு 11.30 மணி அளவில் சரயு நதிக்குச் சென்றோம். கரைபுரண்டு ஓடும் தண்ணீரில் சிலர் குளித்தனர். நான் தலையில் தண்ணீரை எடுத்து தெளித்துக் கொண்டேன். 12.45 மணிக்கு அனுமார் கோயிலில் மதியச் சாப்பாடு. அங்கிருந்து வரும் வழியில் ‘காதி கிராப்ட்’ ரங்கிற்கு அழைத்துச் சென்றனர் அதைப் பார்த்துவிட்டு இரவு ‘தி பாரீசில்’ இரவு சாப்பாடு. 10 மணி அளவில் வாரணாசி ஜங்ஷனுக்கு சென்றோம்.

எல்லோருடைய பொருட்களும் பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டன. நான் இறங்கிய பஸ்ஸில், கங்கை நீரை வைத்துவிட்டேன் என்று பாஸ்கரிடம் சொல்ல, அவர் போய் எடுத்து வந்து தந்தார். நடைமேடைக்கு சென்றோம். 11:30 மணிக்கு ரயில் புறப்பட்டது. டிசம்பர் 10, 11 ஆகிய இரண்டு நாட்களும், இரயில் பயணத்தில் உணவு, உபசரிப்பு எனச் சிறப்பான கவனிப்புடன் கடந்தன. 11 தேதி இரவு, பெரம்பூர் ரயில் நிலையத்தில் எங்களால் வாங்க முடியாத பொருட்கள் அடங்கிய பையைப் பெற்றுச் செல்ல, இந்தப் பரபரப்பான சூழலிலும் மறக்காமல் கடைசி நேரத்தில் கொடுக்க, ரவிச்சந்திரன் ஏற்பாடு செய்திருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டு மனதார அவரை மானசீகமாகப் பாராட்டினோம்.

டிசம்பர் 12

விடியற்காலை 4:30 மணியளவில் சேலம் ஜங்ஷன் இறங்கினேன். சேலத்தில் என்னை ஏற்றி விட்ட மணிகண்டன் வந்திருந்து என்னை வரவேற்றார். ரயிலில் டிசம்பர் 3 ஆம் தேதி இரவு ஏறி, டிசம்பர் 6 ஆம் தேதி காலை வரையிலும், மீண்டும் ஊர் திரும்ப 9 ஆம் தேதி வாரணாசியில் ஏறி 12 ஆம் தேதி அதிகாலை




வரை, குறிப்பிட்ட காலத்தில் டீ, காபி டிபன், சாப்பாடு, பழம், வாட்டர் பாட்டில் எனக் கொடுத்த வண்ணம் இருந்த இதற்கு ரயில்வே கேட்டரிங் கொடுத்த உழைப்பு மிகமிக அதிகம்! கொடுத்த உணவும் அனைத்து வகைகளிலும் சுவையாகவும் தரமாகவும், சேவை மனப்பான்மையுடனும் செய்த தற்கு எங்கள் சார்பிலும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

சுற்றுலா செல்பவர்களுக்கு இவர்களுடைய சேவை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். காசி, பனாரஸ் ஒவ்வொரு தெருக்களிலும் ‘தமிழ் கற்கலாம் வாங்க’ என மூன்று மொழிகளில் பெரிய போஸ்டர்கள் ஒட்டப்பட்டு இருந்தன. அனைத்து போஸ்டர்களிலும் பிரதமர் மோடியின் படம் மட்டுமே. சிலவற்றில் உத்தரப்பிரதேச




முதல்வர் யோகி ஆதித்யநாத் படம். சிலவற்றில் இருவரின் படங்கள் மட்டுமே. தெருமூலை அலுவலகம் முன் போன்ற முக்கிய இடங்களில் போஸ்டரில் உள்ளதுபோல் பெரிய பெரிய பேனர்கள். இவைகளைப் பார்த்ததும் தமிழ்நாட்டில் ஒட்டப்படுகின்ற போஸ்டர்களும் பேனர்களும் நினைவுக்கு வந்தன.



சென்றிருந்த அனைவருக்கும் சிவப்பு கம்பள வரவேற்பு, சமமாக மதித்து கௌரவிக்கப்பட்டது பாராட்டுக்குரியது, பேருந்தில் ஏறும்போது அனைவரும் வந்து விட்டார்களா என அதில் வரும் வழிநடத்துனர் தகவல் சொன்ன பிறகு புறப்பட்டது. ஒருவர் வரத் தாமதமானாலும், அவர் வந்த பிறகு பேருந்துகள் வரிசையாக சென்றன. எந்த பேருந்தில் எந்த எண் உள்ள இடத்தில் உட்காருகிறோமோ அதே இடத்தில் கடைசி வரை அமர்ந்து பயணம் செய்தனர். ஒவ்வொரு பேருந்திலும் வழிகாட்டி ஒருவர் இருந்தார்கள். பேருந்து செல்லும் போது மற்ற போக்குவரத்தை காவல்துறையினர் நிறுத்தி விடுகின்றனர். வெளியூர் சென்றாலும் அந்தந்த மாவட்ட காவல்துறையினர் பாதுகாப்பு கொடுத்தனர்.

திரிவேணி சங்கமம், அயோத்தி போன்ற இடங்களுக்குப் போகும்போது துப்பாக்கியுடன் கூடிய போலீஸ் ஜீப் முன்னும் பின்னும் வந்தன. கலந்து கொண்ட அனைத்து தலைவர்கள், சிறப்பு விருந்தினர்களுக்கு எப்படிப்பட்ட வரவேற்பளிக்கப்பட்டதோ, அதே வரவேற்பு கலந்து கொண்ட காசி தமிழ் சங்கத்தினர்களுக்கும் வழங்கப்பட்டது. நினைவுப் பரிசும் ஒரே மாதிரிதான்! ஆளுயர மாலைகள், நீளமான சால்வைகள், அங்க வஸ்திரங்கள். இங்கே




சரவெடிகள் பார்த்து பழக்கப்பட்ட எங்களுக்கு இந்த வரவேற்பு ஆச்சரியத்தை தந்தது.

நகரம் முழுக்க வண்ண விளக்கு அலங்காரங்கள். யாவும் தேசியத்தை நினைவூட்டியது. இதேபோல்தான் பலூன் அலங்காரமும். எந்த நிகழ்ச்சியிலும், போஸ்டரிலும், பேனர்களிலும், மின் வண்ண அலங்காரத்திலும், கொடுக்கப்பட்ட பலவித பொருட்கள் அடங்கிய பைகளிலும், அரசியல் கட்சியின் சின்னமா, பெயரோ இல்லை! எல்லா இடத்திலும் 'காசி தமிழ் சங்கம் 2025' என்பதும் அதற்கான சின்னமும் இருந்தன.

காசி தமிழ்ச் சங்க சங்கமத்தில் கலந்து கொள்ள கட்டிய 1500 ரூபாய் பணத்தை 2026 ஜனவரி 5—ல் சம்பந்தப்பட்டவர்கள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது ஆச்சரியப்பட வைத்தது. காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சிகளில் எந்தவித சிபாரிசோ, இலஞ்சமோ சுத்தமாக இல்லை என்பது நிதர்சனமான உண்மை!

'காசி தமிழ்ச் சங்கமம்' ஆன்மிகப் பயணம், முதன் முதலில் 2022—ல் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நான்காவது தொடர் பயணம் ஆகும். இந்த நான்கு பயண நிகழ்வுகளில் பிரதம நரேந்திர மோடி, உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத், தமிழ்நாடு கவர்னர் ஆர்.என். ரவி அவர்கள் தொடர்ந்து கலந்து கொண்டு சிறப்பித்து வருவதற்கு தமிழர்கள் சார்பில் நன்றி தெரிவிக்க வேண்டும். 'தமிழைப் போற்றுகிறோம்! தமிழைப் பாதுகாக்கிறோம்! தமிழை வளர்க்கிறோம்!' என்று சொல்லி தமிழகத்தில் சிலர் தங்களை வளர்த்துக் கொண்டிருக்கிற நிலையில், தமிழ், தாய்மொழியாக இல்லாத இந்த மூவரும் முக்கியத்துவம் கொடுத்து செய்து வரும் தொண்டினைப் பாராட்டுவதுடன் இவர்களுக்கு நாம் நன்றி கடன் பெற்றவர்கள் என்று சொன்னால் மிகையல்ல!

மொத்தத்தில், எங்கோ கிராமத்தில் இருந்த ஒருவரையும், தென்னாட்டில் இருந்து வடநாட்டுக்கு வரவழைத்து, பாரம்பரிய தலங்களைப் பார்வையிடச் செய்ததோடு, தமிழின் பெருமை இமயம் முதல் எப்படி விரவிக் கிடக்கிறது என்பதையெல்லாம் பறைசாற்றியது இந்தப் பயணம். தமிழர்கள் ஒவ்வொருவரும் வாழ்வில் ஒருமுறையேனும் மேற்கொள்ளப்பட வேண்டிய புனிதப் பயணம் இது என்பதுதான் நான் கண்ட உண்மை!

# மன்றத்தில் ஒரு கால்

மன்றத்தில்தான் வருவேன் என்று
நீ சொன்ன வாக்கை மறந்து
குவலயம் எங்கும் தேடியலைந்து
நீர் குடிக்கப் பொய்கை அடைந்து
குகை தேடும் படலத்தின் முடிவில்
கிடைத்தது
பசும்பொன் கடந்த கானம்

எஞ்சிய சொற்களை
ஒன்று திரட்டி
ஒற்றைக் கூந்தலில்
மாலை தொடுத்து
நடன மங்கைக்கு அணிவித்து
பதிலாகக் கால் சலங்கையின்
நாதத்தை மட்டும்
கேட்டுப் பெறும் வைபவம்
நிறைவேறும் தருணத்தில்
மன்றம் நிறைத்துப் பொழிந்த
மழையின் அருளால்
குளிர்ந்தது மேனி

தவத்திற்க்கு
ஒற்றைக் கால் போதுமெனில்
இன்னொரு காலை என்ன செய்ய?




ஆனந்த்



சரித்திரத் தொடர்

# சேரமான் கனவு

## பாகம் - 2 அத்தியாயம் 15

### 15 "பொறையாறு கொண்ட பெருவீரர் வருக!"

**கொற்றவன்**

கதிரவன் தன் கடமை முடித்துத் திரும்பும் அந்தப் பொன்னந்தி வேளையில், வஞ்சி மாநகரம் பொன்மயமாய் பொலிந்தது.

இன்னும் நில நாழிகைகளில் இருள் சூழ்ந்து விடும் என்பதை வானில் நீந்திய மேகங்கள் தங்கள் பொன்னிறத்தை மாற்றுவதன் மூலம் கோடிட்டுக் காட்டின.

நகரின் எல்லைப் பகுதியாக அமைந்திருந்தது அந்த எழில்சூழ் சோலைவனம்.

அன்றையத் தேடல்களை முடித்துக் கொண்டு தத்தமது இருப்பிடங்களான அந்த அடர்சோலைவனத்தின் மரங்களிலும் கொடிகளிலும் கூடடைவதற்காகப் பலவிதமான கானங்களைப் பாடியபடி, புள்ளினங்கள் விரைந்து வந்தன.

வானத்தில் நீந்திய மேகங்களையும், படபடவெனச் சிறகடித்தபடி வந்த பறவைகளின் வருகையையும் ரசித்தபடி, நான்கு குதிரைகள் பூட்டப்படிருந்த அழகிய ரதத்தில் அமர்ந்திருந்தான் வில்லவன்.




அந்த ரதத்தைச் சுற்றிலும் குதிரை வீரர்கள் சிலரும் குழுமியிருந்தனர். அங்கே நின்றிருந்த அவ்வீரர்களில் ஒருவன் கூறினான்.

"எப்படிப் பார்த்தாலும், உச்சிப் பொழுது முடிவதற்குள் அவர்கள் வந்து சேர்ந்திருக்க வேண்டும்! காலதாமதம் ஏனென்று புரியவில்லை!"

"அதனாலென்ன? வரும்வழியில் இடையே எங்கேனும் ஓய்வெடுத்திருக்கக் கூடும்!" எனப் பதிலளித்தான் அந்தத் தேருக்குச் சாரதியாக அமர்ந்திருந்தவன்.

"எப்படியும் இருட்டுவதற்குள் இந்த வனப்பகுதியைக்கடந்து இந்தச்சோலைவனத்தையும் தாண்டி அவர்கள் வந்து விடுவார்கள்!" என்றான் வில்லவன்.

அந்த வார்த்தைகளை அவன் கூறி முடித்த அடுத்த நொடி, குதிரைகளின் குளம்படிச் சத்தம் தொலைவில் ஒலித்தது. அதைத் தொடர்ந்து வரிசையாக குதிரை வீரர்கள் வந்து கொண்டிருப்பதும் தெரிந்தது.

அந்த குதிரைவீரர்களில் முதலாவதாக வந்தவன் வளவத் திரையன்.

தன்னை எதிர்நோக்கி ரதத்தில் காத்திருக்கும் வில்லவனைக் கண்டதும் அவன் மனத்தில் பெரும் பூரிப்பு கிளர்ந்தெழுந்தது.



ரதத்தை அவன் நெருங்கும் போது அங்கே வாழ்த்தொலி எழுந்தது.

“பொறையாறு கொண்ட பெருவீரர் வருக!”

“நெடுமுடியானைச் சாய்த்த படைவீரர் வருக!”

“கோட்டையை மீட்ட வேட்டைக்காரர் வருக”

“கடலரசியை வழிநடத்திய கப்பல் தலைவர் வருக!” —இவ்வாறாக அங்கிருந்த வீரர்கள் எழுப்பிய கோஷங்களால் அந்த எல்லைப்பகுதி அதிர்ந்தது.

அப்படி ஒரு வரவேற்பு கிடைக்குமென சற்றும் எதிர்பாராத வளவத் திரையனுக்கும், அவனது வீரர்களுக்கும் அது பயணக் களைப்பையும் மீறிய புத்துணர்வையும் மகிழ்வையும் தந்தது. வேகமாக வந்து நின்ற வளவத்திரையன், குதிரையில் இருந்து குதித்து நின்றான்.

அதேநேரம் ரதத்தில் இருந்து குதித்த வில்லவன், இரு கரங்களையும் நீட்டியபடி வளவத் திரையனை எதிர்கொண்டழைத்து கட்டி அணைத்தான்.

பேரன்பால் ஏற்பட்ட அந்தப் பிணைப்பில் கட்டுண்ட இருவருக்குமே சில கணங்கள் பேச்சற்ற நிலை ஏற்பட்டது.

“என்ன சொல்வதென்றே தெரியவில்லை திரையா! உன்னிடம் ஒப்படைத்த எந்தக் காரியத்தையும் வெற்றியுடன் முடித்து காட்டும் உன் ஆற்றலை எப்படிப் பாராட்டுவேன்?” தன் அணைப்பினூடாகவே அதனைத் தெரிவித்தான் வில்லவன்.

“என் மீது நம்பிக்கை கொண்டு சக்கரவர்த்தியாரும் தாங்களும் பொறுப்பினை ஒப்படைப்பதற்கு நானல்லவா நன்றி பாராட்ட வேண்டும்!”

அவ்வாறு நின்று உரையாடிக் கொண்டிருந்தவர்களைக் கண்டவர்களில், உதயணன், மதியொளி போன்ற வெகு சிலர் மட்டுமே அவர்களது நட்பின் ஆழத்தை உணர்ந்தவர்களாகவே இருந்தனர்.

“சரி, நேரமாகிக் கொண்டிருக்கிறது. போகும் வழியில் அனைத்தையும் பேசிக் கொள்ளலாம். ரதத்தில் ஏறு திரையா!” என்ற வில்லவன், முதலில் ஏறி அமர, அவனைத் தொடர்ந்தாற்போல ஏறியமர்ந்தான் வளவத் திரையன்.

தேர் புறப்படத் தயாராகும் போது, வில்லவன் தன்னுடன் வந்த வீரர்களிடம் கூறினான்.

“நீங்கள் அனைவரும், திரையரோடு



வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு, நகருக்குள் பிரவேசிக்காமல், வெளிவட்டப் பாதையில் சென்று, கோட்டையின் தெற்கு வாயில் வழியே உள்ளே செல்லுங்கள்!” என்றவன், தன் அருகே இருந்த குதிரைவீரனைப் பார்த்துச் சற்றுக் குரல் தாழ்த்தியபடி, “நீ உதயனையும் மதியொளியையும் மாளிகைக்குள் அழைத்துச் சென்று எங்கள் வருகையை அமைச்சரிடம் தெரிவி!” என்றான்.

“அவ்வாறே ஆகட்டும்!” என்றான் குதிரை வீரன்.

வில்லவனின் ஆணைக்கிணங்க, வீரர்கள் கூட்டம் அங்கிருந்து நகரத் தொடங்கியது.

அடுத்த சில நாழிகைகளில் அந்த சோலை வனத்தின் முன்பகுதி வெறிச்சோடிப் போனது இருளில் மூழ்கிப் போனது.

முன்னிரவு நேரத்தில் வஞ்சி மாநகருக்குள் நுழைந்தது வில்லவனின் தேர்.

இருவரும் நிறையவே பேசிக் கொண்டு வந்தார்கள்.


பொறையாற்றுக் கோட்டையை கைப்பற்றிய விதத்தையும், சேர மாமன்னருக்கும், சோழ மன்னன் கிள்ளி வளவனுக்கும், நெடுமுடியான் தந்து கொண்டிருந்த தொல்லைகளையும், அதையும் தாண்டி பாண்டியர்களுடன் சேர்ந்து கொண்டு ரகசியமாகவே சேர, சோழ மன்னர்களைக் குறிவைத்து பெரும் சதித் திட்டங்களையும் செய்யத் திட்டமிட்டிருந்ததையும் எடுத்துரைத்தபடி வந்தான்.

வில்லவனுக்கு இதையெல்லாம் கூறிக் கொண்டு வந்தாலும், அனைத்தையும் ஆராயும் வளவத்திரையனின் கண்கள் தீவிரமான ஆராய்ச்சியை மேற்கொண்டிருந்தன.

வஞ்சி மாநகரின் அழகையும், வீதிகளையும், இருமருங்கிலும் எழிலுடன் விளங்கும் மாடமாளிகைகளையும், வீதிகளில் வருவோர் போவோரையும் கடை வீதிகளையும் அந்தக் கண்கள் அலசிக் கொண்டே இருந்தன.

ஆங்காங்கே ஏற்றிய அகல்களும், தொங்கு விளக்குகளும் அந்த வீதியில் இருக்கும் ஆலயங்களின் அழகை க் கவினுறு ஓவியங்களாகக் காட்டியது. பொழுது போன பின்பும் அங்கே கூடும் பக்தி மயமான பெண்டிரையும் கவனிக்கத் தவறாத வளவத்திரையன், வில்லவன் கூறியதைக்





கேட்டு அவன் பக்கம் திரும்பினான்.

“திரையா, இன்றிரவு வஞ்சி மாளிகையில் மந்திராலோசனைக் கூட்டம் நடைபெற இருக்கிறது. மிக முக்கியமான விவரங்கள் பேசப்பட இருக்கின்றன.”

“அப்படியா? அதற்காகத்தான் என்னை அங்கிருந்து விரைவாக வரவழைத்தீர்களா?”

“உன்னை வரவழைத்தது மட்டுமல்ல, என்னையும் கூட முசிறிக்குச் செல்லாமல், இங்கேயே இருக்கச் சொல்லி ஆணை!”

“பேரரசரின் ஆணையை மறுக்க முடியுமா?”

“அதுதான் இல்லை! இந்தக் கூட்டத்துக்கு காரணம், இளங்கோ அடிகள்தான்!”

“யார்? உங்கள் சிற்றப்பாவா? அவர்தான் அரசாங்க விஷயத்தில் தலையிடாமல் ஒதுங்கி அறவாழ்க்கை வாழ்கிறாரே! அவர் எப்படி?” வளவத் திரையன் முடிப்பதற்குள் குறுக்கிட்டான் வில்லவன்,

“அது ஒருபுறம்! ஆனால் அரசாங்க விஷயங்கள் ஏதும் அவர் கவனத்துக்குச் செல்லாமலும், அதில் அவரது தலையீடு இல்லாமலும் இருப்பதில்லை! ஆட்சி அதிகாரத்தைத் தான் அவர் விரும்பவில்லையே தவிர்த்து, சேரநாட்டின் நலன் மீது அவரது கவனம் எப்போதும் இருக்கும்.” என்ற வில்லவனின் வார்த்தைகள் மூலம், அவனுமே அரசாங்க விவரங்களில் எவ்வளவு தெளிவாக இருக்கிறான் என்பதையும் வளவத் திரையன் உணர்ந்து கொண்டான்.




மீண்டும் அவனது கவனம் நகரின் சாலைகளில் திரும்பியது.

ஓராண்டுக்கு முன் இதே வீதிகளில் தன்னந்தனியனாய் அலைந்து திரிந்ததும், வில்லவனைக் கண்ட பின், தன் நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டதும், கப்பல் தலைவனாக மாறியதும், இதோ இப்போது சேரநாட்டின் உயர் மந்திராலோசனையில் தானும் கலந்துக் கொள்ளும் அளவுக்கு பாக்கியம் பெற்றதுமான எல்லாமும் வில்லவனின் நட்பு தந்த உயரமல்லவா? என எண்ணிக் கொண்டான்.

முன்பொரு சமயம், சோழநாட்டுக் கடற்போரின் போது, வில்லவன் மீது பாயவிருந்த வேலைத் தடுத்ததும், அதன் பின் சோழ நாட்டுக் கலவரங்களை அடக்க தந்தையோடு நின்ற தனையனான வில்லவன் மேல் பாய்ந்த விஷ அம்புகளைத் தடுத்ததும், ஒரு வீரனாகப் போர்க்களத்தில் வளவத்திரையன் செய்ததோடு சரி!

அது எந்த வீரனும் செய்யக் கூடிய செயல்தான் என்றாலும், அந்தச் சம்பவங்களை, அதன் பின் வந்த நாட்களிலும் நினைவு வைத்து, தன்னை நண்பனாக ஏற்றுக் கொண்ட வில்லவன் எங்கு சென்றாலும், தன்னையும் உடன் இருக்க வேண்டும் என நினைப்பதும், அவனுக்கு இணையான மரியாதையை கிடைக்கும்படிச் செய்வதுமாய்

இருப்பது வளவத் திரையனை நெகிழச் செய்து கொண்டே இருந்தது.

இதோ இப்போதும் கூட, தன்னைச் சரிசமமாக ரதத்தில் வைத்து அழைத்துச் செல்கிறான். இதில் வேடிக்கை என்னவென்றால், பொதுமக்களில் பலரும் வில்லவனை இளவரசன் என்றறிய வாய்ப்பில்லை!

ஆனால், தேரில் வரும் தன்னையோ, கடலரசியின் கப்பல் தலைவன் என்ற முறையிலும், விரைவில் சேரநாட்டு அரசின் மதிப்பு மிக்க பதவிக்கு வர இருப்பவன் என்பதுமாக அங்கே பலரும் பார்க்கிறார்கள் என்பதையும் உணர்ந்திருந்தான் வளவத்திரையன்.

அந்த எண்ணம் உள்ளத்தில் ஓடிக் கொண்டிருக்கையில், சட்டென நினைவு வந்தவனாய் வினவினான்.

“தியோதாராவும் தாலியாவும் நலமாய் இருக்கிறார்கள் அல்லவா?”

அதைக் கேட்டதும் வில்லவனின் முகத்தில் நெற்றிச் சுருக்கங்களுடன் சில கவலைக் கோடுகள் ஓடியதைக் கவனிக்கத் தவறவில்லை அவன். அதுகுறித்து சில விவரம் இருக்கிறது பிறகு பேசலாம் என்பதுபோல, தலையசைத்தாலும், வில்லவன் பதிலளித்தான்.


“யாவரும் நலம்தான். அது குறித்தும், பொறையாறு நிலவரம் குறித்தும், பிறகு பேசலாம்!”

வில்லவன் அவ்வாறு கூறியது கயல்விழியின் நிலையைத்தான் என்பதை உணர்ந்த வளவத்திரையன் ஆமோதிப்பவனாய் தலையசைத்தான்.

சற்றைக்கெல்லாம் அந்தத் தேர், வஞ்சிக் கோட்டையின் கிழக்கு வாசலை வந்தடைந்து நின்றது.

வாசலுக்கு முன்னே கோட்டை மதிலைச் சுற்றிலும் வளைந்து வளைந்து நீண்ட அகழி, ஆழமாகவும் அகலமாகவும் இருந்தது.

அவ்வளவு எளிதில் அக்கோட்டைக்குள் யாரும் நுழைந்து விட முடியாது என்பதனை உணர்த்தும் விதமாக, அகழியில் உலவிய முதலைகள் தண்ணீரில் புரண்டு புரண்டு தாவிக் குதித்து எச்சரிக்கை விடுத்தன.



கோட்டைவாசலின் வெளிப்புறத்தில் காவலர்கள் வாளும் வேலுமாக நின்றிருந்தனர். தேரின் வருகையைக் கண்டதும், வீரர்கள் அனைவரும் சிரம் தாழ்த்தி வணங்கினர்.

பெருங்கதவு திறந்தே இருந்திருந்தாலும், தேர் கோட்டை வாசலைக் கடக்காமல் அங்கேயே நின்றதன் காரணம் புரியாமல் சிந்தித்த வளவத் திரையனுக்கு, அடுத்த சில நொடிகளிலேயே விளக்கம் கிடைத்தது.

தேரின் வருகையை அறிவிக்கும் வண்ணம் காவலில் இருந்த ஒரு வீரன், கொம்பு ஊதினான். அதைத் தொடர்ந்து சற்றுதூரத்தில் குதிரைகளின் குளம்படிச் சத்தம் கேட்டது.

குதிரை வீரர்கள் இருவர், விரைந்து வந்து தேருக்கு முன் நின்றனர்.

இனி போகலாம் என்பது போல மீண்டும் தலைவணங்கிய காவல் வீரரகள், தேருக்கு வழிவிட்டு நின்றனர்.

குதிரை வீரர்கள் கோட்டைக்குள் தங்கள் குதிரையை நடைபயிலச் செய்யும் விதமாக ஒயிலாகச் செலுத்த, தேர் கோட்டைக்குள் நுழையத் தொடங்கியது.

வெளிச்சுற்று முடிந்து உக்கோட்டைக்கு தேர் வந்த போது, அங்கிருந்த வீரர்கள் குழுவினரால் கொம்பு ஊதப்பட்டது. மேளங்கள் முழங்கப்பட்டன.

அந்த ஒலியைக் கேட்டதும், உக்கோட்டையின் கனத்த கதவுகள் யானையின் பிளிறல் போல திறந்து தேருக்கு வழி விட்டது.

மீண்டும் வாழ்த்தொலி எழுந்தது.

சற்று நேரத்துக்கு முன் சோலைவனத்தில் வளவத் திரையனை வில்லவன் எதிர்கொண்டபோது ஒலித்த அதே முழக்கம் அங்கும் எழுப்பட்டது.

இம்முறை வீரர்களுடன் சேர்ந்து, அரண்மனைச் சேடிப் பெண்களும் அம்முழக்கத்தை எழுப்பினர்.

“பொறையாறு கொண்ட பெருவீரர் வருக!”

“நெடுமுடியானைச் சாய்த்த படைவீரர் வருக!”

“கோட்டையை மீட்ட வேட்டைக்காரர் வருக”

“கடலரசியை வழிநடத்திய கப்பல் தலைவர் வருக!”

கோட்டை வாயிலில் எழும்பிய அந்த முழக்கம், தேர் கனக மாளிகை முன் சென்று நிற்கும் வரை தொடர்ந்து ஒலித்தது.

(கனவு தொடரும்...)


HAPPY
Anniversary
CELEBRATION
VARSHA
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA
17
YEARS
THANK
YOU

# சம்பளம் ஏற்றட்டும் சம்பாலா!



## சம்பாலா வெல்லட்டும் கலக்கலா!

தமிழ் மற்றும் தெலுங்கு என இரு மொழிகளிலும் தொடர்ச்சியாக பல்வேறு படங்களில் நடித்து வரும் சந்தீப் கிஷன் நடிப்பில் பேன் இந்தியா படமாக, 'சம்பாலா' படம் உருவாகிறது. தற்போது விஜய் மகன் ஜேசன் சஞ்சய் இயக்கும் 'சிக்மா' படத்தில் நடித்து வரும் சந்தீப் கிஷன், 'சம்பாலா' படத்தின் அறிவிப்புக்காக வெளியிடப்பட்ட போஸ்டர் இணையத்தில் கவனத்தை ஈர்த்துள்ளது. சோஷியல், ஃபேன்டஸி த்ரில்லர் பாணியில் உருவாகும் இப்படத்தை, தமிழ், தெலுங்கு, இந்தி என மூன்று மொழிகளிலும் உருவாக்க, படக்குழு திட்டமிட்டுள்ளது.




# 'மேட் இன் கொரியா' தந்த புகழ்!



## பிரியங்காவுக்கு பிரியமான கொரியா?

'மேட் இன் கொரியா' படம் திரையரங்குகளில் வெளியாகாமல் நேரடியாக நெட்ஃபிளிக்ஸ் தளத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி உள்பட 12 மொழிகளில் வெளியானது. தமிழ்நாட்டில் ஒரு சிறிய கிராமத்தைச் சேர்ந்த பிரியங்கா மோகன், கொரிய கலாசாரத்தின் மீதுள்ள ஈர்ப்பால் தென் கொரியாவிற்குச் சென்று சவால்களை சந்திப்பதாக எடுக்கப்பட்ட இப்படம், ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்ற நிலையில், படத்தின் வெற்றியைப் படக்குழுவுடன் சேர்ந்து நெட்பிளிக்ஸ் கொண்டாடியதில், பிரியங்கா மோகன் குதூகலத்தில் இருக்கிறார்.



## இலங்கையில் ஒரு கல்யாண கலாட்டா!

## 'நீளிரா' வெற்றியில் நீந்தட்டும்!

இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கையை மையமாக வைத்து தற்போது பல படங்கள் தயாராகி வருகிற நிலையில், 'நீளிரா' என்ற படத்தை பாலு மகேந்திராவின் உதவியாளர் சோமிதரன் இயக்குகிறார்.

இந்தப் படத்தில் நவீன் சந்திரா, சனத், ரூபா கொடுவாயூர், கபிலா, விது, ஆகியோர் நடிக்கிறார்கள். இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் மற்றும் ஸ்பிரிட் சார்பில் நடிகர் ராணா டகுபதி ஆகியோர் தயாரிக்கின்றனர்.

## பைசா வசூல் செய்யும் பைஜூ!

## மளமளவென ஏறும் மமிதா!

விக்னேஷ் ராஜா இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள 'கர' படத்தில் மமிதா பைஜூ கதாநாயகியாக நடித்துள்ளார். ஜி.வி. பிரகாஷ் இசையில், கிராமத்து கதைக்களத்தில் உருவாகியுள்ள இந்தப் படம் ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வெளியாக உள்ளது. படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் டைட்டில் வீடியோ ஆகியவை வெளியாகி படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரிக்கச் செய்த நிலையில், மமிதா பைஜூவின் கதாபாத்திர அறிமுக போஸ்டரும் வெளியாகி மமிதாவின் புகழைப் பரபரப்பாக்கியுள்ளது.



# தலவலம்

## இரும்பை மகாகாளேஸ்வரர்

### மாகாளர் கோயில்

புவனகிரி செயபாலன்

தேவாரப் பாடல் பெற்ற 272 சிவாலயங்களில் இது 265 வது தொண்டை நாட்டுத் தலங்களில் 32 வது தலமாகும்.

“பூசு மாசில் பொடியான் விடையான் பொறுப்பான் மகன்
கூச ஆணை உரித்த பெருமான் குறை வெண்மதி
ஈசன் எங்கள் இறைவனிடம் போய் இரும்பை தனுள்
மாசிலோர்கள் மலர் கொண்டு அணிகின்ற மாகாளமே”
திருஞானசம்பந்தர் தேவாரம்

மாகாளர் (காலன்) வழிபட்ட தலம் என்பதால் இது இரும்பை மாகாளம் என்று அழைக்கப்படுகிறது.

இறைவன்.... மாகாளநாதர், மகா காளீஸ்வரர்.

இறைவி.... குயில் மொழி நாயகி, மதுரை சுந்தரநாயகி.

தீர்த்தம்..... மாகாண தீர்த்தம்.

விமானம்.... ஏகத்தள விமானம்.



தலவிருட்சம்.... புன்னை.

தொன்மை... 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

பாடல்.... திருஞானசம்பந்தர், பட்டினத்தார், கடுவெளி சித்தர்.

தல வரலாறு

சிவனிடம் வரம் பெற்ற அம்பன், அம்பாசரன் எனும் இரு அரக்கர்கள் பார்வதி தேவி மீது ஆசை கொண்டு இருவரும் பார்வதியை திருமணம் செய்து கொள்ள விரும்பியதால் அவர்களை பார்வதி தேவி மகாகாளி அவதாரம்







எடுத்து வதம் செய்தாள். இதனால் பிரம்மஹத்தி தோஷம் பிடிக்க அம்பாள் இத்தளத்தில் சிவனை நோக்கி தவம் செய்து தோஷம் நீங்கப்பெற்றாள். பிற்காலத்தில் மகாகாளர் என்னும் மகரிஷி சிவதல யாத்திரையின் போது வடக்கே உஜ்ஜயினில் ஒரு லிங்கத்தையும், தெற்கே மயிலாடுதுறைக்கு அருகே அம்பர் மாகாளத்தில் ஒரு லிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து வணங்கினார். இத்தலத்தின் மகிமையை அறிந்து இங்கேயும் ஒரு லிங்கத்தை பிரதிஷ்டை செய்து வணங்கினார். எனவே இத்தல ஈசன் மாகாளநாதர் என்ற பெயர் பெற்றார்.

தல சிறப்பு

இத்தல ஈசன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். கருவறையில் லிங்கம் மூன்று பாகங்களாக பிளந்து மூன்று முகங்களுடன் இருக்கிறது. சிவன், பிரம்மா, விஷ்ணு என மும்மூர்த்திகள் என பாவித்து இந்த மூன்று பாகங்களையும் ஒரு செம்பு பட்டயத்தில் கட்டி வைத்து பூஜைகள் செய்யப்படுகிறது. சிவனின் மும்மூர்த்தி தரிசனம் மிகவும் அபூர்வமானது.

பார்வதி தேவி — கடுவெளி சித்தர்

அம்பாளின் திருநாமம் குயில்மொழி நாயகி. இவள் தனி சன்னதியில் இது தாமரை மலர் பீடத்தின் மேல் தெற்கு நோக்கி மகாலட்சுமி அம்சத்துடன் நின்ற கோலத்தில் அருளுகிறார்.

கடுவெளி சித்தர் அரச மரத்தின் அடியில் தவம் செய்த போது அம்பாள் குயில் வடிவத்தில் வந்து இந்த மரத்தில் தங்கி இருந்து சித்தரை கண்காணித்து அவரது தவத்தின் மேன்மையை தன் குரலால் சிவனிடம் சொல்வாளாம். இதனால் அம்பாளுக்கு குயில்மொழி நாயகி என்னும் பெயர் ஏற்பட்டது.




கோயில் அமைப்பு

சுமார் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பிரகாரத்துடன் அமைந்துள்ளது. இங்கு ராஜகோபுரம் இல்லை. முகப்பு வாயில் மட்டும் உள்ளது முகப்பு வாயிலின் வலது புறம் விநாயகர் சன்னதி, வாயிலை கடந்த உடன் நேரே வழிபீடம், கொடிமரம், நந்தி மண்டபம் ஆகியவை உள்ளன. பிரகாரம் மேற்கு சுற்றில் கருவறைக்கு பின்புறம் வள்ளி தெய்வானையுடன் மயில் மீது அமர்ந்து ஆறுமுகர் காட்சியளிக்கிறார். இச்சன்னதிக்கு அருகில் ருத்ர ரூபமாக கருதப்படும் கால பைரவர் தெற்கு நோக்கி தனி சன்னதியில் உள்ளார். பயம், தீவினை மற்றும் ராகு, கேது தோஷங்களை போக்கும் வல்லமை படைத்தவர். கிழக்கு பிரகாரத்தில் மேற்கு நோக்கியபடி சூரியன், சந்திரன் தனித்தனி சன்னதியில் உள்ளனர். பிரகார சுற்றுசுவர் உட்புறம் முற்றிலும் விதவிதமான உருவங்கள் பதிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா மற்றும் துர்க்கை உள்ளனர்.

சூரிய சந்திரன்

சூரிய பகவான் சிவனின் வலது கண்ணாக கருதப்பட்டு கிழக்கு நோக்கிய சன்னதியில் மேற்கு நோக்கி உள்ளார். ரதசப்தமி தை மாதத்தில்



இவருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடக்கிறது. மேற்கு நோக்கி தனி சன்னதியில் இடது கையில் ஏடு ஒன்றை வைத்துக்கொண்டு கலா சந்திரனாக காட்சி தருகிறார். பக்தர்கள் இவருக்கு பால் சாதம் நெய்வேத்தியமாக வைத்து வணங்குகின்றனர்.

ஆஞ்சநேயர்

சிவனின் 11—வது ருத்ர அவதாரமாக கருதப்படும் இத்தல ஆஞ்சநேயர், கைகளைக் கூப்பி ராம நாமத்தை ஜெபித்தபடி அருள் பாலிக்கிறார். இவருக்கு சனிக்கிழமைகளில் வெண்ணைக்காப்பு, வடை மாலை மற்றும் வெற்றிலை மாலை அணிவித்து வழிபட்டால் சனி தோஷம் மற்றும் தடைகள் நீங்கும்

நவக்கிரக சன்னதி

இத்தலத்தில் உள்ள நவக்கிரகங்கள் அனைத்தும், தத்தம் தேவியர்களுடன் இருக்கின்றனர். சூரியன், தாமரை மலர் மீது தன் இரு கால்களையும் மடக்கி வைத்து அமர்ந்து கொண்டு, உஷா, பிரத்யுஷா என இருவரையும், தன் இரு தொடைகளில் அமர்த்திய கோலத்தில் அருளுகிறார். சூரியனின் இந்த தரிசனம் மிகவும் விசேஷமானது.

நடராஜன்

அம்பாள் சன்னதிக்கு முன், இடது புறத்தில் நடராஜருக்கு தனி சன்னதி. இவரது கால்கள் சற்று கீழே மடங்கியபடி இருக்கிறது. இதனை நடராஜரின் சந்தோஷ கோலம் என்கிறார்கள். நடராஜர் சிவகாமியை சுற்றி அக்னி வளையமாக இருக்கிற நிலை வித்தியாசமானது. இவ்விடத்தில் நின்றுகொண்டு ஈசன், அம்பாள், நடராஜர் என மூவரையும் ஒரே நேரத்தில் தரிசனம் செய்யலாம். பின்புறத்தில் ஆறுமுகங்களுடன் மயில் மீது அமர்ந்து வள்ளி தெய்வானையுடன் காட்சி தருகிறார்.



பட்டினத்தார்

இத்தல ஈசனிடம் தனக்கு மறுபிறவி இல்லா வரம் வேண்டுமென

மாதா உடல் சலித்தாள்; வல்வினையேன்
கால் சலித்தேன்; வேதாவும் கைசலித்து விட்டானே
நாதா இரும்பையூர்; வாழ் சிவனே இன்னம்
ஓர் அன்னை கருப்பையூர் வாராமற்கா —
என பட்டினத்தார் பதிகம் பாடியுள்ளார்.

கடுவெளி சித்தர்

கடுவெளி சித்தர் என்பவர் அரச மரத்தின் அடியில் சிவனை எண்ணி தவம் செய்து கொண்டிருந்தார். அப்போது நாட்டில் சரியாக மழை பெய்யாமல் மக்கள் அனைவரும் வறுமையில் வாடினர். இவரின் தவத்தால் நாட்டில் மழை பெய்யவில்லை என்று எண்ணிய மன்னர் ஒரு தேவதாசியின் மூலம் அவரது தவத்தை கலைக்க செய்தாள்.

சித்தர் தவம் கலைந்து எழுந்தபோது மன்னன் அவரிடம் நாட்டின் பஞ்சநிலையை கூறி அதற்கு காரணமாக சித்தரின் தவம் இருந்ததோ என சந்தேகம் கொண்டு அவரை எழுப்பியதாக நடந்த உண்மைகளை கூறினான். மன்னனின் பேச்சைக் கேட்டு சித்தர் அவனுக்காகவும், மக்களுக்காகவும் மீண்டும் தவ வாழ்க்கையை தொடராமல் அங்கேயே தங்கி சிவ பணி செய்து வந்தார். அதன்பின் நாட்டில் மழை பெய்தது. மக்கள் பஞ்சம் நீங்க பெற்று சிவனுக்காக விழா எடுத்தனர்.

விழாவில் ஈசனை ஊர்வலமாக எடுத்துச் சென்ற போது அவருக்கு முன்பாக சித்தரின் தவத்தை கலைத்த தேவதாசி நடனம் ஆடியபடி சென்றாள். அப்போது அவளது காலில் அணிந்திருந்த சிலம்பு கீழே கழண்டு விழுந்ததை சித்தர் பார்த்து விட்டார்.

இவளின் நடனத்தால் செல்லும் ஊர்வலத்திற்கு தடை வந்துவிடக் கூடாது என்று நினைத்த சித்தர், சிலம்பை எடுத்து அவளது காலில் அணிவித்தார். இதை கண்ட மக்கள் இவரின் செயலை தவறாக பேசியதுடன் அவரை ஏளனம் செய்தனர்.

கோபமடைந்த சித்தர், நான் அமைதியாக இருப்பதை இம்மக்கள் தவறாக எடுத்துக் கொண்டார்களோ, அவர்களுக்காகத்தானே நான் அனைத்திலும் மேலான தவ வாழ்க்கை வாழ்ந்து



# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™



வந்தேன், என்று சிவனை வேண்டி பதிகம் பாடினார். தன் பக்தரான சித்தருக்கு சோதனை வந்ததால் கோவிலில் இருந்த சிவலிங்கம் மூன்று பாகங்களாக வெடித்து சிதறியது. உண்மையை உணர்ந்த மன்னன் சித்தரிடம் மன்னிப்பு கேட்க சித்தரும் அவனை மன்னித்து சிவனை வேண்டி மற்றொரு பாடலை பாடினார். சிதறிய லிங்கத்தின் பாகங்கள் ஒன்று சேர்ந்ததுடன் சிவன் சித்தருக்கு காட்சி தந்து முத்தி கொடுத்தார்.

கடுவெளி சித்தர் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றில் புகழ் பெற்றது “ஆனந்த களிப்பு” பாடல்கள் “பாவம் செய்யாதிரு மனமே” என தொடங்கி மனதை நல்வழி செலுத்தி பாவம் செய்யாமல் வாழ வலியுறுத்துகிறது. அவர் பாடியதில் இதுவும் ஒன்று.

நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன் —


நாலாறு மாதமாய் குயவனை வேண்டிக்

கொண்டு வந்தானொரு தோண்டி — மெத்தக்

கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி!

கல்வெட்டு

இங்குள்ள கல்வெட்டுகள் குலோத்தங்க சோழன் காலத்தை சேர்ந்தவை. அதில் இத்தலத்துக்கு திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளதாக பதிக்கப்பட்டுள்ளது.




திருவிழா

ஆனி — திருமஞ்சனம், ஆடிப்பூரம் — கிருத்திகை, ஆவணியில் — விநாயகர் சதுர்த்தி, புரட்டாசியில் — நவராத்திரி விழா, ஐப்பசியில் — அன்னாபிஷேகம், கந்தசஷ்டி விழா, கார்த்திகையில் — சோம வர பூஜை, கார்த்திகை தீபம், மார்கழி — ஆருத்ரா தரிசனம், தை — பொங்கல் பண்டிகை, மாசியில் — மகாசிவராத்திரி, மாசி மகம், பங்குனி உத்திரம், சித்திரை — தமிழ் வருடப்பிறப்பு, சித்ரா பௌர்ணமி, வைகாசியில் — பிரம்மோற்சவம் நடைபெறும்.

பிரார்த்தனை — நேர்த்திக்கடன்

ஆயுள் விருத்தி பெற ஈசனிடம் வேண்டிக் கொள்கிறார்கள். உண்மையுடன் நடந்து அவப்பெயர் எடுத்தவர்கள் அவப்பெயர் நீங்க இங்கு பிரார்த்தனை செய்கிறார்கள். பிரார்த்தனை நிறைவேறியதும் சுவாமிக்கு வஸ்திரம் சாத்தி சிறப்பு அபிஷேகம் செய்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

பேச்சு சரியாக வராதவர்கள், இசைக் கற்பவர்கள், இசை கலைஞர்கள் அம்பாளுக்கு தேன் அபிஷேகம் செய்து வழிபட்டு அதனை நாக்கில் தடவிக் கொள்கின்றனர். இவ்வாறு செய்வதால் குரல் வளம் சிறக்கும், கலைகளில் சிறந்து விளங்கலாம் என்பது நம்பிக்கை.

பூஜை

தினசரி நான்கு கால பூஜை, மேலும் சனிப்பெயர்ச்சி, குருப்பெயர்ச்சி, ராகு கேது பெயர்ச்சி, மாத பிரதோஷங்கள், தேய்பிறை, அஷ்டமி மற்றும் காலபைரவர் பூஜைகள் செய்யப்படுகிறது.

கும்பாபிஷேகம்

இரும்பை மாகாளேஸ்வரருக்கு 09.07.2008 இல் கும்பாபிஷேகம் நடந்தது. திருப்பணிகள் செய்ய ஆயத்த பணிகள் தொடங்கப்பட உள்ளன.

கோயில் திறக்கும் நேரம்

தினமும் காலை 5:30 மணி முதல், மதியம் 12:00 மணி வரை, மாலை 4:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை.

இருப்பிடம்

புதுச்சேரியில் இருந்து 10 கி.மீ. தொலைவிலும் திண்டிவனத்தில் இருந்து 30 கி.மீ. தூரத்திலும் உள்ளது. திண்டிவனம் புறவழி சந்திப்பில் இருந்து அரை கி.மீ. தொலைவில் உள்ளது.


—

(தொடரும் வலம்.....)




# சந்தப் பறவை

## (கவிதைகள்)




**ஆசிரியர்:** 'பைந்தமிழ்ப் பாவலர்' **இராதை பிரபாகரன்**

**விலை : ரூ. 150**

**வெளியீடு:**

**ஊற்று பதிப்பகம்,**
**தியாகராய நகர்,**
**சென்னை– 17**

'மரபுக் கவிதைகளுக்கும், திரைப்படப் பாடல்களுக்கும், புதுக் கவிதைகளுக்கும் இடைப்பட்டதாக, அனைவரும் படிக்கக்கூடிய எளிய நடையில் எழுதுவதே எனக்கு இயல்பாகவும் விருப்பமாகவும் இருந்தது. அதுவே எழுத்தாகவும் மலர்ந்தது.' என்று குறிப்பிடுகின்ற நூலாசிரியர், அப்படிப்பட்ட எழுத்தை மிகச் சிறப்பாகவே பதிவு செய்திருக்கிறார். தாள லயத்துக்கு உட்பட்டு, அத்தனை கவிதைகளும் சந்தங்களில் இருப்பது இத்தொகுப்பின் மிகச்சிறந்த அம்சமாகும். படைப்பு மனம் எப்பொழுதும் நம்பிக்கை முன்னெடுத்துச் செல்லும் ஒரு வித்து போன்றதாகும். அத்தகைய வித்தை விளைவிப்பதாக இருக்கின்ற இக்கவிதைகள் பெரும்பாலும், இயற்கையையும், மனித எண்ணங்களின் மேம்பாட்டையும் உயர்த்திப் பிடிக்கின்றன. வாழ்க்கை குறித்த தேடல் எழுந்து விட்டால், அது படைப்புகளாகவும், அளப்பரிய சாதனைகளாகவும், சிறந்த செயல்களாகவும் வெளிப்படும் என்பதற்குச் சான்றாக, இந்தக் கவிதைத் தொகுப்பு அமைந்திருக்கிறது.

'உயர்ந்த சித்தாந்தத்தை முன்வைக்கின்ற சிந்தனையில், சிறகை விரிக்கும் இந்த 'சந்தப் பறவை' சிந்தையைக் கவர்ந்து, விந்தையைப் புரிந்து வாசகர்களின் மனத்தடாகத்தில் நீந்திக் கரையேறிப் பறந்து செல்கின்ற ஒரு அற்புதப் பறவை' என இந்நூலின் முன்னுரை குறிப்பிடுவது முற்றிலும் மெய்யுரை. கவிதைகளுக்கான ஓவியங்களையும் நூலாசிரியரே வரைந்திருப்பது, இத்தொகுப்பினை உணர்வுப் பூர்வமாக மாற்றுகிறது. மனிதன் தன்னுடைய வாழ்வின் பல்வேறுபட்ட சிக்கல்களில் இருந்து விடுபடுவதற்கும், அந்தச் சிக்கல்களுக்குள்ளாகவே வாழ்வை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதற்கும், கலையும் இலக்கியமும் பயன்படுகிறது என்பதை இந்தக் கவிதை நூல் தெற்றெனப் பறைசாற்றுகிறது.

சிறுகதை



# நானும் ஒரு ஈ ஆனேன்!

புவனகிரி கல்யாண்

தூக்கத்தை கெடுத்து அலறிக் கொண்டிருக்கிறது. ஒளிரும் எண்களை பார்த்தேன். காளிதாஸ்!

கடந்த மூன்று மாதங்களாய் ஓயாது அழைத்துப் பார்த்து அலுத்துப்போய் இனி இவன் சவகாசமே வேண்டாம் என வேறு வழியில்லாமல் முடிவெடுத்திருந்தேன். இப்போது அவனிடமிருந்துதான் அழைப்பு!

எடுக்கலாமா? வேண்டாமா? என மனதிற்குள் பட்டிமன்றம். 'பகைவனுக்கும் அருள் செய்வாய் நன்னெஞ்சே' இலக்கியம் படித்த மூளை தீர்ப்பு வழங்கியது.

இந்த நள்ளிரவில், தேவை என்று யாரும் யாருக்கும் அழைப்பு விடுப்பது அரிது என்கிற யோசனையோடு, "நள்ளிரவு வணக்கம் சொல்லுங்க" என்றேன் எரிச்சலாய்.

"மன்னிக்கணும். நம்ம முத்துக்குமார் செத்துட்டான்!"




"என்னது?" எழுந்து உட்கார்ந்து கொண்டேன். பக்கத்தில் மனைவி மகள் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறார்கள். கையூன்றி எழுந்து வெளியே நடந்தேன்.


"எப்படி?"

"மாடியிலிருந்து தவறி விழுந்து இறந்து விட்டான். புதுச்சேரியில் தங்கி கட்டிட வேலை பார்த்துக்கிட்டு இருந்தானாம். அனுபவம் இல்லாத வேலை. கவனக்குறைவா நடந்திருச்சு!"

"அவன் கட்டிட வேலை செஞ்சுகிட்டு இருந்தது எனக்கு தெரியும்."

"தினம் 700 கொடுத்து மூன்று வேளை சாப்பாடு போட்டுறானுவே! எல்லாம் எனக்கு வேண்டிய பசங்கதான். 12—வது படிக்கிற வரைக்கும் ஒவ்வொரு கோடை விடுமுறையிலும் இவனுங்க கூட வேலைக்குப் போயிட்டு இருந்தேன். நான் படிக்க வந்து பட்டம் வாங்கி கெட்டுப் போயிட்டேன். இவனுவோ அனுபவம் சேர்த்து பெரிய ஆளாயிட்டானுவோ! என்ன பண்றது தலைவா? பொண்டாட்டி பிள்ளையை பட்டினி போட்டுட்டு மினுக்கிட்டு வளைய வர்ற என்னால முடியாது"

அவனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் செவுட்டில் அறையிற மாதிரி இருக்கும். உண்மையின் வீரியம் அப்பதானென்று நானும் உணர்ந்திருக்கிறேன்.



“நீங்க தப்பா நினைச்சுக்கலேன்னா வாங்க தலைவா! மூணு வேள சாப்பாடு. எழுநூறு சம்பளம்”

“இதுல தப்பா நினைக்க என்ன இருக்கு? பொய் சொல்லல. யாரையும் ஏமாத்தல. உடல் உழைப்பைக் காசாக்குறோம். ஆனா என்னால முடியாது முத்து.”

“ஏன்?”

“உடல் உழைப்பு எனக்கு பழக்கம் இல்லை”

“சரிங்க தலைவா. நான் இந்த வேலையிலேயே இருந்துகிட்டு வேற வேலைக்கு முயற்சி பண்றேன். நீங்களும் செய்யுங்க.”

சென்ற வாரம் பேசியதுதான் அவனின் கடைசிப் பேச்சு.

“பிரேதம் புதுச்சேரியில்தான் இருக்காம். நானும் நம்ம கூட வேலை பார்த்த லட்சுமி நாராயணனும் காலையில 10 மணிக்கெல்லாம் அங்க வந்துடுறோம். நீங்களும் வந்துடறீங்களா? நேர்ல பேசிப்போம்.”

“சரி!”

“குருவியா சேமியா நிறுவனத்தின் இணை நிறுவனம் நம்மோடுது.” என்று கர்ஜிக்கத் தொடங்கினார் விற்பனை மேலாளர்.

“இதுவரையிலும் பல்வேறு மசாலா பொருட்களை நாம சொந்தமா தயாரிச்சு விற்பனை பண்ணிட்டு இருக்கோம். இதுல இன்னொரு சமையல் பொருள் சேருது. அது என்னான்னு உங்கள் யாருக்காவது யூகம் பண்ண முடியுதா?”

குண்டுசி விழுந்தாலும் கேட்கக்கூடிய நிசப்தம்!

“இவனவோ நிழல்ல உட்கார்ந்துகிட்டு மூக்குப் புடிக்க சாப்டுட்டு சும்மா இல்லாம எதையாவது செய்ய வேண்டியது. அப்புறம் அது என்னன்னு தெரியாம நம்மள கண்டுபிடிக்க சொல்ல வேண்டியது. இதே வேலையா போச்சு!”

கடைசி வரிசை நாற்காலிகளில் நானும் முத்துக்குமாரும் உட்கார்ந்து இருக்கிறோம். வெளிப் பார்வைக்கு வாய் திறக்காமல் நக்கல் அடித்துக் கொண்டிருக்கிறான். நான் பொங்கி வரும் சிரிப்பை அடக்க பெரும்பாடு பட்டுக் கொண்டிருக்கிறேன்.




எல்லோருக்கும் உள்ளங்கையில் அடங்கி விடக் கூடிய அளவுகளில் சிறு பெட்டியில் அடைக்கப்பட்ட பெருங்காயக் கட்டிகள் தரப்பட்டது.

“உணவு இடைவேளைக்கு பிறகு இந்த பெருங்காயத்திற்கு என ஒரு சிறப்பான பெயரை சொல்பவர்களுக்கு ரொக்க பரிசு காத்திருக்கிறது.”

அட்டைப்பெட்டியில் இருந்த பெருங்காயத் துண்டை வெளியே எடுத்துப் பார்த்தேன். கைக்கு நயப்பாக நாம் என்ன செய்கிறோமோ அதற்கெல்லாம் வளைந்து கொடுத்தது.

“இது என்ன களிமண் மாதிரி இருக்கு?”

முத்து துள்ளிக் குதித்தான்.

“ரொக்கப் பரிசு உங்களுக்குத்தான்!” என ஆர்ப்பரித்தான்.

“அட போய்யா! நீ ஒரு ஆளு! அவனுவோ கஷ்டப்பட்டு தயாரிச்ச பொருளுக்கு பெயர் கேட்கிறானுவோ, எதுனா இலக்கியத்தில் இருந்து நல்ல பெயர் இல்லையா? இழுத்துப் போத்திக்கிட்டு நடிக்கிற பிடிக்காத நடிகைங்கற பெயரை சொல்லிட்டுப் போக வேண்டியதுதான். அதை விட்டுட்டு நீங்க தயாரிச்ச பொருளு




மண்ணாங்கட்டினா... செவிட்டில அடிக்க மாட்டாங்க?”

“தலைவா நீங்க சொன்ன மாதிரி சொன்னா நிச்சயம் அடிப்பாங்க. அத வேற மாதிரி சொல்லணும்”

“எப்படி ?”

“அந்தப் பொறுப்பை என்கிட்ட விட்டுடுங்க.”

“வாயைக் கொடுத்து ஒரு மாசம் சம்பளத்துக்கும் செலவினங்களுக்குமான தொகைக்கும் சூனியம் வச்சுக்காத.”

“ரொக்கப் பரிசுல ஆளுக்கு பாதி! சரியா ?

“முழுசா கூட நீயே எடுத்துக்கோ. ஆனா வரவேண்டியதுக்கும் ஆப்பு வச்சிட்டு என்கிட்ட வந்து தலையை சொரியாத சொல்லிட்டேன்.”

ஒவ்வொருவரும் ஒவ்வொரு பேரைச் சொல்லி அதனை இந்த பெருங்காயத்தின் தன்மையோடு சம்பந்தப்படுத்தி பேச, இவன் முறை வந்தது.



“கிலே”

உச்சரித்ததும் சிலர் சிரிக்க, முதலாளித்துவ தரப்பினர் கோபமாய் பார்த்தார்கள்.

“என்ன முத்துக்குமார். எதுனா வீட்ல சொல்லிட்டு வந்துட்டீங்களா? திரும்பி வரும்போது ஏழரைய கூட்டிகிட்டு தான் வருவேன்னு”

“எதுக்கு இப்படி கோபப்படுறீங்க?” என்றவாறு தான் சொன்ன பெயருக்கான காரணத்தை விளக்கம் முற்பட்டான்.

“நல்ல கை தேர்ந்த குகைவனுக்கு சட்டி, பானை, மடக்கு, அடுப்பு, பூத்தொட்டி, இப்படி எது செய்யணுன்னாலும் அடிப்படை களிமண் தான்! அதுமாதிரி நல்ல கைதேர்ந்த சமையலருக்கு சாம்பார், ரசம், காரக் குழம்பு, கட்டு சாதம் இப்படி எது செய்யணுன்னாலும் நம்ம ‘கிலே’ பெருங்காயம்தான் அடிப்படை!”

‘அம்புட்டு வல்லவனா நீ!’ என எல்லோரும் இவனைப் பார்த்தனர்.

“மேலோட்டமா பார்த்தா கிண்டல் பண்ற மாதிரி இருக்கு. உங்க விளக்கத்தை கேட்டால் யோசனை பண்ற மாதிரி இருக்கு. எது எப்படி இருந்தாலும் நீங்க சொன்ன பெயரை வைக்கிறோமோ இல்லையோ, உங்க பேச்சு திறமைக்கு இந்த 2000 ரூபாய் அன்பளிப்பு! ஒரு விற்பனை பிரதிநிதியின் பேச்சு சாதுரியத்துக்கு உங்க பேச்சு நல்ல உதாரணம்!”

கைதட்டல் அடங்க வெகு நேரம் ஆனது

“நான் எப்போதும் சொல்றதுதான். இப்பவும் சொல்ல பிரியப்படறேன். நம்ம பொருட்கள் தரமானது என்று சொல்றத விடவும், லாபகரமானது என்று தான் சொல்வேன்!”

“யாருக்கு?”

‘தயாரித்த உங்களுக்கா? விக்கிற எங்களுக்கா? வாங்குற ஜனங்களுக்கா?’ யாருக்கு லாபகரமானது என்ற கேள்வி என் மனதில் எழுந்தது போலவே எல்லோர் மனதிலும் எழுந்திருக்க கூடும். ஆனால் யாரும் வார்த்தையாக்கப் போவதில்லை!

அதுசரி, முத்துக்குமார் மாதிரி 100 பேரை கட்டி மேய்க்கணும்னா இந்த பேச்சு சாமத்தியம் கூட இல்லனா எப்படி?

வெளியில் வந்ததும் ஆயிரத்தை என்னுடைய சட்டைப் பையில் திணித்தான்.

நான் “வேண்டாம் வேண்டாம்” என்றவாறே பையில் இடம் கொடுத்தேன்.

“தலைவா நீங்க எனக்கு இன்னொரு உதவி

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




17

Thank You

thank you!

செய்யணும்."

"இப்ப என்ன உதவி செஞ்சுட்டேன்? அதை முதல்ல சொல்லு."

"நீங்க சொன்ன பேராலதான ஆளுக்கு ஆயிரம் பரிசு கெடச்சுது"

"அட நீ ஒண்ணுயா, நான் நினைச்சத என்னோட வாயால சொல்லி இருந்தா ஓதப்பட்டிருப்பேன்"

"உங்க பலம் என்னன்னு உங்களுக்கே தெரியல தலைவா!"

"அப்படியா? இத வெளியில சொல்லிடாத. இப்ப என்ன உதவி வேணும் அதை சொல்லு"

எனக்கு ரெட்டை குழந்தை பிறந்திருக்கு. ரெண்டும் பெண்கள். இறந்து போன என் தங்கச்சி விமலா நினைவா ரெண்டு குழந்தைகளின் பெயரும் வி என்று ஆரம்பிக்கணும்.

"விஜயா, விஜய தாரணி, விஜயபிரபா, விஜயலட்சுமி, விந்தியா, விசாலாட்சி"

"ஒரு நிமிடம்" என்றவன் பெயர்களை குறித்துக் கொண்டான்.

"இன்னும் பேர் வேணும்னா யோசிச்சு நாளமறுநாள் சொல்றேன்"

வீட்டில் இருக்கும் 'அழகிய தமிழ் பெயர்கள் ஆயிரம்' என்கிற புத்தகம் என் மனக்கண்ணில் மின்னியது.

மறுநாள் விஜய தாரணி, விஜய பிரபா என்கிற பெயர்களைச் சூட்டப் போவதாய் அலைபேசியில் சொன்னான்.

இந்த சம்பவங்களுக்கு பிறகு நானும் முத்துவும் இன்னும் நெருக்கமாகிப் போனோம்.

அடுத்தடுத்து வந்த சில மாதங்களுக்குப் பிறகு எங்களின் விற்பனை திறமையை பார்த்து ஒரு சுபயோக சுபதனத்தில் எங்களை மொத்தமாய் பணிநீக்கம் செய்து வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள்.

பிறகு வந்த இந்த நாட்களில், தினமும் தவறிய அழைப்புகள் கொடுத்துக் கொள்வோம். யார் அழைப்பது என்கிற பொருளாதார நெருக்கடி எங்கள் இருவருக்குமே இருந்தது. நேற்று கூட அனுப்பி விடுத்தேன்.




அவன் என்னை அழைக்கவில்லை! இனி ஒருநாளும் என்னை அழைக்கப் போவதுமில்லை!

புதுச்சேரி அரசு மருத்துவமனை பிணக்கிடங்குக்கு வெளியில் நானும் காளிதாசும், லட்சுமி நாராயணனுமாக நின்று கொண்டிருந்தோம்.

முத்துக்குமாரனின் மனைவி கருப்பாய், களைப்பாக அழுது கொண்டிருக்கிறாள்.

நோய்வாய்ப்பட்டு இறந்து போக, மீதமுள்ள ஒரு குழந்தையை மர நிழலில் கிடத்தியிருக்கிறாள். எஞ்சியது விஜய தரணியா விஜய பிரபாவா என்கிற சிந்தனை எனக்குள் ஓடுகிறது.

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதால்தான் இப்படி ஒரு அகால மரணம்." என மாமியார் குற்றச்சாட்டும் சூழ்நிலையை நாங்கள் கண் முன்னே பார்த்தோம்.

வீட்டை விட்டு ஓடி வந்து காதல் திருமணம் செய்து கொண்ட அந்த பெண்ணுக்கு எப்படி? யாரால் ஆறுதலும் ஆதரவும் தர முடியும்?

நாங்கள் மூவரும் முடிவெடுத்து விட்டோம்.

அந்த மசாலா நிறுவனம் எங்களை வீட்டிற்கு அனுப்பும்போது கடைசி மாத சம்பளமும் செலவினங்களையும் தரவில்லை. ஆகவே எங்கள் மூவர் மற்றும் முத்துக்குமார் ஆகிய நால்வரின் நிலுவைத் தொகையை முத்துக்குமாரின் மனைவியின் பெயருக்கு அனுப்பி வைத்து விடுமாறு தனித்தனியே கடிதம் எழுதுவது. குறைந்தபட்சம் கணவரின் நிலுவை தொகையாவது கருணை அடிப்படையில் அந்தப் பெண்ணுக்குக் கிடைக்க வேண்டும் என்று பேசிக்கொண்டோம்.

வெயில் தகித்துக் கொண்டிருக்கிறது. வந்ததில் பாதி வேலை முடிந்துவிட்டது. முத்துக்குமாரை மரணம் சூழ தரிசித்து விட்டோம்.

இனி காளிதாசை டீ கடைக்கு தள்ளிக் கொண்டு போய் சட்டையை பிடித்து கடனாக வாங்கிய தொகையைக் கேட்டு உலும்பி விட வேண்டியதுதான் என திட்டமிட்டேன்.

ஒருவேளை என் பயணத்தின் நோக்கமே இந்த வாராக் கடனை வசூல் செய்யத்தானோ என்கிறது என் சிந்தனையை மனசு மறுக்கவில்லை.

இறந்த முத்துக்குமாரின் உறைந்த ரத்தத்திலும், யாரோ உறவுக்கார பையன் அந்தப் பெண்ணின் கதறல் சகியாது வாங்கிக் கொடுத்த குளிர்பானம் மிச்சத்திலும், நிழலில் கிடத்தப் பட்டிருக்கும் குழந்தையின் உதட்டிலும், ஈக்கள் மொய்த்து கொண்டிருக்கின்றன.

அவரவர் காரியம் அவரவருக்கு என்று எண்ணும் என்னை போலவே.

ஒரு பூனையும்
சில பறவைகளும்
பல மலர்களும்
ஓர் ஆடியும்
இல்லத்துடன் சேர்ந்து
சோம்பியபடி காத்திருந்தோம்.

அவள் வந்தவுடன்
பூனை மெதுவாக வால் உரசி சிலிர்க்கிறது
பறவைகள் மெல்லொலி எழுப்புகின்றன
மலர்கள் வண்ணம் கூடுகின்றன
ஆடி ஒளிர்கிறது
இல்லம் உயிர் கொள்கிறது

பிரவாகமாய்ப் பொங்கத் துடிக்கும்
நிறைகுளத்து நீரை சிறு மதகால்
கட்டுவதென மனதை உள்ளொடுக்கி
எதிர்பார்த்து ஏங்கவில்லையென்ற
பாவனை சூடுகிறது
என் ஆறறிவு ஆணவம்




# பாவனை

**கா.சிவா**

# அறிவோம் தமிழர்


## கோ.வடிவேலு செட்டியார்

கோ.வடிவேலு செட்டியார் அத்வைத வேதாந்தம், மற்றும் தமிழ் இலக்கண, இலக்கியங்களிலும், தர்க்கத்திலும் பெரும் புலமை பெற்ற தமிழறிஞர். "மகாவித்துவான்" என்று அறிஞர்களால் அன்புடன் அழைக்கப்பட்டவர்.

1863ஆம் ஆண்டு சென்னை கோமளேசுவரன்பேட்டை வெங்கடாசல ஆச்சாரி தெருவில் மளிகைக்கடை வைத்திருந்த சுப்பராயச் செட்டியார் — தனகோட்டி அம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து பத்தாம் வகுப்பு வரை கல்வி கற்றார். பின்னர் 20ஆம் வயது வரையிலும் தம்முடைய தந்தையாருக்கு உதவியாக மளிகைக் கடையைக் கவனித்து வந்தார். 20ஆம் வயதிலேயே இவருக்குத் திருமணம் நடந்தது. 26ஆம் வயது வரை கடையில் வணிகம் செய்துகொண்டே தம்முடைய குடும்பத்தைக் கவனித்து வந்தார்.

இராமானுஜ நாயக்கர் என்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் அவரது கடைக்கு அடிக்கடி வருவார். தமிழில் பெரும் புலவரான அவர், கடைக்கு வரும்போதெல்லாம் தமிழ்மொழியின் சுவை மிகுந்த பாடல்களைச் செட்டியாரிடம் சொல்லி மகிழ்ந்து வந்தார். அப்பாடல்களைக் கேட்டுச் சுவைத்து வந்த செட்டியாருக்கு தமிழ் இலக்கியங்களின் மீது பெரும் பற்று ஏற்பட்டது. இராமானுஜ நாயக்கர் வரும் வேளைகளில் இலக்கணம், இலக்கியம், புராணங்கள் என்று அன்றைய நிலையில் புகழ் பெற்றிருந்த எல்லா வகையான நூல்களும் நாயக்கரின் சொற்பொழிவில் வந்து வடிவேலு செட்டியாரின் அறிவை நிறைத்தன. இந்தக் கல்வியை செட்டியார் ஏழு ஆண்டுகள் பெற்றார்.

தமிழ்க் கல்வியின் மீதான விருப்பம் என்பது, செட்டியாரிடத்தில் வணிகத்தின் மீதான விருப்பத்தைக் குறைக்கத் தொடங்கியது. இதன் விளைவாக, குடும்ப உறுப்பினர்கள் அவரைக் கண்டித்தும் தடைகள் பல உண்டு பண்ணியும், அவர் உள்ளத்தை வியாபாரத் துறையில் இழுத்து நிறுத்த பல முயற்சிகள் செய்து தோல்வி அடைந்தனர்.



அப்போது இராமானந்த யோகிகள் என்னும் மகாவித்துவான் இராமசாமி நாயுடு, சுப்பன் செட்டியார், மயிலை சண்முகம் பிள்ளை போன்றவர்களிடம் தொடர்பு கொண்டு தமிழ் இலக்கண, இலக்கியங்களில் தமக்கு ஏற்பட்ட ஐயங்களைப் பெருமளவில் நீக்கிக்கொண்டார். இதுவும் குடும்பத்தினரிடையே கசப்பை ஏற்படுத்தியது. இவர் கொள்முதலுக்குச் செல்லும்போது சிவப்பு நிற வேட்டியுடன் தான் செல்வார். உறவினர்களும் இவர் வியாபார வேலையாகச் செல்கிறார் என்று திருப்தி கொள்வர். ஆனால், கொள்முதலுக்கு எடுத்துச் செல்லும் சாக்குப்பையில் வெள்ளை வேட்டியையும் தேவையான புத்தகங்களையும் மறைத்து எடுத்துச் செல்வார். கூவம் ஆற்றைக் கடந்தவுடன் வெள்ளை வேட்டியை உடுத்திக்கொண்டு, மேற்கூறப்பட்ட பெரும் புலவர்களிடம் பாடம் கேட்கச் சென்றுவிடுவார். பின்னர் சரக்கைக் கொள்முதல் செய்துகொண்டு கடைக்குத் திரும்புவார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சைவ சித்தாந்த நூல்கள் தனி இடம் பெற்றதைப் போல, "அத்வைதம்" பேசும் நூல்களும் பெருமளவில் எழுதப்பட்டன. "தத்துவராயர்" திரட்டிய சிவப்பிரகாசப் பெருந்திரட்டில், தமிழில் அத்வைதம் பேசும் நூல்கள் ஏராளமாக இருப்பதாக தெ.பொ.மீ. கூறுகிறார்.

இந்தியாவில் வழங்கும் மொழிகளிலேயே தமிழ் மொழியில் தான் முதல்முதலாக பகவத் கீதை மொழிபெயர்க்கப்பட்டது. ஸ்ரீபட்டர் என்பவர் மொழிபெயர்த்த அந்த நூலுக்கு "பரமார்த்த தரிசனம்" என்று பெயர். இத்தகைய நூல்கள் தத்துவச் செறிவு மிக்க வடமொழியில் மட்டும்தான் இருக்கும் என்கிற கருத்தைப் பொய்ப்பிக்கும் விதமாக நாம் நம்புவதற்கு மாறாக, அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி என்று இலக்கிய நடையிலும் தச்சன் பாட்டு பள்ளிப் பாட்டு மெய்ஞானக் கொம்மி ஞானக்

# பெருமை

பொ.வேல்சாமி

குறவஞ்சி என்று பாமர மக்களுக்கும் புரியும்படி நாட்டுப்புற மொழியிலும் வேதாந்தக் கருத்துகள் எழுதப்பட்டுள்ளன.

கைவல்ய நவநீதம் ரிபுகீதை பிரபோத சந்திரோதயம் போன்ற புகழ்பெற்ற நூல்களுடன் அத்வைதத்தை முதன்முதலில் பயிலத் தொடங்கும் மாணவர்களுக்கான “நானா சீவவாதக் கட்டளை” போன்ற எளிய நூல்களும் தமிழ் மொழியில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.


இத்தகைய அத்வைத பாரம்பரியத்தை மாணவர்களுக்குப் போதித்து வந்த பல பெரும் புலவர்கள் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் புகழுடன் விளங்கி வந்தனர்.


மறைமலை அடிகளின் ஆசிரியர் சூளை சோமசுந்தர நாயகர் போன்று புகழ்பெற்ற மற்றுமொரு பேராசிரியர் கோ.வடிவேலு செட்டியார். இவர் அத்வைத வேதாந்தம் மட்டுமல்லாது தமிழ் இலக்கண, இலக்கியங்களிலும், தர்க்கத்திலும் பெரும் புலமை பெற்றவராக விளங்கியதால் “மகாவித்துவான்” என்று அறிஞர்களால் அன்புடன் அழைக்கப்பட்டார்.

1863ஆம் ஆண்டு சென்னை கோமளேசுவரன்பேட்டை வெங்கடாசல ஆச்சாரி தெருவில் மளிகைக்கடை வைத்திருந்த சுப்பராயச் செட்டியார் — தனகோட்டி அம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து பத்தாம் வகுப்பு வரை கல்வி கற்றார். பின்னர் 20ஆம் வயது வரையிலும் தம்முடைய தந்தையாருக்கு உதவியாக மளிகைக் கடையின் வியாபாரத்தைக் கவனித்து வந்தார். 20ஆம் வயதிலேயே இவருக்குத் திருமணம் நடந்தது. 26ஆம் வயது வரை வியாபாரம் செய்துகொண்டே தம்முடைய குடும்பத்தைக் கவனித்து வந்தார்.

இராமானுஜ நாயக்கர் தமிழில் பெரும் புலவரான அவர், கடைக்கு வரும்போதெல்லாம் தமிழ்மொழியின் சுவை மிகுந்த பாடல்களைச் செட்டியாரிடம் சொல்லி மகிழ்ந்து வந்தார். அப்பாடல்களைக் கேட்டுச் சுவைத்து வந்த செட்டியாருக்கு தமிழ் இலக்கியங்களின் மீது பெரும் காதல் ஏற்பட்டது. இராமானுஜ நாயக்கர் வரும் வேளைகளில் இலக்கணம், இலக்கியம், புராணங்கள் என்று அன்றைய நிலையில் புகழ் பெற்றிருந்த எல்லா வகையான நூல்களும் நாயக்கரின் சொற்பொழிவில் வந்து வடிவேலு செட்டியாரின் அறிவை நிறைத்தன. இந்தக் கல்வியை செட்டியார் ஏழு ஆண்டுகள் பெற்றார். தமிழ்க் கல்வியின் மீதான விருப்பம் என்பது, செட்டியாரிடத்தில் வணிகத்தின் மீதான விருப்பத்தைக் குறைக்கத் தொடங்கியது. இதன் விளைவாக, குடும்ப உறுப்பினர்கள் அவரைக் கண்டித்தும் தடைகள் பல உண்டு





THE BUST OF
PANDIT K. VADIVELU CHETTIAR AVL.
BY
SCULPTOR T. A. KANAKASABHAPATHY MUDR.,
6. VENKATATHRI NAICKEN STREET, KOSAPET.
PERAMBUR BARRACKS POST.
MADRAS
2—8—'36

பண்ணியும், அவர் உள்ளத்தை வியாபாரத் துறையில் இழுத்து நிறுத்த பல முயற்சிகள் செய்து தோல்வி அடைந்தனர். கடைக்குத் தேவையான சரக்குகளைக் கொள்முதல் செய்ய கொத்தவால் சாவடிக்கு இருமுறை செல்வார் வடிவேலு செட்டியார்.


அப்போது இராமானந்த யோகிகள் என்னும் மகாவித்துவான் இராமசாமி நாயுடு, சுப்பன் செட்டியார், மயிலை சண்முகம் பிள்ளை போன்றவர்களிடம் தொடர்பு கொண்டு தமிழ் இலக்கண, இலக்கியங்களில் தமக்கு ஏற்பட்ட ஐயங்களைப் பெருமளவில் நீக்கிக்கொண்டார். இதுவும் குடும்பத்தினரிடையே கசப்பை ஏற்படுத்தியது. இவர் கொள்முதலுக்குச் செல்லும்போது சிவப்பு நிற வேட்டியுடன் தான் செல்வார். உறவினர்களும் இவர் வியாபார வேலையாகச் செல்கிறார் என்று திருப்தி கொள்வர். ஆனால், கொள்முதலுக்கு எடுத்துச் செல்லும் சாக்குப்பையில் வெள்ளை வேட்டியையும் தேவையான புத்தகங்களையும் மறைத்து எடுத்துச் செல்வார். கூவம் ஆற்றைக் கடந்தவுடன் வெள்ளை வேட்டியை உடுத்திக்கொண்டு, மேற்கூறப்பட்ட பெரும் புலவர்களிடம் பாடம் கேட்கச் சென்றுவிடுவார்.



பின்னர் சரக்கைக் கொள்முதல் செய்துகொண்டு கடைக்குத் திரும்புவார். தமிழ் மீது ஆறாத பற்றுக்கொண்டிருந்த வடிவேலு செட்டியாருக்கு உறவுகளும், வியாபாரமும் தீராத துன்பத்தைத் தந்தன. இந்த நேரத்தில் ரிப்பன் அச்சக உரிமையாளராகவும் வேதாந்த சாஸ்திரத்தில் பெரும் புலவராகவும் விளங்கிய சை.இரத்தினச் செட்டியாரின் தொடர்பு வடிவேலு செட்டியாருக்குக் கிடைத்தது. இவருக்கு வேதாந்தம் பயிற்றுவிப்பதில் குருவாக விளங்கிய அவர், குடும்பச் சூழ்நிலையால் செட்டியாருடைய கல்விக்கு இடையூறு ஏற்படுவதை அறிந்து 1896இல் தங்கசாலைத் தெருவில் தொடங்கப்பட்ட இந்து தியாலஜிகல் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியர் பதவியை இவருக்கு வாங்கித் தந்தார். அப்போது இவருக்கு வயது 33. இந்த நிகழ்ச்சி வடிவேலு செட்டியாரின் வாழ்க்கைப் பதையை முற்றிலும் மாற்றி அமைத்துவிட்டது. பள்ளியில் மாணவர்களுக்குப் பாடம் நடத்துவதுடன் மற்ற நேரங்களில் தன்னை நாடி வருகின்ற தமிழ் ஆர்வலர்களுக்குத் தமிழும், தத்துவமும் போதித்து வந்தார். அத்தகையவர்களுள், தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் மொ.அ.துரை அரங்கனார், மு.வரதராசனார் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

“செட்டியாருக்கும் தெ.பொ.மீ.க்கும் இடையே அமைந்த உறவு, இராமகிருஷ்ணருக்கும் விவேகானந்தருக்கும் உள்ள உறவைப் போன்றதாகும்“ என்று துரை அரங்கனார் குறிப்பிட்டுள்ளார். வடிவேலு செட்டியார், நாற்பத்தைந்து நூல்களுக்கும் மேல் எழுதியுள்ளார். அதில், திருக்குறள் பரிமேலழகர் உரைக்கான விளக்கம். கைவல்ய நவநீதம் மூலம் — மூலத்துக்கு இயைந்த வசன வினா — விடை, மேற்கோளுடன் விரிவுரை. பகவத்கீதை — மூலத்துக்கு இயைந்த வசனமும் விருத்தியுரையும் சர்வ தரிசன சங்கிரகம் ஆகியவை அடங்கும்.

இந்தியத் தத்துவத்தைப் பற்றிய நூல்கள் எழுதியுள்ள அறிஞர்கள் அனைவரும் தவறாது குறிப்பிடுகின்ற நூல் “சர்வதரிசன சங்கிரகம்“, இந்திய தத்துவ தரிசனங்களைப் பதினாறு தலைப்புகளில் பகுத்து விளக்கியுள்ள இந்த வடமொழி நூலை இராமச்சந்திர சாஸ்திரியார் என்பவரைக் கொண்டு மொழிபெயர்த்து நல்ல முன்னுரையுடனும் குறிப்பிடத்தக்க குறிப்புகளுடனும் 1910ஆம் ஆண்டு வெளியிட்டார். வேதத்துக்கு உரை வகுத்த சாயனருடன் பிறந்த வித்யாரண்யர் இந்நூலின் ஆசிரியர் ஆவார். இதேபோன்று, திருக்குறள் பரிமேலழகர் உரையிலுள்ள இலக்கண நுட்பங்களையும் தத்துவக் குறிப்புகளையும் தெளிவாக விளக்கி




இவரால் எழுதப்பட்ட குறிப்புகள், அறிஞர்களால் பாராட்டப்படுகின்றன. இந்தத் திருக்குறள் நூலில் எல்லா குறள்களுக்கும் ஆங்கில மொழிபெயர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. செட்டியாரின் நண்பர் ஒருவர் இந்த மொழிபெயர்ப்பைச் செய்துகொடுத்து தன் பெயரை வெளியிட வேண்டாம் என்று சொன்னதாகச் செட்டியார் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்த மொழிபெயர்ப்புப் பகுதிகளில் பெரும்பாலானவை துரு பாதிரியாருடைய மொழிபெயர்ப்பு ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர், 1936ஆம் ஆண்டு இவ்வுல வாழ்வை நீத்தார். சரியான வாய்ப்புகள் கிடைக்கும் பட்சத்தில் எத்தனை இடையூறுகள் ஏற்பட்டபோதும் துறைசார்ந்த ஆர்வம் கொண்ட ஒருவர் அறிஞராக மலர்ச்சி பெறமுடியும் என்பதற்கு வடிவேலு செட்டியாரின் வாழ்க்கையே சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தமிழ் மீது ஆறாத பற்றுக்கொண்டிருந்த வடிவேலு செட்டியாருக்கு உறவுகளும், வியாபாரமும் தீராத துன்பத்தைத் தந்தன. இந்த நேரத்தில் ரிப்பன் அச்சக உரிமையாளராகவும் வேதாந்த சாத்திரத்தில் பெரும் புலவராகவும் விளங்கிய சை.இரத்தினச் செட்டியாரின் தொடர்பு வடிவேலு செட்டியாருக்குக் கிடைத்தது. இவருக்கு வேதாந்தம் பயிற்றுவிப்பதில் குருவாக விளங்கிய அவர், குடும்பச் சூழ்நிலையால் செட்டியாருடைய கல்விக்கு இடையூறு ஏற்படுவதை அறிந்து 1896 இல் தங்கசாலைத் தெருவில் தொடங்கப்பட்ட இந்து தியாலஜிகல் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியர் பதவியை இவருக்கு வாங்கித் தந்தார். அப்போது இவருக்கு வயது 33. இந்த நிகழ்ச்சி வடிவேலு செட்டியாரின் வாழ்க்கைப் பதையை முற்றிலும் மாற்றி அமைத்துவிட்டது.

பள்ளியில் மாணவர்களுக்குப் பாடம் நடத்துவதுடன் மற்ற நேரங்களில் தன்னை நாடி வருகின்ற தமிழ் ஆர்வலர்களுக்குத் தமிழும், தத்துவமும்போதித்துவந்தார்.அத்தகையவர்களுள், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், மொ. அ. துரை அரங்கனார், மு. வரதராசனார் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

எழுதிய நூல்கள்

வடிவேலு செட்டியார், நாற்பத்தைந்து நூல்களுக்கும் மேல் எழுதியுள்ளார். அதில், திருக்குறள் பரிமேலழகர் உரைக்கான விளக்கம் கைவல்ய நவநீதம் மூலம் — மூலத்துக்கு இயைந்த வசன வினா — விடை, மேற்கோளுடன் விரிவுரை பகவத்கீதை — மூலத்துக்கு இயைந்த வசனமும் விருத்தியுரையும் சர்வ தரிசன சங்கிரகம்.




இந்தியத் தத்துவத்தைப் பற்றிய நூல்கள் எழுதியுள்ள அறிஞர்கள் அனைவரும் தவறாது குறிப்பிடுகின்ற நூல் “சர்வதரிசன சங்கிரகம்“, இந்திய தத்துவ தரிசனங்களைப் பதினாறு தலைப்புகளில் பகுத்து விளக்கியுள்ள இந்த வடமொழி நூலை இராமச்சந்திர சாத்திரியார் என்பவரைக் கொண்டு மொழிபெயர்த்து நல்ல முன்னுரையுடனும் குறிப்பிடத்தக்க குறிப்புகளுடனும் 1910 இல் வெளியிட்டார். வேதத்துக்கு உரை வகுத்த சாயனருடன் பிறந்த ”வித்யாரண்யர்” இந்நூலின் ஆசிரியர் ஆவார். இதேபோன்று, திருக்குறள் பரிமேலழகர் உரையிலுள்ள இலக்கண நுட்பங்களையும் தத்துவக் குறிப்புகளையும் தெளிவாக விளக்கி இவரால் எழுதப்பட்ட குறிப்புகள், அறிஞர்களால் பாராட்டப்படுகின்றன. இந்தத் திருக்குறள் நூலில் எல்லா குறள்களுக்கும் ஆங்கில மொழிபெயர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. செட்டியாரின் நண்பர் ஒருவர் இந்த மொழிபெயர்ப்பைச் செய்துகொடுத்து தன் பெயரை வெளியிட வேண்டாம் என்று சொன்னதாகச் செட்டியார் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்த மொழிபெயர்ப்புப் பகுதிகளில் பெரும்பாலானவை துரு பாதிரியாருடைய மொழிபெயர்ப்பு ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.



# சிவகாமியின்


## நான்காம் பாகம் : சிதைந்த கனவு

### வீதி வலம் 2

ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னால் பரத கண்டத்தில் பிரசித்தி பெற்றிருந்த மூன்று சாம்ராஜ்யத் தலைநகரங்களில் வாதாபி ஒன்றாகும். கன்யாகுப்ஜத்தையும் காஞ்சியையும் போலவே வாதாபி நகரத்தின் புகழும் அந்த நாட்களில் கடல் கடந்து வெகுதூரம் சென்றிருந்தது.

ஒவ்வொரு தடவை திக்விஜயம் செய்து திரும்பும் போதும் புலிகேசியின் படை வீரர்கள் வெற்றி கொண்ட தேசங்களிலிருந்து ஏராளமான செல்வங்களைக் கொண்டு வந்து வாதாபியில் சேர்த்து வந்தார்கள். இதனால் வாதாபி நகரம் வளங்கொழிக்கும் நகரமாய் அந்தக் காலத்தில் விளங்கிற்று. அந்நகரில் வர்த்தகம் சிறந்தோங்கியிருந்தது. தூர தூர தேசங்களிலிருந்தெல்லாம் அந்நகருக்கு இரத்தின வியாபாரிகள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

பிரசித்தி பெற்ற ஜைன ஆலயங்களும் பௌத்த மடங்களும் வாதாபியில் இருந்தபடியால், பற்பல நாடுகளிலிருந்தும் யாத்திரிகர்கள் அந்நகருக்கு வருவதுண்டு. இதனாலெல்லாம் வாதாபி நகரம் எப்போதும் கலகலப்பாகவே இருந்து வந்தது.




அதிலும் சக்கரவர்த்தி தலைநகரில் இருக்கும் போது கேட்க வேண்டியதில்லை. சக்கரவர்த்தியைப் பேட்டி காண்பதற்காகச் சிற்றரசர்கள் காணிக்கைகளுடன் வருவார்கள். சீனம், பாரசீகம் முதலிய தூர தூர தேசங்களிலிருந்து அரசாங்கத்தூதர்கள் வருவார்கள். மாடமாளிகைகள், கூடகோபுரங்களுடன் விளங்கிய வாதாபியின் வீதிகள் எப்போதுமே திருவிழாக் காலத்தைப் போல் ஜனக்கூட்டம் நிறைந்து விளங்கும். வண்டிகள் வாகனங்களின் சப்தம் ஓயாமல் கேட்ட வண்ணமிருக்கும்.

வாதாபி நகரில் வீதிக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு சிவகாமி பல்லக்கிலே போய்க் கொண்டிருந்த போது அவளுடைய உள்ளம் அடிக்கடி காஞ்சியையும் வாதாபியையும் ஒப்பிட்டுக் கொண்டிருந்தது. பழமையான காலத்திலிருந்து செல்வமும் பண்பாடும் சேர்ந்து வளர்ந்து வந்த நகரத்துக்கும் திடீரென்று செல்வம் படைத்துச் செழிப்படைந்த புதுப் பட்டணத்துக்கும் உள்ள வித்தியாசங்கள் அவளுக்கு நன்கு புலனாகி வந்தன.

காஞ்சியில் செல்வத்திற் சிறந்த சீமான்களும் சீமாட்டிகளும் ஆடை ஆபரணங்கள் பூணுவதில் அடக்கம் காட்டுவார்கள். அவர்களுடைய அலங்காரங்களில் கலை உணர்ச்சியே பிரதானமாயிருக்கும். இந்த நகரிலோ எங்கே பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் படாடோபமும் பகட்டும் தாண்டவமாடின.

காஞ்சி வீதிகளில் தெரிந்தவர்கள் சந்தித்தால் ஒருவருக்கொருவர் அன்புடனும் மரியாதையுடனும் முகமன் கூறிக் கொண்டார்கள். வாதாபியின் தெருக்களிலோ, தெரிந்தவர்கள்






சந்திக்கும் போது இடி முழக்க ஒலியில் சிரித்து ஆர்ப்பரித்தார்கள்.

காஞ்சியில் எஜமானர்கள் வேலைக்காரர்களுக்குக் கட்டளையிடும் போது கூட அன்புடனும், ஆதரவுடனும் பேசினார்கள். வாதாபியில் எஜமானர்கள் வேலைக்காரர்களிடம் பேசும் போது கடுமையான மொழிகளையும் துர்வசனங்களையும் கையாண்டார்கள்.

இவற்றையெல்லாம் தவிரக் காஞ்சிக்கும் வாதாபிக்கும் உள்ள இன்னும் ஒரு வித்தியாசத்தையும் சிவகாமி கவனித்தாள்.

காஞ்சி வீதிகளில் புத்த பிக்ஷுக்கள், திகம்பர சமணர்கள், வைதிக சந்நியாசிகள், ஆண்டிகள், கபாலிகர்கள், வெறும் பிச்சைக்காரர்கள் ஆகியவர்கள் மொய்த்துக் கொண்டு வீதியில் போவோர் வருவோரின் பிராணனை வாங்குவது வழக்கம். தர்ம




புத்தியுள்ள தனவான்கள் அதிகம் உள்ள இடத்திலே யாசகர் கூட்டமும் அதிகமாகப் பெருகி விடும் போலும்!

வாதாபியின் வீதிகளில் அம்மாதிரி பிக்ஷுக்களும் யாசகர்களும் அதிகம் காணப்படவில்லை. தர்மம் கொடுப்பவர்கள் இல்லாதபடியால் யாசகர்களும் இல்லை போலும்! இம்மாதிரியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டும், வாதாபியின் செல்வ வளத்தை வியந்து கொண்டும் சிவிகையில் சென்ற சிவகாமி, ஒரு நாற்சந்தி மூலையில் அதுவரையில் காணாத காட்சி ஒன்றைக் கண்டாள்.

ஸ்திரீகளும் புருஷர்களும் அடங்கிய ஒரு கூட்டம் அங்கே நின்றது. அவர்கள் ஒவ்வொருவருடைய கரங்களும் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன. அவ்விதம் பந்தமுற்ற கைகளுடன் தலைகுனிந்து நின்ற கும்பலைச் சுற்றி யமகிங்கரர்களைப் போன்ற முரடர்கள் சிலர் கையில் பெரிய பெரிய சாட்டைகளுடன் நின்றார்கள்.

சிலர் சிறையிலிருந்து தப்பிப் போக முயன்றார்கள். சிலர் அடிமைத் தொண்டு செய்ய மறுத்தார்கள். சிலர் உணவு உட்கொள்ளாமல் பிடிவாதம் பிடித்தார்கள். இத்தகைய குற்றங்களைச் செய்த கலகக்காரர்களை வாதாபி நகரின் நாற்சந்திகளில் நிறுத்திச் சாட்டையினால் அடிக்கும்படியாகப் புலிகேசிச் சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார். இந்தச் சாட்டையடி உற்சவம் இன்றைக்குத்தான் ஆரம்பமாகியிருக்கிறது. இன்னும் இரண்டு மாதம் வரையில் நடக்கும். தினம் சாயங்கால வேளையில் வீதிகளில் நடக்கும் வாதாபி நகரவாசிகள் அந்த வேடிக்கையைப் பார்த்துக் களிப்பார்கள்.

சிவகாமி அன்றிரவு ஒரு கணமும் கண்ணுறங்கவில்லை. வேதனையும் துன்பமும் நிறைந்த அவளுடைய வாழ்க்கையில் இதுவரை என்றும் அனுபவித்தறியாத வேதனையை அவள் அனுபவித்தாள். சுளீர் சுளீர் என்று அவளுடைய உடம்பில் சாட்டையடி விழுவது போன்ற உணர்ச்சி அவளுக்கு அடிக்கடி உண்டாயிற்று.



இந்தக் காட்சியைப் பார்க்கும்போதே சிவகாமியின் உள்ளம் பதைத்தது. கைகள் கட்டுப்பட்டு நின்ற ஸ்திரீ புருஷர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று தோன்றியபடியால் அவளுடைய



பொன்முகலியாற்றங்கரையில் அவள் புலிகேசியை வேண்டித் தன்னுடன் சிறைப்பட்டிருந்த மாதர்களை விடுதலை செய்தது அவளுக்கு நினைவு வந்தது. அன்று விடுதலையானவர்கள் சளுக்கர் சைனியத்தினால் சிறைப் பிடிக்கப்பட்டவர்களில் ஒரு சிலர்தான் போலும். இன்னும் எத்தனையோ பேரை முன்னால் சென்ற பெருஞ்சைனியம் சிறைப் பிடித்துக் கொண்டு போயிருக்க வேண்டும்.

இன்று பகலில் சக்கரவர்த்தி வந்து தன்னுடன் பேசியதன் கருத்தும், தனக்கு வாதாபி நகரைச் சுற்றிப் பார்க்க அனுமதியளித்ததன் கருத்தும் இப்போது சிவகாமிக்குப் புதிய பொருளில் விளங்க ஆரம்பித்தன. சிவகாமியைத் தன்னுடைய காலிலே விழுந்து கெஞ்சும்படி செய்வதற்காக இம்மாதிரியெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறான் அந்தக் கிராதகன். ஆனால், அவனுடைய எண்ணம் நிறைவேறப் போவதில்லை. யார் எப்படிப் போனாலும் சரி. இனித் தான் புலிகேசியின் காலில் விழுந்து கெஞ்சப் போவதில்லை. ஒருநாளும் முடியாது! இப்படியா வஞ்சம் தீர்க்க நினைத்திருக்கிறான், அந்தப் பாவி!

"எதற்காக வாதாபி நகரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம்?" என்று எண்ணி எண்ணிச் சிவகாமி தவித்தாள். இரவெல்லாம் தூக்கமின்றித் துடித்துக் கொண்டிருந்தாள்.

மறுநாள் பொழுது விடிந்தது; சூரியோதயம் ஆயிற்று. வானவெளியில் சூரியன் மேலே வர வர, சிவகாமியின் இதயத் துடிப்பு அதிகமாயிற்று. சூரியன் மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்யச் செய்ய அவளுடைய உள்ளமும் உடம்பும் பதறத் தொடங்கின.

இத்தனை நேரம் அந்தப் பல்லவ நாட்டு ஸ்திரீகளும் புருஷர்களும் நாற்சந்தியில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருப்பார்கள்! அவர்களுடைய கைகள் பின்னால் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். இத்தனை நேரம் யமகிங்கரர்கள் போன்ற காவலர்கள் கையில் பெரிய சாட்டைகளுடன் வந்து நிற்பார்கள். இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் சாட்டையினால் அடிக்கத் தொடங்கி விடுவார்கள். சிவகாமி முதல் நாள் இரவு கொண்டிருந்த மன உறுதியெல்லாம் பறந்து போயிற்று. பரபரப்புடன் பல்லக்குக் கொண்டு வரும்படி வாசற் காவலர்களிடம் கட்டளையிட்டாள். பல்லக்கு வந்ததும் அதில் விரைந்து ஏறிக் கொண்டு நேற்றுப் பார்த்த நாற்சந்தி முனைக்குப் போகும்படி சொன்னாள்.

நாற்சந்தியின் சமீபத்தில் இன்று சிவகாமியின் சிவிகை போய்ச் சேர்ந்த போது, அங்கே கரங்கள் கட்டப்பட்டு நின்றவர்களிடம் நேற்றுக் காணாத கிளர்ச்சியை இன்று கண்டாள். அவர்கள் ஒருவருக்கொருவர் ஏதோ பேசிக் கொண்டார்கள். அவர்களில் பலர் சிவகாமியை நோக்கி, "அம்மா! தாயே! எங்களைக் காப்பாறு!" என்று கூச்சலிட்டார்கள்.

எதிர்பாராத இந்த அபயக் கூக்குரலினால் சிவகாமியின் உள்ளம் பெருங்குழப்பமடைந்தது. 'ஐயோ! இவர்களைக் காப்பாற்றும் சக்தி உண்மையில் நம்மிடம் இருக்கலாகாதா?' என்ற ஏக்கம் ஒரு பக்கம் உண்டாயிற்று. பல்லக்கைத் தரையில் இறக்கச் சொல்லித் தானும் இறங்கிக் கூட்டத்தை அணுகினாள்.

மீண்டும், "அம்மா! தாயே! எங்களைக் காப்பாறு!" என்ற கூக்குரல்கள் அக்கூட்டத்திலிருந்து எழுந்தன.

சிவகாமி அவர்கள் அருகில் இன்னும் நெருங்கிச் சென்றாள். அவர்களில் சிலருடைய உடம்பில் முன்னமே சாட்டையடி பட்ட காயங்களைக் கண்டாள். அந்தக் காயங்களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருப்பதையும் தரையில் பல இடங்களில் இரத்தம் சொட்டிக் கறையாகியிருப்பதையும் பார்த்தாள்.

சிவகாமியின் தலை சுற்றியது; வயிறு குமட்டியது; மயக்கம் வந்தது. அதையெல்லாம் சமாளித்துக் கொண்டு ஒருவாறு சித்தத் தெளிவை நிலைநாட்டிக் கொண்டாள்.

கூட்டத்தில் அவளுக்குச் சமீபத்தில் நின்ற ஸ்திரீயைப் பார்த்து, "அம்மா! உங்களைக் காப்பாற்றும்படி என்னை வேண்டிக் கொள்கிறீர்களே, அது ஏன்? உங்களைப் போல் நானும் ஓர் அபலைப் பெண்தானே! சளுக்கரால் சிறைப் பிடித்துக் கொண்டு வரப்பட்டவள்தானே? உங்களைக் காப்பாற்றும் சக்தி எனக்கு ஏது?" என்றாள்.




"எங்களைக் காப்பாற்றும் சக்தி உனக்கு உண்டு, தாயே! அதோ அந்த ராக்ஷதனைக் கேள். அவன்தான் அவ்விதம் சொன்னான்" என்றாள் அந்த ஸ்திரீ.

அவள் சுட்டிக்காட்டிய ராக்ஷத வடிவங்கொண்ட வீரர் தலைவனைச் சிவகாமி அணுகினாள். வாதாபிவாசிகள் பேசிய கலப்புப் பாஷையில், "ஐயா! இவர்களை ஏன் இப்படிச் சாட்டையால் அடித்துச் சித்திரவதை செய்கிறீர்கள்? வேண்டாம்! இந்தப் படுபாதகச் செயலை நிறுத்துங்கள்!" என்றாள்.

அந்த வீரர் தலைவன் கலகலவென்று சிரித்தான். என்னவோ யோசிப்பவன் போல் சற்று இருந்து விட்டுப் பிறகு, "நாங்கள் என்ன செய்வோம், தாயே! சக்கரவர்த்தியின் ஆக்ஞை!" என்றான்.

"அப்படியானால் கொஞ்ச நேரம் பொறுத்திருங்கள். நான் உங்கள் சக்கரவர்த்தியிடம் சென்று வேண்டிக் கொண்டு பார்க்கிறேன். அதுவரையில்..." என்று சிவகாமி சொல்வதற்குள், அவ்வீரன், "வேண்டாம்,



அம்மா! சக்கரவர்த்தியிடம் நீ போகவே வேண்டாம். இவர்களைச் சாட்டையால் அடிப்பதை நிறுத்தும் அதிகாரம் உன்னிடமே இருக்கிறது. நீ சொன்னால் நிறுத்தி விடுகிறோம்; ஆனால், அதற்கு ஒரு நிபந்தனை உண்டு!" என்றான்.

அந்த வீரன் முதலில் கூறிய வார்த்தைகளை வியப்போடும் உவகையோடும் கேட்ட சிவகாமி, "நிபந்தனை" என்றதும் திடுக்கிட்டாள். இதில் ஏதோ வஞ்சம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், "என்ன நிபந்தனை?" என்றாள்.



"நீ இந்த இடத்தில், எங்கள் எல்லாருடைய முன்னிலையிலும் நடனம் ஆட வேண்டும். நீ ஆடும் வரையில் நாங்கள் இவர்களை அடிக்காமல் இருக்கிறோம். சூரியன் அஸ்தமிக்கும் வரையில் நீ ஆடிக் கொண்டிருந்தால், நாங்களும் பார்த்துக் கொண்டேயிருப்போம். சூரியன் அஸ்தமித்ததும் நீ வீட்டுக்குத் திரும்பலாம். நாங்கள் இவர்களைச் சிறையிலே கொண்டு போய்ச் சேர்ப்போம். நாளைக்கும் இவர்கள் அடிபடக் கூடாது என்று நீ கருதினால் நாளைக்கும் இம்மாதிரியே நீ இவ்விடம் வந்து நடனம் ஆடலாம்!" என்றான் அந்தக் கிராதகன்.

சிவகாமியின் உள்ளத்திலிருந்து எரிமலை, தீக்குழம்பையும் கரும்புகையையும் கக்கத் தொடங்கியது.

ஆஹா! இதுவா அந்தப் பாதகனுடைய எண்ணம்? இப்படியா என் மீது பழிவாங்கப் பார்க்கிறான்? இப்படியா என் அற்புதக் கலையை இழிவுபடுத்த நினைக்கிறான்? புத்த பிக்ஷு வேஷத்தில் வந்து என் கலையைக் கண்டு மெய்ம்மறந்து பரவசமடைந்ததாக நடித்ததெல்லாம் இதற்காகத்தானா?

ஆனால் அந்த வஞ்சக நெஞ்சனுடைய உத்தேசம் ஒருநாளும் நிறைவேறப் போவதில்லை. யார் எப்படிப் போனாலும், நான் வாதாபியின் நாற்சந்தியில் நின்று நடனம் ஆடப் போவதில்லை, ஒரு நாளுமில்லை.

முகத்தில் குரோதம் பொங்க, கண்களில் தீப்பொறி பறக்க நின்ற இடத்திலே ஸ்தம்பமாய் நின்று யோசித்துக் கொண்டிருந்த சிவகாமியைப் பார்த்து மேற்படி வீரர் தலைவன், "என்ன முடிவு சொல்கிறாய், தாயே! நடனம் ஆடப் போகிறாயா? அல்லது இவர்களைத் தங்கள் காரியத்தைப் பார்க்கச் சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

அந்தக் கேள்வி சிவகாமியின் செவிகளில் பழுக்கக் காய்ந்த வேல் நுழைவது போல் நுழைந்தது.

திடீரென்று பிரக்ஞை பெற்றவள் போல் அவள் துள்ளி நிமிர்ந்து நின்று அவ்வீரனைப் பார்த்தாள்.

"ஆஹா! இந்த நாற்சந்தியில் நின்று என்னை நடனம் ஆடவா சொல்கிறாய்? மாட்டேன். ஒருநாளும் மாட்டேன்!" என்றாள்.

அவ்வீரர் தலைவன் முகத்திலே புன்னகையுடன், "சரி உங்கள் வேலையை நீங்கள் நடத்துங்கள்!" என்று கையில் சாட்டையுடன் நின்றவர்களைப் பார்த்துக் கட்டளையிட்டான்.

(சபதம் தொடரும்)

# வானவில்

மஞ்சள்
வறண்டு போன சருகுகள்

நீலம்
மேகம் தொலைத்த வானம்

வெள்ளை
செத்துப்போன நத்தைக்கூடு

சிகப்பு
கசாப்புக் கடைக்குப் போன
காளையின் இரத்தம்.

பச்சை
பட்டினி உடம்பில் நெளியும் நரம்பு

கருப்பு
உழவனின் வாழ்வு.

மழை மறுத்த கிராமத்தின்
வானவில்.

**சிந்தா**



# இயங்கும்

## மூளை எந்த வயதில் மிக இளமையாக இருக்கும்?

மனித மூளை வாழ்க்கையில் ஐந்து தனித்துவமான கட்டங்களை கடக்கிறது. இதில் 9, 32, 66 மற்றும் 83 வயதில் முக்கியமான மாற்றங்கள் நடக்கின்றன எனக் கூறுகிறார்கள் விஞ்ஞானிகள். 90 வயது வரையிலான சுமார் 4,000 பேரின் மூளை ஸ்கேன் செய்யப்பட்டு, அவர்களின் மூளைச் செல்களுக்கிடையிலான தொடர்புகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.மனித மூளை முப்பது வயதின் தொடக்க காலம் வரை இளமைக் கட்டத்தில் **(adolescent phase)** நீடிக்கிறது. அக்காலகட்டத்தில், மூளை தனது "உச்ச நிலையை" அடைகிறது என கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மனநலக் கோளாறுகளும், டிமென்ஷியாவும் (நினைவாற்றல்) ஏற்படக்கூடிய ஆபத்து வாழ்நாள் முழுவதும் ஏன் மாறுபடுகிறது என்பதைப் புரிந்துகொள்ளவும் இந்த முடிவுகள் உதவும் என்று அவர்கள் கூறுகிறார்கள். புதிய அறிவு மற்றும் அனுபவங்களுக்கு ஏற்ப, மூளை எப்போதும் மாற்றங்களைச் சந்தித்துக் கொண்டே இருக்கிறது.

மூளை வளர்ச்சியில் ஐந்து வெவ்வேறு நிலைகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். புதிய அறிவு மற்றும் அனுபவங்களுக்கு ஏற்ப, மூளை தொடர்ந்து மாற்றங்களைச் சந்தித்துக்கொண்டே இருக்கிறது. ஆனால் இந்த மாற்றம் பிறப்பு முதல் இறப்பு வரை ஒரே மாதிரி, சீரான முறையில் நடைபெறுவது இல்லை என்பதை இந்த ஆய்வு காட்டுகிறது.



மனித மூளை 5 கட்டங்களை கடக்கிறது. அவை,

குழந்தைப் பருவம் — பிறப்பு முதல் ஒன்பது வயது வரை


இளமைப் பருவம் — ஒன்பது முதல் 32 வயது வரை

முதிர்வயது — 32 முதல் 66 வயது வரை

முதுமையின் ஆரம்பக் கட்டம் — 66 முதல் 83 வயது வரை

முதுமையின் பிந்தைய கட்டம் **(Late ageing)** — 83 வயது முதல்

"மூளை வாழ்நாள் முழுவதும் தனது இணைப்புகளை மாற்றிக்கொண்டே இருக்கும். சில இணைப்புகளை வலுப்படுத்தும், சிலவற்றை பலவீனப்படுத்தும். இது ஒரே மாதிரியான, நிலையான முறை அல்ல. இடையிடையே மாற்றங்களும், புதிய கட்டங்களும் ஏற்படுகின்றன" என்று பிபிசியிடம் மருத்துவர் அலெக்சா மௌஸ்லி கூறினார். சிலருக்கு இந்த கட்டங்கள்



# மூளை

**ஜேம்ஸ் கல்லேகர்**


வேகமாகவும், சிலருக்கு தாமதமாகவும் ஏற்படலாம். ஆனால் மாற்றம் ஏற்படும் அந்த குறிப்பிட்ட வயது தரவுகளில் எவ்வளவு தெளிவாகத் தனித்து நின்றது என்பது ஆச்சரியமாக இருந்தது என ஆராய்ச்சியாளர்கள் கூறினர். நேச்சர் கம்யூனிகேஷன்ஸ் இதழில் வெளியிடப்பட்ட ஆய்வுக்காக மேற்கொள்ளப்பட்ட மூளை ஸ்கேன்களின் எண்ணிக்கை காரணமாக, இவை இப்போது தான் வெளிப்பட்டுள்ளன.

மூளையின் ஐந்து கட்டங்கள்


குழந்தைப் பருவம் — இந்த முதல் காலத்தில், மூளை வேகமாக வளர்ந்துகொண்டிருக்கும். அதே சமயம், வாழ்க்கையின் தொடக்கத்தில் உருவான மூளைச் செல்களுக்கு இடையேயான அதிகப்படியான இணைப்புகள் (சினாப்சஸ்) மெலிந்துகொண்டிருக்கும்.இந்தக் கட்டத்தில் மூளையின் செயல்திறன் குறைவாக இருக்கும். அது, கி—விலிருந்து ங—க்கு நேராகச் செல்லாமல், பூங்காவில் சுதந்திரமாக சுற்றித் திரியும் ஒரு குழந்தை போல, தன்னிச்சையாக விருப்பமான இடங்களுக்கு செல்வது போல செயல்படுகிறது.




இளமைப் பருவம் — ஒன்பது வயதிலிருந்து மூளையின் இணைப்புகள் திடீரென



மாறி, மிக வலிமையான செயல்திறன் கொண்ட ஒரு கட்டத்தை அடைகின்றன. “இது ஒரு பெரிய மாற்றம்,” என்று மூளை கட்டங்களுக்கு இடையிலான ஆழமான மாற்றத்தை மருத்துவர் மௌஸ்லி விவரித்து கூறுகிறார். இந்தக் காலத்தில் மனநலக் கோளாறுகள் தொடங்கும் ஆபத்து அதிகமாக இருக்கும். பருவமடைதல் தொடங்கும் நேரத்தில் இளமைப் பருவம் ஆரம்பிப்பது




அசாதாரணமான விஷயமல்ல. ஆனால், இது நாம் நினைத்ததை விட மிகவும் நீண்டகாலமெடுத்து முடிகிறது என்பதைக் காட்டும் புதிய ஆதாரமாக இந்த ஆய்வு அமைகிறது.





முன்பு, இளமைப் பருவம் பதின் பருவ வயதுக்குள்ளேயே முடிவடைகிறது என்று கருதப்பட்டது. பின்னர், நரம்பியல் ஆய்வுகள் அது 20வயதுக்குப் பிறகும் தொடரும் என்று குறிப்பிட்டன. இப்போது, வெளியாகியுள்ள இந்த புதிய ஆய்வு முடிவுகள் இளமைக்காலம் 30 வயதின் தொடக்கம் வரை நீடிக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறது. மூளை நியூரான்களின் வலையமைப்பு மிகவும் திறமையானவையாக மாறும் ஒரே காலம் இதுதான். முப்பது வயதின் தொடக்கத்தில் மூளையின் செயல்பாடு உச்சத்தை அடைகிறது என்பதை பல அளவீடுகள் காட்டுகின்றன என்று மருத்துவர் மௌஸ்லி கூறினார். ஆனால், ஒன்பது வயது முதல் 32 வயது வரை மூளை அதே கட்டத்தில் இருப்பது “மிகவும் ஆர்வமூட்டக்கூடியது” என்றும் அவர் குறிப்பிட்டார்.

முதிர் பருவம் — அடுத்து மூளை அதன் மிக நீண்ட கால கட்டத்தில் நுழைகிறது. இது முப்பது ஆண்டுகள் நீடிக்கும் நிலைத்தன்மை கொண்ட காலமாகும். முன்பு இருந்த வேகமான மாற்றங்களுடன் ஒப்பிடும்போது இந்த காலகட்டத்தில் ஏற்படும் மாற்றம் மெதுவாக இருக்கும். ஆனால் இங்கே, மூளையின் செயல்திறனில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் தலைகீழாக மாறத் தொடங்குகின்றன.

“இது நம்மில் பலர் நேரில் கண்ட அல்லது அனுபவித்த நுண்ணறிவு மற்றும் ஆளுமையின் சமநிலை நிலையுடன் **(plateau)** ஒத்துப்போகிறது,” என்று மருத்துவர் மௌஸ்லி விளக்குகிறார். முதிர்வயது என்பது மூளையின் வளர்ச்சியின் மிக நீண்ட காலம் என்றும், அது மிகக் குறைந்த மாற்றத்திற்கு உள்ளாகும் என்றும் ஆய்வுக் குழு கூறுகிறது

முதுமையின் ஆரம்பகட்டம் — இது 66 வயதில் தொடங்குகிறது, ஆனால் இது திடீர் மற்றும் உடனடி வீழ்ச்சி அல்ல. மாறாக, இந்த நேரத்தில் மூளையில் உள்ள இணைப்புகளின் வடிவங்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. முழு மூளையாக ஒருங்கிணைப்பதற்குப் பதிலாக, மூளை படிப்படியாக ஒன்றிணைந்து செயல்படும் பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. அதாவது, இசைக்குழு உறுப்பினர்கள் தனி நிகழ்ச்சிகளைத் தொடங்குவது போல இது செயல்படுகிறது. மூளையின் நலனை பாதிக்கும் டிமென்ஷியா




மற்றும் உயர் ரத்த அழுத்தம் ஆகியவை இந்த வயதில் தான் வெளிப்படத் தொடங்குகின்றன.

முதுமையின் பிந்தைய கட்டம் — பின்னர், 83 வயதில், நாம் இறுதி கட்டத்திற்குள் நுழைகிறோம். ஸ்கேன் செய்வதற்காக ஆரோக்கியமான மூளைகளை கண்டுபிடிப்பது மிகவும் சவாலாக இருந்ததால், மற்ற குழுக்களை விட குறைவான தரவுகளே இதில் கிடைத்துள்ளன. இந்த சமயத்தில், மூளையில் ஏற்படும் மாற்றங்கள் இதற்கு முந்தைய கட்டத்தைப் போலவே தோன்றுகின்றன, ஆனால் இன்னும் அதிகமாக வெளிப்படுகின்றன.

பருவமடைதல், பிற்காலத்தில் ஏற்படும் உடல்நல சிக்கல்கள் மற்றும் 30 வயதுகளின் தொடக்கத்தில் குழந்தைகளை பெற்றுக்கொள்வது போன்ற “பல முக்கியமான மைல்கல்களுடன் வெவ்வேறு ‘வயதுகள்’ எவ்வளவு நன்றாக பொருந்துகின்றன” என்பது தன்னை மிகவும் ஆச்சர்யப்படுத்தியதாக மருத்துவர் மௌஸ்லி தெரிவித்தார். இந்த ஆய்வு ஆண்களையும் பெண்களையும் தனித்தனியாகப் பார்க்கவில்லை, ஆனால் மாதவிடாய் நிறுத்தம் **(menopause)** எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பன போன்ற கேள்விகள் எழ வாய்ப்புள்ளது.

இந்த ஆய்வு ஆண்களையும் பெண்களையும் தனித்தனியாகப் பார்க்கவில்லை, அதனால் மாதவிடாய் நிறுத்தம் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பன போன்ற கேள்விகள் எழ வாய்ப்புள்ளது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் நரம்பியல் தகவலியல் பேராசிரியரான டங்கன் ஆஸ்டில் இதுகுறித்துப் பேசுகையில், “ பல்வேறு நரம்பியல் வளர்ச்சி நிலைகள், மனநலம் மற்றும் நரம்பியல் நிலைகள் மூளை எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதோடு இணைக்கப்பட்டுள்ளன. உண்மையில், மூளை இணைப்புகளில் உள்ள வேறுபாடுகள் கவனம், மொழி, நினைவு மற்றும் பல்வேறு நடத்தைகளில் ஏற்படும் சிரமங்களை முன்னறிவிக்கின்றன”என்றார்.

எடின்பர்க் பல்கலைக்கழகத்தின் டிஸ்கவரி பிரெயின் சயின்ஸ் மையத்தின் இயக்குனர் பேராசிரியர் தாரா ஸ்பைர்ஸ்—ஜோன்ஸ் இதுகுறித்துப் பேசுகையில், “ வாழ்நாளில் நமது மூளை எவ்வளவு மாறுகிறது என்பதை எடுத்துக்காட்டும் மிகவும் அருமையான ஆய்வு இது”என்கிறார். மூளை வயதாவதைப் பற்றிய நமது புரிதலுடன் இந்த முடிவுகள் “நன்றாகப் பொருந்துகின்றன” என்று கூறிய அவர், ஆனால் “அனைவரும் ஒரே வயதில் இந்த மாற்றங்களை சரியாக எதிர்கொள்ள மாட்டார்கள்” என்றும் குறிப்பிட்டார்.



# மருத்துவத்

## உணவு, உடல் எடை குறைப்பு


நீங்கள் சாப்பிடும் நேரம், எவ்வளவு வேகமாக உணவை விழுங்குகிறீர்கள், எவ்வளவு நன்றாக மென்று சாப்பிடுகிறீர்கள் என்பதுகூட, அந்த உணவிலிருந்து உங்களுக்குக் கிடைக்கும் கலோரி அளவைப் பாதிக்கக்கூடும். ஆரோக்கியமான உடல் எடையைப் பராமரிப்பதற்கான திறவுகோல், நாம் உட்கொள்ளும் கலோரிகளையும் நாம் செலவிடும் கலோரிகளையும் கணக்கிடுவதே ஆகும் என்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து தெரிவிக்கிறது. உள்ளே செல்லும் ஆற்றல் ஸ்வ வெளியேறும் ஆற்றல் எனும் ரீதியில் இது நியாயமாகவே படுகிறது. கேட்பதற்கு எளிமையாக இருக்கிறது, இல்லையா?

ஆனால், இச்சிந்தனை முறை ஒரு முக்கியமான உண்மையைச் சற்றே தவறவிடுகிறது: நாம் உண்ணும் உணவிலுள்ள கலோரிகள் அனைத்தும் ஒரே மாதிரியானவை அல்ல. உண்மையில், நம் உடலுக்குள் ஒரு சிக்கலான உயிரியல் இடைவினை நிகழ்ந்துகொண்டிருக்கிறது; நாம் உண்ணும் உணவின் வகை, அதை நாம் எவ்வளவு விரைவாக உட்கொள்கிறோம் மற்றும் நம் குடலுக்குள் வாழும் நுண்ணுயிரிகளுடன் அந்த உணவு கொள்ளும் இடைவினை ஆகியவையே இதைத் தீர்மானிக்கின்றன.

“இது மிக வேகமாக விரிவடைந்து வரும் ஒரு ஆய்வுத் துறையாகும்,” என்று பிரிட்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரி லண்டனின் ஊட்டச்சத்துப் பேராசிரியர் சாரா பெர்ரி கூறுகிறார். “உணவின் மீது நமது உடலின் எதிர்வினைகள் எவ்வளவு மாறுபட்டவையாக இருக்கின்றன என்பதை நாம் இப்போதுதான் உண்மையில் உணரத் தொடங்கியுள்ளோம்; அதாவது, நான் உண்ணும் ஒரு உணவை எனது உடல் ஒரு விதமாகச் செரித்துக்கொள்ளும். அதே வேளையில், அதே உணவை நீங்கள் உண்ணும்போது உங்கள் உடல் அதை முற்றிலும் மாறுபட்ட ஒரு விதத்தில் செரித்துக்கொள்ளக்கூடும்.”

### உண்ணும் போது என்ன நடக்கும்?

நாம் உண்ணும் உணவு இன்றும் தெளிவாகவே முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கிறது. துரித உணவுகளே ஆதிக்கம் செலுத்தும் ஒரு உணவுமுறையை விட, பசுமையான காய்கறிகள் நிறைந்த உணவுமுறை உங்களுக்குச் சிறந்ததாகவே அமையும். ஆனால், இது மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டிய ஒரே விஷயம் அல்ல. உதாரணமாக, நாம் உண்ணும் உணவை எவ்வளவு சிறப்பாகச் செரிக்கிறோம் என்பதிலும், அதிலிருந்து நமது உடல் எத்தகைய ஊட்டச்சத்துக்களைப் பிரித்தெடுக்கிறது என்பதிலும், உணவு உண்ணும் நேரம் ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது. அதிக உடல் எடையும் உடல் பருமனும் கொண்ட பெண்கள், மொத்தமாக ஒரே அளவிலான கலோரிகளையே உட்கொண்டபோதிலும்,









## மெலிசா ஹோகென்பூம்

தங்கள் கலோரிகளில் பெரும்பகுதியை காலை உணவின்போது எடுத்துக்கொண்டவர்கள், மாலை நேரத்தில் பெரும்பகுதியைச் சாப்பிட்டவர்களுடன் ஒப்பிடுகையில் அதிக எடையைக் குறைத்தனர் என்று ஓர் ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

பிரிட்டனை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் நடத்திய மற்றொரு சிறிய ஆய்வில், ஒரு நாளின் முதல் மற்றும் கடைசி உணவுகளுக்கு இடையிலான கால இடைவெளியைக் குறைப்பதன் மூலம், ஒட்டுமொத்தமாக உட்கொள்ளும் கலோரி அளவைக் குறைக்க முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆரோக்கியத்துடனும், அதே சமயம் சற்று அதிக உடல் எடையுடனும் இருந்த சில பெரியவர்கள், தங்கள் முதல் உணவை வழக்கத்தை விட ஒன்றரை மணி நேரம் தாமதப்படுத்தியும், கடைசி உணவை 90 நிமிடங்கள் முன்னதாகவே உட்கொண்டும் வந்தபோது, வழக்கமான உணவு முறையைப் பின்பற்றிய மற்றொரு குழுவினருக்குக் கிடைத்த அதே அளவு உணவே இவர்களுக்கும் கிடைத்தபோதிலும், இவர்களின் ஆற்றல் உட்கொள்ளல் அளவு குறைந்திருந்ததுடன், உடல் கொழுப்பிலும் குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததாக கண்டறியப்பட்டது. நமது சர்க்காடியன் சுழற்சி( 24 மணிநேர சுழற்சியில் உடல், மனம் மற்றும் நடத்தையில் ஏற்படும் மாற்றங்கள்), நாம் உணவை எவ்வாறு செரித்து வளர்சிதை மாற்றம் செய்கிறோம் என்பதோடு தொடர்புடையவை என்பதால் இது நிகழக்கூடும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள் —இது கால ஊட்டச்சத்து **(chrononutrition)** என்று அழைக்கப்படும் ஒரு வளர்ந்து வரும் ஆராய்ச்சித் துறையாகும்.







முன்னதாகச் சாப்பிடுவதும் உதவக்கூடும்.ஏனெனில்,ஸ்பெயினில் உள்ள ஆராய்ச்சியாளர்கள், பிற்பகல் 3 மணிக்கு மேல் சாப்பிட்டவர்களைக் காட்டிலும், முன்னதாக மதிய உணவு உண்டவர்கள் எளிதாக உடல் எடையைக் குறைத்தார்கள் அல்லது குறைந்த எடையைப் பராமரித்தார்கள் என்று கண்டறிந்துள்ளனர். நாம் சிற்றுண்டி **(snack)** உண்ணும் நேரத்தையும் மறுபரிசீலனை செய்யலாம்; ஏனெனில், இரவு 9 மணிக்கு மேல் சிற்றுண்டி உண்பது அதிக ரத்த சர்க்கரை மற்றும் ‘கெட்ட கொழுப்பின்’ அளவு அதிகரிப்புடன் தொடர்புடையது என்றும், இது உடல் பருமன் மற்றும் இதய நோய்களின் அபாயத்தை அதிகரிக்கக்கூடும் என்றும் ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன.அமெரிக்கா மற்றும் பிரிட்டனில், அன்றாட

ஆற்றலில் சுமார் கால் பகுதி சிற்றுண்டிகளிலிருந்தே கிடைக்கிறது; எனவே, நாம் எதைச் சிற்றுண்டியாக உட்கொள்கிறோம் என்பதையும், எப்போது உட்கொள்கிறோம் என்பதையும் சிந்திப்பது நமது ஆரோக்கியத்தை மேம்படுத்தக்கூடும்.

எவ்வளவு வேகமாக சாப்பிடுகிறோம்?

உணவு என்று வரும்போது, நாம் எப்போது சாப்பிடுகிறோம் என்பது மட்டுமே நாம் சிந்திக்க வேண்டிய விஷயம் அல்ல. நாம் எவ்வளவு வேகமாகச் சாப்பிடுகிறோம் என்பதையும் கவனிப்பதும் பயனளிக்கும்.தங்கள் உணவை அவசர அவசரமாக உண்பவர்கள், பொதுவாக அதிக அளவு உணவை உட்கொள்வதோடு, அதன் விளைவாக அதிக கலோரிகளையும் பெறுகின்றனர். ஓர் ஆய்வில், பங்கேற்பாளர்களுக்கு ஐஸ்கிரீம் வழங்கப்பட்டு, அதனை ஐந்து நிமிடங்களுக்குள் விரைவாக உண்ணுமாறு அல்லது 30 நிமிடங்களுக்கு எடுத்துக்கொண்டு அதன் சுவையை ரசித்து உண்ணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. உணவை மெதுவாக உட்கொண்டபோது, பசியைக் கட்டுப்படுத்தும் குடல் ஹார்மோன்களின் சுரப்பு அதிகரித்தது; இதில் நிலிறி—1 எனும் ‘குளுக்கோகான்—போன்ற பெப்டைடும்‘ அடங்கும், பசியைக் குறைப்பதற்காக, செமாக்ளுடைடு **(semaglutide)** போன்ற நவீன எடை குறைப்பு மருந்துகள் எதனைப் பிரதிபலிக்கின்றனவோ, அந்த ஹார்மோனே இதுவாகும்.

உணவு உண்டதும் ஏற்படும் ஆரம்பகட்ட வயிறு நிரம்பிய உணர்வுக்குக் காரணமான, ‘கோலிசிஸ்டோகைனின்’ **(Cholecystokinin)** எனப்படும் குடல் ஹார்மோனின் செறிவுகள், நமது ரத்த ஓட்டத்தில் போதுமான அளவை எட்ட 15 நிமிடங்கள் ஆகின்றன. நிலிறி—1 மற்றும் ‘பெப்டைட் டைரோசின்—டைரோசின்’ (றிசீசீ) எனப்படும் மற்றொரு ஹார்மோன் ஆகியவை தங்கள் உச்ச அளவை எட்டி, நமது பசியைக் குறைக்க 30 முதல் 60 நிமிடங்கள் ஆகின்றன. பின்னர், இந்த ஹார்மோன்களின் அளவுகள் மூன்று முதல் ஐந்து மணி நேரம் வரை உயர்ந்த நிலையிலேயே நீடிக்கின்றன. உணவருந்திய உடனேயே நம்மில் சிலர் இனிப்புப் பண்டங்களைச் சாப்பிட விரும்புவதற்கும், ஆனால் சிறிது நேரம் காத்திருந்தால் அந்த ஆசை மறைந்து போவதற்கும் இதுவே காரணமாக அமைகிறது. நாம் நிதானமாகச் சாப்பிடுவது, நீண்ட நேரம் வயிறு நிறைந்த உணர்வைத் தர உதவுகிறது. ஓர் ஆய்வில், மெதுவாகச் சாப்பிட்ட பங்கேற்பாளர்கள் தாங்கள் உண்டதை நன்றாக நினைவில் வைத்திருந்ததோடு, பின்னர் குறைவாகவே சாப்பிட்டனர். அதன் விளைவாக,வயிறு நிறைந்த உணர்வு மற்றும் வெகுமதி தொடர்பான அவர்களின் மூளையின் பகுதிகளில் செயல்பாடு காணப்பட்டது.



மெதுவாக உண்பது, உணவுக்கு உங்கள் ரத்தச் சர்க்கரை எவ்வாறு எதிர்வினையாற்றுகிறது என்பதையும் மாற்றக்கூடும். இது நிரூபிக்கப்பட்ட ஓர் ஆய்வில் பங்கேற்றவர்கள், ஒரு நாளில் ஒரு வேளை உணவை 10 நிமிடங்களுக்குள்ளும், மறுநாளில் அதே உணவை 20 நிமிடங்களுக்கும் மேலான நேரத்திலும் உட்கொண்டனர். வேகமாக உண்டபோது, பங்கேற்பாளர்களின் ரத்தச் சர்க்கரை அளவு அதிகரித்தது; காலப்போக்கில், இது வகை 2 நீரிழிவு நோய் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கக்கூடும்.

உணவு கட்டமைப்பு

நாம் உணவை உண்ணும்போது, நாம் உட்கிரகிக்கும் கலோரிகளின் அளவு, நம் முன்னால் உள்ள உணவின் அமைப்பையே சார்ந்திருக்கிறது; ஏனெனில், அவ்வுணவிலிருந்து ஊட்டச்சத்துகள் எவ்வளவு எளிதாக வெளிப்படுகின்றன என்பதை இந்த அமைப்பே தீர்மானிக்கிறது.

பாதாம் பருப்புகளை எடுத்துக்கொள்வோம். ஒரு கைப்பிடி அளவு பாதாம் பருப்பில் சுமார் 160—170 கலோரிகள் உள்ளன. இவற்றில் எவ்வளவு கலோரிகளை நாம் உட்கொள்கிறோம் என்பது, நாம் அவற்றை உண்ணும் விதத்தைப் பொறுத்தது. நம்மில் சிலர் முழு அளவையும் உட்கொள்ளக்கூடும், அதேசமயம் மற்றவர்கள் அதே அளவு சாப்பிட்டாலும் குறைவான கலோரிகளையே உட்கொள்வார்கள் — இது அனைத்தும் நாம் பாதாம் பருப்புகளை மெல்லும் விதத்தையும், அவை முன்பே எவ்வாறு பதப்படுத்தப்பட்டன என்பதையும் பொறுத்தது. நாம் பாதாம் பருப்புகளைக் கவனமாக மென்றால், அனைத்து கலோரிகளையும் உட்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம், ஆனால் அவற்றை அரைகுறையாக மென்றால், நம்மால் அனைத்து கலோரிகளையும் உட்கொள்ள முடியாது என்கிறார் பெர்ரி. முழு பாதாம் பருப்புகளை விட அரைத்த பாதாம் பருப்புகளிலிருந்து நமது உடல்கள் அதிக கலோரிகளைப் பிரித்தெடுக்கும்.

அதேபோல், உதாரணமாக, ஒரு முழு ஆப்பிளை உண்பதைவிட அரைத்த ஆப்பிள் கூழை நாம் மிக விரைவாக உண்ண முடியும்; இது நாம் எவ்வளவு வயிறு நிறைந்ததாக உணர்கிறோம் என்பதையும் மாற்றியமைக்கிறது. அதிகப்படியாகப் பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்ணும்போது நாம் ஏன் அதிக கலோரிகளையும் உட்கொள்ள




முனைகிறோம் என்பதையும், இது எவ்வாறு உடல் எடை அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது என்பதையும் விளக்குவதாக பெர்ரி கூறுகிறார். "உணவின் கட்டமைப்பை மாற்றுவது, உணவின் தன்மையையும் மாற்றியமைக்கிறது. அந்த உணவு எவ்வளவு விரைவாக வளர்சிதை மாற்றம் செய்யப்படுகிறது, எங்கு வளர்சிதை மாற்றம் அடைகிறது மற்றும் ஊட்டச்சத்துக்கள் எங்கு உறிஞ்சப்படுகின்றன ஆகிய செயல்முறைகளும் மாற்றமடைகின்றன."

நுண்ணுயிர் மாறுபாடு

எனினும், நாம் உணவைச் செரிக்கும் விதத்தில் ஒவ்வொரு நபருக்கும் கணிசமான வேறுபாடுகள் இருப்பதாக ஆய்வுகள் காட்டுவதை நினைவில் கொள்வதும் முக்கியம். 2015—ஆம் ஆண்டில், ஒரே வகையான உணவை உட்கொள்ளும்போதுகூட, ஒவ்வொருவருக்கும் இடையிலான ரத்த குளுக்கோஸ் அளவுகள் பெருமளவில் மாறுபடுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். உதாரணமாக, ரத்த சர்க்கரை அளவு சிலருக்குத் தக்காளியை உட்கொள்ளும்போது அதிகமாகவும், வேறு சிலருக்கு வாழைப்பழத்தை உட்கொள்ளும்போது அதிகமாகவும் உயர்கிறது.

இதற்குக் காரணம் நமது குடலில் வாழும் நுண்ணுயிரிகளாக **(microbiota)** இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். நமது குடலில் உள்ள நுண்ணுயிரிகளின் இனங்களும் சமநிலையும் ஒவ்வொருவருக்கும் மாறுபடுகின்றன. இதன் காரணமாக, நாம் உண்ணும் உணவையும் அவை வெவ்வேறு விதமாகச் செரிமானம் செய்கின்றன. மற்றவர்களை விடச் சிலரால் ஏன் ஆரோக்கியமான உடல் எடையை எளிதாகப் பராமரிக்க முடிகிறது என்பதை இது ஓரளவுக்கு விளக்குகிறது.

ஒரே மாதிரியான இரட்டையர்கள்கூட, ஒரே உணவுக்கு மாறுபட்ட வளர்சிதை மாற்ற எதிர்வினைகளைக் கொண்டிருக்கக்கூடும். 1,000—க்கும் மேற்பட்ட இரட்டையர்கள் மற்றும் உறவினரல்லாத பெரியவர்களை உள்ளடக்கிய சமீபத்திய ஆய்வில், ஒரே உணவை உட்கொண்ட பிறகு, அந்த இரட்டையர்களுக்கு இடையிலான ரத்தக் கொழுப்புகள், குளுக்கோஸ் மற்றும் இன்சுலின் அளவுகளில் பரவலான மாறுபாடுகள் காணப்பட்டன. சில பங்கேற்பாளர்களுக்கு ரத்தச் சர்க்கரை மற்றும் இன்சுலின் அளவுகளில் திடீர் உயர்வுகளும், மற்றவர்களுக்கு மிதமான மாற்றங்களும் தென்பட்டன. உணவுக்கு நாம் எதிர்வினையாற்றும் விதத்தில் காணப்படும் இந்த மாறுபாடு, தனிப்பட்ட ஊட்டச்சத்து முறைகளுக்கான வழியை அமைத்துத் தரக்கூடும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.




இருப்பினும், பெர்ரி விளக்குவது போல, நாம் அனைவரும் சர்க்கரை, உப்பு மற்றும் கொழுப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அதிக நார்ச்சத்து உள்ள உணவுகளை உண்ண வேண்டும். ஆனால், நமது எதிர்வினைகள் நபருக்கு நபர் மாறுபடும் என்பதை அறிந்துகொள்வது, நமது குடல் நுண்ணுயிரிகள் உணவை எவ்வாறு வளர்சிதை மாற்றம் செய்கின்றன என்பதைக் கருத்தில் கொள்வது எவ்வளவு முக்கியம் என்பதைக் காட்டுவதோடு, நமது நுண்ணுயிரிகளுக்கு ஊட்டமளிக்கும் உணவுகளை ஏராளமாக உண்ண வேண்டும் என்பதையும் நமக்கு நினைவூட்டுகிறது.

இதைச் செய்வதற்கு, நாம் பல்வேறு வகையான ஆரோக்கியமான பழங்கள் மற்றும் காய்கறிகளை உள்ளடக்கிய ஒரு மாறுபட்ட உணவுமுறையைப் பின்பற்ற வேண்டும்; அத்துடன், நாம் உட்கொள்ளும் ஆரோக்கியமற்ற சிற்றுண்டிகளின் அளவையும் கட்டுப்படுத்த வேண்டும்.

பொறுப்பு துறப்பு: இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். அய்தமிழ் இந்த தகவல்களுக்கு பொறுப்பேற்காது.)



# முயற்சி

**விடா முயற்சியுடன் தன்னம்பிக்கையோடு உழைத்தால்...**

வெற்றியை விரும்பாத மனிதரில்லை. எந்த ஒரு மனிதனாலும் தான் வெற்றிபெற வேண்டும் என்றுதான் நினைப்பான். ஆனால் பலரும் அதற்கான வழிகளை தேடுவதில்லை. குறிக்கோள் பற்றி சொல்லும் போது குறிக்கோளுக்கு செலுத்தும் கவனத்தை அதை அடைய மேற்கொள்ளும் பாதைக்கும் செலுத்துவதில் தான் வெற்றியின் ரகசியம் அடங்கியுள்ளது என்கிறார் சுவாமி விவேகானந்தர். அப்பாதை எது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.


எந்தவொரு மனிதனாக இருந்தாலும் முதலில் எதை பற்றியாவது சிந்திக்கும் திறனை வளர்த்து கொள்ள வேண்டும். சிந்திக்கும் திறனை அதிகரிக்கும் போது தான் நாம் எதையாவது அடைய வேண்டும் அல்லது சாதிக்க வேண்டும் என்னும் எண்ணம் வெளிப்படும். படிப்பில் மந்தமாக இருந்து பள்ளியில் இருந்து விலக்கப்பட்ட புகழ்பெற்ற அறிவியல் அறிஞர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் தனியாக இருந்த நேரத்தில் பலமணி நேரம் கற்பனையில் சூழ்ந்து இருந்ததே தன் வெற்றிக்கு காரணம் என்று குறிப்பிடுகிறார்.

வாழ்க்கைக்கு ஓர் இலக்கு வேண்டும் என்பதை தீர்மானித்து வெற்றி கண்டவர் நெல்சன் மண்டேலா. இவர் கருப்பின மக்களுக்கு விடுதலை வேண்டும் என்ற ஒரே இலக்கோடு பேராடி வெற்றி கண்டார். நாமும் சிந்திப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் வாழ்க்கையில் ஓர் லட்சியத்தோடு பயணித்தால் எந்த தடைகளையும் தாண்டி வெற்றியை தட்டி செல்ல முடியும். லட்சியம் இல்லா வாழ்வு—துடுப்பு இல்லாத படகு போன்றதாகும்.



வாழ்வின் லட்சியத்தை நோக்கி பயணிக்கும் போது படிப்பானாலும் சரி, வேலையானாலும் சரி எத்தனை இடர்கள் வந்தாலும் தன்னம்பிக்கையோடு செயல்பட வேண்டும். யானைக்கு தும்பிக்கை மனிதனுக்கு நம்பிக்கை. பணமோ, வயதோ, படிப்போ,ஊனமோ எதுவும் வெற்றிக்கு தடையில்லை என நம்ப வேண்டும். தன்னை சுற்றியுள்ளவர்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணத்தை கைவிட வேண்டும்.

நல்ல மதிப்பீடுகளை வளர்த்து கொள்வதும் ஒருவகையில் நம் வெற்றிக்கு ஒரு காரணமாக அமைவதுண்டு. நமக்குள் இருக்கும் ஆற்றல் வெளியில் தெரியும் வகையில் நாம் நல்ல மதிப்பீடுகளை கற்றுக்கொள்ள வேண்டும். வெளியில் இருந்து கற்றுத்தருவதைவிட தம் ஆன்மாவை தீமைகள் எதுவும் அணுகாமல் தூய்மையாக வைத்திருப்பதும் ஒரு வகையில் வெற்றியின் ரகசியம்தான். விடா முயற்சி விஸ்வரூப வெற்றி என்பது போல் நாம் எடுத்த காரியத்தில் வெற்றிபெற வேண்டுமென்றால் விடா முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். நாம் நினைக்கும் செயலில் வெற்றி காணும் வரை விடா முயற்சியுடன் செயல்பட வேண்டும்.





# திருவினை

இந்திரா கணபதி

சிலந்தி வரை பின்னுவது போல் எத்தனையோ மாற்றுத்திறனாளிகள் கூட தங்களுடைய விடா முயற்சியாலும் கடின உழைப்பாலும் சாதனை படைத்து கொண்டிருப்பதை நாம் தினந்தோறும் பார்த்து கொண்டும், கேட்டு கொண்டும் இருக்கிறோம்.

உழைப்புக்கும் உயர்வுக்கும் இலக்கணம் என்றால் அது தாமஸ் ஆல்வா எடிசன் தான். உழைப்பில் தன்னை கரைத்து சமூகத்திற்கு பலவற்றை கண்டுபிடித்து கொடுத்தவர். முப்பத்தி எழு வயதில் தாமஸ் ஆல்வா எடிசன் அமெரிக்காவின் பணக்காரர்களில் ஒருவராகவும், 1929—ல் அமெரிக்காவின் உயர்ந்த பத்து மனிதர்களின் முதல் மனிதராகவும் திகழ்ந்தார். இத்தகைய உழைப்பு நம்மிடம் இருந்தால் வெற்றி நிச்சயம்.

கற்களில் உள்ளிருக்கும் தீப்பொறி பாறையை வேகத்தோடு தரையில் தேய்ப்பதால் உண்டாகிறது. அதுபோல் நம் வாழ்வில் ஏற்படும் இன்னல்கள் மனிதனுக்குள்ளே இருக்கும் ஆற்றலை வெளிப்படுத்தி அவனை அழகுப்படுத்துகிறது. ஆர்வத்தோடு செய்யும் செயலே நம் வாழ்க்கையை மிகுந்த தைரியத்துடனும் மனவலிமையுடனும் நாம் எதிர்கொள்ள உதவும். எந்த செயலை தொடங்கும் போதும் மிகுந்த ஆர்வத்தோடு தொடங்குங்கள். செயல்களில் உள்ள ஆர்வம் உங்களை முன்னிலைப்படுத்தும். கற்றுக்கொள்வதை சுலபமாக்கும். போட்டியில் கலந்து கொள்வது என்பது பாதி வெற்றிக்கு சமம். எப்போதும் உற்சாகம், ஊக்கம், நம்பிக்கை வெற்றி போன்றவைகளையே பேசுங்கள். தோல்வி போன்ற வார்த்தைகளே நினைத்து கூடப்பார்க்காதீர்கள்.




இந்த உலகமே நம்மீது நம்பிக்கை வைத்திருக்கிறது. ஆனால் நாம் தாம் நம்மீது நம்பிக்கை இல்லாமல் வாழ்ந்து வருகிறோம் என்பது தான் கொடுமை. எந்த ஒரு செயலையும் செய்ய ஆரம்பிக்கும் முன் நம்பிக்கையுடன் ஆரம்பியுங்கள், நம்பிக்கையுடன் தொடங்குங்கள், நம்பிக்கையுமன் முடியுங்கள், நம்பிக்கை குணமாக்கும், நம்பிக்கை நம்மை செம்மைப்படுத்தும், நம்பிக்கை இப்பொழுதே வெற்றி தரும். நீங்கள் மிகவும் திருப்தியடைந்த ஒரு நாளை பாருங்கள். நீங்கள் செயல் எதுவும் செய்யாமல் சுற்றி திரிந்த நாளாக அது இருக்காது. மாறாக நீங்கள் பல செயல்கள் செய்ய வேண்டியிருந்து அந்த செயல்கள் அனைத்தையும் திருப்தியுடன் செய்து முடித்திருந்த நாளாகவே அது அமைந்திருக்கும். முன்பு வானமே எல்லை என்று கூறுவார்கள். உண்மையில் வானம்கூட எல்லையில்லை.




நம் செயல்பாடு வெற்றிகரமாக அமைவதற்கு நம் மனநிலைதான் காரணம். உற்சாகமான மனநிலையில் இருக்கும்போது, மிகவும் கடினமான

வேலை கூட எளிதாகத் தெரிகிறது. சற்று உற்சாகம் குறைந்த நிலையில் சாதாரணமான வேலையில் கூடக் குழப்பத்தை ஏற்படுத்தி விடுகிறோம்.

மாணவர்கள் நன்றாக முயற்சியெடுத்துப் படித்த சில விஷயங்களைத் தேர்வின்போது மறந்து விடுகிறார்கள். சிலருக்கு வினாத்தாளைப் பார்த்த உடன் மூளை ஏதோ சூன்யமாகிவிட்டது போலவும், இருண்டு போவது போலவும் ஆகிவிடுகிறது. அங்கு அந்த நிலையைச் சரிசெய்ய அதிக நேரமும் கிடைக்காது. உடனடியாக சகஜ நிலைக்குத் திரும்பியாக வேண்டும். அதற்கு நீங்கள் எந்த மனநிலையை அடைய விரும்புகிறீர்களோ அதைப் பற்றி சிறிது யோசிக்க வேண்டும் அந்த நினைப்பில் சற்றுநேரம் அப்படியே ஊறிவிடுங்கள். முன்பு உங்கள் வாழ்க்கையில் அதுபோன்ற உணர்வு உங்களுக்கு எப்போது ஏற்பட்டது என்று நினைவுபடுத்திப் பாருங்கள். அப்போது நடந்த அந்த நிகழ்வுகளை மீண்டும் மனதில் கொண்டு வாருங்கள்.




எல்லா புலன்களையும் பயன்படுத்தி அதே உணர்வைக்கொண்டு வாருங்கள். உதாரணத்திற்கு உங்களுக்கு ஒரு உற்சாகமான மனநிலையை ஏற்படுத்த விரும்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அதுபோன்ற ஒருநிலை உங்களுக்கு சில நாள்களுக்கு முன்பாக ஏற்பட்டிருக்கலாம். ஒரு விருது வழங்கப்பட்டிருக்கலாம். அதை அப்படியே மனதில் கொண்டு வந்து நினைத்துப் பாருங்கள். அந்த விருது கோப்பை அப்படியே கண்முன் நிற்கவேண்டும். உங்களுக்கு அணிவித்த மாலையின் மணமும், தலைவர் உங்களுடன் கைகுலுக்கியதும், அனைத்தையும் அப்படியே கொண்டுவாருங்கள். உங்களுக்குள் நீங்கள் அப்போது அடைத்த உற்சாக மனநிலை இப்போதும் வரத்துவங்கும்.




மெல்ல மெல்ல அந்த உயர்வின் உச்சகட்டத்தை அடையவேண்டும். முழுக்க உற்சாகமானதும் உங்கள் உடல் நிலையில் சில மாற்றங்கள் ஏற்படும். மூச்சு வாங்கும் கதியில் மாற்றம், மயிர் சிலிர்ந்தெழுவது என்று சிறிது நேரம் இந்த நிலையை உணர்ந்த பிறகு, அந்த நிலையிலிருந்து விடுபட்டு வந்துவிடுங்கள்.

இது ஒரு தற்காலிக மனநிலைதான் என்றாலும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நம் உடலுக்கும் மனதிற்கும் உள்ள இந்த தொடர்பை நாம் பயன்படுத்திக் கொண்டு மனம் சந்தோசமாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற திருவள்ளுவரின் வாக்குக்கு இணங்க கவலையாக இருக்கும்போது சற்றே நிமிர்ந்து நின்று, தோள்களை விரித்து, தாடையை உயர்த்தி, கால்களை ஊன்றி உறுதியாக நின்று பாருங்கள். கண்டிப்பாக மனநிலை மாறி மெல்ல சகஜ நிலைக்குத் திரும்பி செயல்படும் திறனை பெற்றுவிடுவீர்கள்.

எப்போதும் உற்சாகம், ஊக்கம், நம்பிக்கை வெற்றி போன்றவகைளையே பேசுங்கள். செயல்களில் உள்ள ஆர்வம் உங்களை முன்னிலைப்படுத்தும்

தேடலே வாழ்க்கை அந்த தேடலை மாணவர்களாகிய நாம் தாம் அதை தேடிக் கண்டு கொள்ள வேண்டும். ஆன்மிக வாழ்வில் வெற்றியடைய வேண்டும் என்றால் உட்கார்ந்து கண்களை மூடி உள்ளே தேட வேண்டும். ஒவ்வொரு செயலின் உள்ளேயும் வெற்றியின் விதை இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டு மிகுந்த முனைப்புடன் உழைத்தால் இப்போதே வெற்றி சாத்தியமான ஒன்றுதான். விடா முயற்சியுடன் தன்னம்பிக்கையோடு உழைத்தால் எந்த மனிதனாக இருந்தாலும் சரி ஆணோ, பெண்ணோ, எந்த வயதிலும் சாதனை புரிந்து வெற்றிவாகை சூடி சரித்திரத்தில் இடம் பிடிக்கலாம்.

வெற்றி என்பது நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையின் அடித்தளமாகும். விடா முயற்சியே வெற்றியை தரும்.



# தேடல்கள்

கார்த்திகா

முன்பொரு நாள்
நான் ரசித்துக் கேட்ட பாடலை
இப்போது யாரோ சிலர்
முணுமுணுக்கிறார்கள்...

முன்பொரு நாள்
நான் ரசித்த கவிதையை
இப்போது யாரோ ஒருவர்
சிலாகிக்கிறார்கள்...

முன்பொரு நாள்
நான் குளித்த
நிலவினில் இப்போது
யாரோ சிலர்
குளிக்கிறார்கள்...

முன்பொரு நாள்
நான் நனைந்த
மழையினில் இப்போது
யாரோ சிலர் நனைகிறார்கள்...

முன்பொரு நாள்
என்னோடு உரையாடிய
தூரிகைகளோடு
இப்போது யாரோ சிலர்
வண்ணம் தூவுகிறார்கள்...

என்றாலும் என் வலியெல்லாம்.,
தனித்திருக்கிறேன்
என்பதால் அல்ல...
தவித்திருக்கிறேன் என்பதை
இன்னும்கூட
உணராதவர்களுக்காகவே
தனித்திருக்கிறேன் என்பதே...



# தமிழ் 2026

**நற்றமிழரின் நாடித்துடிப்பு**

## JANUARY





## FEBRUARY




## MARCH




## MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | 10 | 11 | 12 |
| | | | | 17 | 18 | 19 |
| | | | | 24 | 25 | 26 |
| | | | | 31 | | |





## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email: editor@ithamil.com


HAPPY
Anniversary
CELEBRATION
VARSHA
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA
17
YEARS
THANK
YOU